E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

மார்ச் 2021
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



அருட்செல்வரின் 98-வது பிறந்த தினத்தில்
அண்ணலை வணங்குகிறோம்...

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



KCLAS KUMARAGURU

குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

KCT BUSINESS SCHOOL

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

KUMARAGURU institute of agriculture

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate · Incubate · Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE

போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



நான்... நான்...!

அருட்செல்வர் ஏற்றிவைத்த அகல் நான்
அருட்செல்வர் பொன்னடியின் துகள் நான்!

அருட்செல்வக் கடல்தனின் அலை நான்
அருட்செல்வ விருட்சத்தின் இலை நான்!

அருட்செல்வ நிழல்பழுத்த கனி நான்
அருட்செல்வ ஞானத்தேர் மணி நான்!

அருட்செல்வ ஆகாயத்து முகில் நான்
அருட்செல்வச் சிந்தனைக்கு நகல் நான்!

அருட்செல்வர் விளைவித்த குறுவை நான்
அருட்செல்வக் கானகத்துப் பறவை நான்!

அருட்செல்வச் ஜோதிதனின் பிம்பம் நான்
அருட்செல்வக் கொடிபறக்கும் கம்பம் நான்!

- பெ. சிதம்பரநாதன்

சுரங்கம்

நுண்ணீர்ப் பாசனம் (Micro Irrigation) என்பது இந்தியாவிற்கு மிகவும் அவசரமும் அவசியமும் ஆகும். இதனைப் பற்றி பிப்ரவரி 10-ஆம் தேதி வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ஆர். சித்ராதேவி தெரிவித்துள்ள கருத்து கவனிக்கத் தக்கது.

'சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைக்க 100 சதவிகிதமும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவிகிதமும் மானியம் வழங்கப்படுகிறது. பாசனத்திற்குத் தேவையான குழாய், குழி தோண்டுதல் ஆகிய அனைத்துச் செலவும் இதில் அடங்கும். அனைத்துக்கும் அரசே செலவு செய்கிறது.

இந்த நிதியாண்டில் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் இதனைச் செய்ய ரூபாய் 45 கோடி நிதி, கோவை மாவட்டத்திற்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களுக்கும் இதேபோல ஒதுக்கீடுகள் உள்ளன.

2021-இல் நுண்ணீர்ப் பாசனத்திற்கு மானியம் கொடுத்தும்கூட விவசாயிகள் ஆர்வத்தோடு முன்வருவதாக இல்லை போலும். அதனால்தான், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டின் நிரந்தரத் தண்ணீர்ப் பற்றாக்குறையை மனதில் கொண்டு ஆற்றுப் பாசனத்தைச் சாராமல், சொட்டுநீர்ப் பாசனத்திற்குத் தமிழ்நாட்டு விவசாயத்தை மாற்ற வேண்டும் என்று அருட்செல்வர் குரல் கொடுத்தார். அதன் பலன் என்ன என்பதை இம்மாதச் 'சுரங்கம்' பகுதியில் வெளியாகியுள்ள அவருடைய இக்கட்டுரையை வாசித்து அறிந்து கொள்ளலாம்.

– இ.ஆர்.

வீழ்ந்த விவசாயம் விருத்தியடைய...



டாக்டர் நா. மகாலிங்கம்

விவசாய நாடான நமது நாட்டில், தொழில்துறை வளர்ச்சி ஏறக்குறைய 8 சதமாக இருக்கும் போது, விவசாயத் துறை வளர்ச்சி 1.82 சத மாக வீழ்ச்சி யடைந்து விட்டது. அதனை 4 சதமாக நடப்பு 12–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உயர்த்தப் போவதாக பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் தொடர்ந்து கூறி வருகிறார்.

சுதந்திரமடைந்து 65 ஆண்டுகளாகியும் இன்னும் 27 கோடிப்பேர் மூன்று வேளை உணவு கிடைக்காத வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளனர். விவசாய தேசத்தில் விவசாயமும் வீழ்ச்சியில் உள்ளது. வறுமையும் ஒழியவில்லை.

இசுரேல் தேசம் விவசாய நாடல்ல. பாலைவனப் பகுதியில் உள்ள பிரதேசம். 1947 வரை அந்த தேசம் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதி. 1948–இல் விடுதலை பெற்று 64 ஆண்டுகளில் விவசாயத்தில் புரட்சி செய்து முன்னணி விவசாய தேசமாக விளங்குகிறது. பாசன வசதியில்லாத இசுரேலின் பாசன முறை சொட்டுநீர்ப் பாசனம்தான்.


விவசாயம் வேறு, தொழில் வேறு என்ற நிலையில்தான் நாம் இருந்து வந்தோம். உண்மையில் விவசாயமே தொழில்மயமாகியுள்ளது. விவசாயத்தில் முன்பு கமலை மூலம் தண்ணீர் இறைத்தோம். இப்போது மின்சாரத்தால் இயங்குகிற பம்ப்செட் வந்து விட்டது. விவசாய பூமிகளில் எருதுகள் உழுததை டிராக்டர்கள் செய்கின்றன. கதிரடிக்கும் எந்திரங்களும், அறுவடை எந்திரங்களும் வந்து விட்டன. இவ்வாறு விவசாயமே தொழில்மயமாகி விட்டது.

இந்திய தேசம் அடிப்படையில் விவசாய நாடு. 1.1.2013–இல் நடைபெற்ற 12

ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தை இறுதி செய்வதற்கான தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில், மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் அவர்கள், வேளாண்மையை 58 சதம் மக்கள் சார்ந்திருப்பதாகத் தெரிவித்தார். 58 சதம் என்றால் 70 கோடிப்பேர்.

இந்த 70 கோடி மக்களும் டெல்லி, மும்பை முதலிய 12 மாநகரங்களிலோ அல்லது பல்வேறு மாநிலங்களின் சுமார் 1500 நகரங்களிலோ வாழ்பவர்கள் அல்ல. 6 லட்சம் இந்தியக் கிராமங்களில் வாழ்கிறவர்கள். அவர்களின் பிரதானத் தொழில் விவசாயம்தான்.

இதனை 1940களிலேயே 75 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு விஞ்ஞான உண்மையைப் போல் மகாத்மா காந்தி சரியாகக் கண்டுபிடித்து இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது என்றார்.



இஸ்ரேல் நாட்டு
சொட்டுநீர்ப் பாசனம்

இந்தியக் கிராமங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், ஆண்டுக்கு 120 நாட்களுக்கு மட்டுமே வேலை கிடைத்திடும் விவசாயிகளுக்கு, மீதி 245 நாட்களுக்கு வேலை இல்லை. அதைத் தரத் திட்டமிட வேண்டும்.

அதற்காகத்தான் கிராமக் கைத் தொழில்களையும் கதர் நூற்பையும் காந்திஜி அன்று அறிமுகப்படுத்தினார். தொழில்களை எந்திரமயமாக்குவதை எதிர்த்த அவரது நோக்கமே, மிகு உற்பத்திக்குப் (Mass Production) பதிலாக, வெகுஜனங்களுக்கு வேலை தர வேண்டும் (Production by Masses) என்பதுதான்.

விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு 70 சதவிகித மக்கள் முன்பு வாழ்க்கை நடத்தினார்கள். இத்தகைய நவீனச் சூழலில் விவசாயம் 70 சதவிகித மக்களுக்கு வேலை தரும் நிலையில் இல்லை. 50 சதவிகித மக்களை விவசாயத்திலும் மீதி 50 சதவிகிதத்தினரை வர்த்தகம், தொழில், சேவைத் துறைகளுக்கும் மடை மாற்றம் செய்தால் சமநிலை ஏற்படும்.

அடுத்து கவனிக்க வேண்டிய ஒரு விஷயம், விளைபொருள்களின் விலை எப்படி வீழ்ச்சி அடைந்தது என்பதை ஓர் ஒப்பீடு மூலம் பார்க்கலாம்.

1935–இல் ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ. 15 மட்டுமே. அப்போது 1 மூட்டை அரிசியின் விலை ரூ. 10 மட்டுமே. 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1945–இல் 1 பவுன் தங்கம் ரூ. 50. ஒரு மூட்டை அரிசி ரூ. 50. இரண்டும் சமமாகவே இருந்தன.

அடுத்த பத்தாண்டுகளுக்குப் பிறகு 1960–களில் 1 பவுன் தங்கம் ரூ. 60 என்றும் 1 மூட்டை அரிசி ரூ. 50 என்று சமநிலை மாறியது. அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1 பவுன் தங்கம் ரூ. 200 என்றும் 1 மூட்டை அரிசி ரூ. 100 என்றும் வித்தியாசம் அதிகரித்தது.

40 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது 1 பவுன் தங்கத்தின் விலை ரூ. 23 ஆயிரம். அரிசி விலையோ 1 மூட்டை ரூ. 3 ஆயிரம் மட்டுமே. தங்கத்தின் விலை ஏறக்குறைய 8 மடங்கு அதிகரித்து விட்டது. இதைச் சரி செய்யும் ஒரு சூத்திரத்தைக் கண்டு பிடித்தாக வேண்டும்.

அதுமட்டுமல்ல. விவசாயத்தை வருமானம் தரும் தொழிலாகவும் மாற்ற வேண்டும். முதலில் விவசாயத்திற்கு அனைத்திந்தியச் சந்தையை உருவாக்க வேண்டும். இதை நான் நீண்ட நாட்களாகச் சொல்லி வருகிறேன்.

இப்போதுதான் 4.2.2014–இல்



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் அமெரிக்க இல்லினாய்ஸ் பல் கலைக் கழகமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (M.O.U) செய்து உலக அள வில் இந்தியாவுக்கான வேளாண் சந்தை ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளன.


விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களையும் மதிப்பூட்டப் பட்ட வேளாண் பொருள்களையும் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்தைப் படுத்தி விவசாயிகளுக்கு அதிக வரு வாய் கிடைக்கத் திட்டமிடப்பட்ட இம்முயற்சி, காலம் கடந்த முயற்சியா னாலும் வரவேற்கத்தக்கதாகும்.

விவசாயிகளுக்கு வங்கிகள் தாராள மாகக் கடன் கொடுக்கும் கொள்கை உருவாக்கப்பட வேண்டும். கடன் மட்டு மல்ல, விவசாய எந்திரங்களை மலி வாகக் கொடுக்க வேண்டும். 1970-களில் என்ன விலையில் எந்திரங்கள் இருந் தனவோ, அதே விலையை இப்போதும் பராமரிக்க வேண்டும்.

அமெரிக்காவில் விவசாய விளை பொருள்களுக்கு மானியம் தரப்படு கிறது. அதனால் அவர்கள் குறைந்த விலைக்குத் தங்கள் விளை பொருள் களை விற்றாலும் நஷ்டமடைவதில்லை.


அரசின் அத்தகைய மானியங்களுக் குப் பதிலாக, இது போன்றவற்றைச் செய் தாலே நமது விவசாயம் விருத்தியடையும்.

12-ஆவது ஐந்தாண்டுத் திட்டம் அமல்படுத்தப்படுகிற இன்றைய காலகட்டத்தில் கூட, பிரதமர் அடைய விரும்புகிற விவசாய வளர்ச்சி 4 சதவிகிதம்தான். உண் மையில் நாம் இப்போது வெறும் 2 சதவிகிதம்தான் விவசாய வளர்ச்சி பெற்றுள்ளோம்.


மன்மோகன்சிங்

இந்தியாவில் தண்ணீர்ப் பற்றாக் குறையுள்ள மாநிலங்கள் இரண்டுதான். தமிழ்நாட்டின் தலைவிதி, தமிழகத்திற் கென்று உரிமையுள்ள ஆறுகள் தாமிர பரணியும் வைகையும் மட்டும்தான்.

அதிகப் பாசன வசதியைத் தருகிற காவிரியாற்றில் உபரித் தண்ணீர் வந் தால்தான் கர்நாடகம் அதனை நமக்குத் தர முன் வருகிறது. இல்லையெனில் நமக்கான உரிமைத் தண்ணீ



ருக் காகவும் நாம் போராட வேண்டி யிருக்கிறது.


முல்லைப்பெரியாறு அணை நீரை 5 அடிக்கு உயர்த்துவதற்குத் தமிழக அரசு கோரிக்கை வைத்தால், கேரள அரசு அணையை இடிப்பதற்குக் கோரிக்கை வைக்கிறது. பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு தடுப்பணை கட்டினால் வட ஆர்க்காடு மாவட்டம் வறட்சி மாவட்டமாகி விடும்.

சாகுபடிப் பரப்பு நமக்கு ஏராளமாக இருந்தும் நமக்குள்ள துரதிருஷ்டம் நமக்குப் பாசன நீர்ப் பற்றாக்குறையாக நீடிக்கிறது இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது என்பது உடனடியாக சாத்தியப்படாது. அதற்குரிய ஒரே வழி, நமது பாசன முறையை மாற்றியமைப்பது தான்.

சுதந்திரம் அடைந்த இந்த 67 ஆண்டுக் காலத்தில் நாடு முழு மைக்கும் பாசன நீரை உத்தர வாதம் செய்திருப்போமானால்,

இந்தியாவையே விவசாய நாடாக உருவாக்கியிருக்கலாம். அப்படி உருவாக்கத் தவறி விட்டோம்.

அதிக வட்டிக்கு வாங்கி, கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாமல், சென்ற 10 ஆண்டுகளில் தற்கொலை செய்த மற்ற மாநில விவசாயிகளின் எண்ணிக்கை 2 லட்சத்திற்கும் அதிகம். தற்போது, தமிழ்நாட்டிலும் சென்ற ஆண்டு 11 தற்கொலைகள் நடந்துள்ளன.


காந்திஜி

விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுக்க, தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள நமது மாநிலத்தில் சொட்டு நீர்ப் பாசனத்தைப் போர்க்கால அடிப்படையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

விவசாயிகளுக்குத் தினசரி தரப்படும் சுமார் 2 ஆயிரம் மெகாவாட் இலவச மின்சாரமோ, முன்பு தள்ளுபடி செய்யப்பட்ட ரூ. 7 ஆயிரம் கோடி கூட்டுறவுக் கடனோ, மத்திய அரசு தள்ளுபடி செய்த ரூ. 70 ஆயிரம் கோடி கடனோ, ரூ. 49 ஆயிரம் கோடி ஒதுக்கீட்டில் 100 நாள் வேலை உறுதித் திட்டமோ, ரூ. 24 ஆயிரம் கோடி ஒதுக்கீட்டில் உணவு தானிய மானியமோ, ரூ. 10 ஆயிரம் கோடி உர மானியமோ எதுவும் விவசாயத்தில் எந்த மாறுதலையும் ஏற்படுத்த முடியவில்லை.

சொட்டு நீர்ப்பாசனம்தான் மாறுதலை ஏற்படுத்த முடியும்.

தற்போது நமது உணவு தானிய உற்பத்தியை விவசாயிகள் இரண்டு மடங்காக அதிகரிக்கச் செய்தால், அவர்களுடைய வருவாயும் இரண்டு மடங்காக உயரும். இதற்குச் சொட்டு நீர்ப் பாசன முறைதான் உகந்தது.

விவசாயிகளுக்குப் பாசன வசதியைச் செய்து கொடுத்தால், அது அவர்களுக்குச் செய்யப்படும் கடன் வசதியை விடப் பயனுடையதாகும்.

தமிழ்நாடு மாநில விவசாயிகள் காவிரிப் பாசனத்தையோ, முல்லைப் பெரியாறு முதலிய மற்ற அணைகளின் பாசனத்தையோ மட்டுமே நம்பிக் கொண்டிருக்காமல், சொட்டு நீர்ப்பாசன முறையை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறேன்.

சொட்டு நீர்ப்பாசனத்தையும், தெளிநீர்ப்பாசனத்தையும் கடைப்பிடித்தால், தற்போது தமிழ்நாட்டில் வாய்க்கால் பாசன முறையால் சாகுபடியாகும் 35 லட்சம் ஏக்கர் பூமிகளை, அதே அளவு பாசன நீரைக் கொண்டே 120 லட்சம் ஏக்கர்களுக்கு விநியோகம் செய்ய முடியும்.

நீர் மேலாண்மை விஞ்ஞானிகளின் கருத்துப்படி, ஒரு கியூசெக் பாசன நீரைத் தெளிநீர் முறையில் சாகுபடி செய்தால் 80 ஏக்கருக்கும், சொட்டு நீர்ப்பாசன முறையில் செய்தால் 100 ஏக்கருக்கும் அதுவும் தோட்டக்கலை பூமிகளில் செய்தால் 200 ஏக்கருக்கும் உபயோகிக்கலாம் என்கிறார்கள்.

விவசாயிகள் சொட்டுநீர்ப் பாசனத்தின் மகிமையைச் சரியாகப் புரிந்து கொண்டு சாகுபடி செய்ய முன் வருவார்களேயானால், புரட்சிகரமான மாற்றம் ஏற்படும்.

இந்தச் சொட்டுநீர்ப் பாசன முறையைத் தமிழ்நாட்டில் படிப்படியாக ஒவ்வொரு பிரதேசத்துக்கும் விரிவுபடுத்தலாம்.

முதலில் காவிரி டெல்டாவிலேயே சொட்டு நீர்ப்பாசன முறையைப் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தலாம். தஞ்சையில் சம்பாப் பயிரில் 9 லட்சம் ஏக்கருக்கும் குறுவை சாகுபடிக்கு 5 லட்சம் ஏக்கருக்கும் என மொத்தம் 14 லட்சம் ஏக்கரில் இப்பாசன முறையைச் செய்யலாம்.

கிருஷ்ணகிரி – தருமபுரி முதலிய பகுதிகளில் கிணறுகள்தான் அதிகம். அதற்கேற்ப அப்பிரதேசங்களில் சொட்டு நீர்ப்பாசன முறையைச் செய்யலாம்.

இப்படி, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பகுதியிலும் சொட்டுநீர்ப்பாசன முறை நடைமுறைப்படுத்தப்படுமானால், பாசனப் பற்றாக்குறை மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து நீடிக்காது. வீழ்ந்த விவசாயம் விருத்தியடையும். ●



கோவை சன்மார்க்க சங்கத்தில் தைப்பூச விழா!



அகவல் பாராயணம் செய்யும் சன்மார்க்க அன்பர்கள்

சென்ற சனவரி 28–ஆம் தேதி வடலூரில் தைப்பூச விழா 4 லட்சம் மக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியாக நடந்தது. அதே தைப்பூச விழா அருட்செல்வரால் உருவாக்கப்பட்ட கோவை சன்மார்க்க சங்க மண்டபத்தில் வழக்கம்போல சனவரி 28–ஆம் தேதி நடந்தது.

தைப்பூச விழா கொடியேற்றத்தோடு தொடங்கித் திருவடிப்புகழ்ச்சி, அருட்பெருஞ்சோதி அகவல், அட்டகம் ஆகிய அருட்பாக்கள் சன்மார்க்க அன்பர்களால் பாடப்பட்டன.

இவ்விழாவில் சன்மார்க்க சங்கத்தின் மேனாள் அறக்கட்டளைச் செயலர் திரு. பெ.சிதம்பரநாதன், 'ஓம் சக்தி' பத்திரிகை அலுவலர்கள் எஸ்.காமராஜ், ஆர்.குமாரசாமி, எம்.செல்வராஜ், இரா.பொன்னாண்டான், ஏ.கண்ணன், டி. வெங்கடேசன் ஆகியோரும், அறக்கட்டளைச் செயலாளர் திரு. எஸ்.செந்தில் சின்னசாமி அவர்களின் சார்பில் மேலாளர் திரு. ராமகிருஷ்ணன் அவர்களும் அவர்களுடைய அலுவலக ஊழியர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டு அருட்பெரும்சோதி அகவலைப் பாராயணம் செய்தனர்.

பின்னர் சோதி வழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன. இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

– ந.நி.



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 17

இந்த உலகம் நமக்குச் சொந்த வீடல்ல. வந்த வீடு. இங்கே நாம் விருந்தாளியாக வந்திருக்கிறோம். ஒருநாள் இதைவிட்டுப் போகத்தான் வேண்டும். சில விருந்தாளிகள் வந்தால் மகிழ்ச்சி. சில விருந்தாளிகள் போனால் மகிழ்ச்சி. "காக்கை கத்தினால் விருந்தாளி வருவா"ரென்று அப்பா சொன்னார். "அவர் எப்பொழுது போவார்?" என்று மகன் கேட்டான். "உங்க அம்மா கத்தினால் போவார்" என்று அப்பா சொன்னார்.

நம் நிலையும் இதுதான். இறைவன் பதி. அவனை வணங்கும் நாம் பசு. நாமிருக்கும் உலகம் பாசம். இந்த மூன்றும் நடத்தும் நாடகமே உலகம். இதை இயக்குவது இறைவனுக்குத் தீராத விளையாட்டு.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க" என்பதும் "யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதும் நம் முன்னோர்களுடைய தாரக மந்திரங்கள். தனக்காக உலகம் என்று எண்ணாமல், உலகத்திற்காகத்தான் என்று வாழ்ந்தார்கள்.

"அன்பர்பணி செய்யவெனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்
தெய்தும் பராபரமே"

என்பது அவர்கள் எண்ணமாக இருந்தது. தொண்டு செய்வதற்காகவே இந்த வாழ்க்கை தொடர வேண்டும் என்று நினைத்த சான்றோர்கள் வரிசையில் முதலிடம் பெற்றவர் திருமூலர்.

நீண்டகாலம் நோய்நொடியின்றி வாழ இவர் கற்பித்த வழி பிராணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சி. இதை நாம் நமக்கேற்றவாறு செய்யலாம். இது மிகவும் எளிமையானது. எல்லோராலும் செய்யத் தக்கது. இதைக் கீழ்க் கண்டவாறு செய்யலாம்.

1) கிழக்கு நோக்கி அமர்ந்து வலது மூக்கை மூடிக் கொண்டு இடது மூக்கால் முடிந்தவரை மூச்சை உள்ளிழுக்க வேண்டும். இது பூரகம்.

2) பின்னர் இரண்டு மூக்கையும் மூடிக்கொண்டு முடிந்தவரை மூச்சை உள்ளே வைத்திருக்க வேண்டும். இது கும்பகம்.

3) இதன்பிறகு, இடதுமூக்கை மூடிக் கொண்டு வலது மூக்கின் வழியாக முடிந்தவரை மெதுவாக மூச்சை வெளிவிட வேண்டும். இது ரேசகம்.

4) இப்பொழுது இடதுமூக்கை மூடி, வலது மூக்கின் வழியாக முடிந்தவரை மூச்சை உள்ளே இழுக்க வேண்டும். பின்னர் இரண்டு மூக்கையும் மூடி உள்ளே கும்பிக்க வேண்டும். முடிந்தவரை மூச்சை உள்ளே வைத்திருந்த



திருமூலர்

தொடர்ச்சி : 13–ம் பக்கம்

கட்டுரை

பழகிப் பார்த்ததில் இவர்கள்... 24

'சைவச் செங்கதிர்' டாக்டர் இரா.செல்வக்கணபதி

சொற்பொழிவாளர்கள் உலகில் சொல்லத்தக்க சாதனைகளைச் செய்து முடித்த பெருமைக்குரியவர்கள் பலர். அவர்களில் ஒருவர் 'சைவச் செங்கதிர்' டாக்டர் இரா. செல்வக்கணபதி.


இரா.செல்வக்கணபதியுடன் மரபின்மைந்தன்

சங்க இலக்கியம், சமய இலக்கியம், இதிகாசங்கள் ஆகியவற்றில் ஆழமும் சமகால இலக்கியங்களில் ஆர்வமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் அவர். தருமையாதீனத் தமிழ்க் கல்லூரியில் பல்லாண்டு காலம் பணிபுரிந்து முதல்வராகவும் விளங்கி ஓய்வுபெற்றவர்.

'தமிழ் வளர்க்கும் தருமபுரம்' என்கிற தலைப்பிலான அவருடைய ஆய்வு நூல் மிகவும் புகழ்பெற்றது.

என் கல்லூரிப் பருவம் தொட்டு அவர்களை நன்கறிவேன். பெரியோர்களை மதித்தவர் மட்டுமல்ல, பெரியோர்களால் மதிக்கப்பட்டவராகவும் திகழ்ந்தார். அதேநேரம் பேச்சுத் துறையில் கால்வைக்கும் இளைஞர்களைப் பேரன்புடன் அரவணைத்துப் பிழைகள் பொறுத்து வழிநடத்தும் பெருந்தன்மையும் அவரிடம் நிரம்ப உண்டு.



ஏறக்குறைய 24 ஆண்டுகளுக்கு முன்னர், கோலார் தங்கவயல் பகுதியில் அவருடைய தலைமையில் அருணகிரிநாதர் விழா நடந்தது.

பங்கேற்ற பேச்சாளர்களில் ஒருவர், தலைப்புக்குப் பொருத்தமில்லாமல் மேலோட்டமான நகைச்சுவைகளை அள்ளித் தெளித்தார். அந்த வயதுக்கே உரிய வேகத்தில், நான் சற்றே பொறுமை இழந்து மேடையில் நிலைகொள்ளாமல் இருப்பதை செல்வக்கணபதி அவர்கள் கவனித்தார்.

நிகழ்ச்சி முடிந்து அறைக்குத் திரும்பியதும், "தம்பி! நாங்க எல்லாம் முறையாத் தமிழ் படிச்சோம். நீங்க ஆர்வத்தில் தேடிப் படிச்சீங்க. எல்லோர்கிட்டயும் இதை நாம் எதிர்பார்க்க முடியாது. கொஞ்சகாலம் போனால் அவங்களும் பக்குவப்பட்டுச் சரியா வந்துடுவாங்க" என மென்மையாகவும், தெளிவாகவும் அறிவுறுத்தினார்.

பட்டிமண்டப நடுவர்கள் சிலர், பேச்சாளர்கள் பாதியிலேயே புறப்பட நேர்ந்தால் முகம் சுளிப்பார்கள். அவர்களுடைய வெளியூர்ப் பயணம் முதலிய நெருக்கடிகளைப் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால், செல்வக்கணபதி அவர்கள் நெடுந்தொலைவில் இருந்துவரும் பேச்சாளர்களை, அவர்

மரபின் மைந்தன் முத்தையா

கள் பேசி முடித்ததும் புறப்படும்படி அவரே வலியுறுத்துவார்.

எந்த நேரத்தில், எந்த இலக்கியத் தில், என்ன ஐயம் கேட்டாலும் பெரும் பாலும் உடனே அதற்கான விளக் கத்தைச் சொல்வதோடு, அதில் கூடு தல் செய்திகளையும் விருப்பத்துடன் விளக்குவார்.

பேச்சுக்குப் பணம் வாங்குவதில் மிகவும் நிதானமாக இருப்பார். அமைப்பாளர்கள் சிரமம் அறிந்து நடந்துகொள்வதில் மிகவும் பண் பானவர்.

ஒருமுறை, கோவையில் இலக்கிய விழா ஒன்றில் பெரும் அறிஞர்கள் பலரும் வந்து தங்கியிருந்தார்கள். அறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் அவர் களிடம் திருக்கன்றாப்பூர் என்னும் திருத்தலம் பற்றி யாரோ வினவிய போது, சற்று யோசித்தவர் "பக்கத்து அறையில் செல்வக்கணபதி இருந்தால் கேளுங்கள். உடனே பதில் கிடைக் கும்" என்றார்.

உலகின் பல பகுதிகளிலும் உரை கள் நிகழ்த்திப் புகழ்க்கொடி நாட்டி இருந்தாலும், அவருடைய மிகப்பெரிய பங்களிப்பு என்று சொல்லத்தக்கது ‘சைவ சமயக் கலைக்களஞ்சியம்’ ஆகும்.

மிகக் கடின உழைப்பிலும், ஒருங் கிணைப்பிலும் பத்து பெரும் தொகுதி களாக சைவத்தின் சிறப்புமிக்க அத் தனை அம்சங்களையும் கலைக்களஞ் சியம் ஆகவும் நிலைக் களஞ்சியம் ஆக வும் உருவாக்கினார்.

தமிழக ஆளுநர் உள்ளிட்ட பிரமுகர்கள் பங்கேற்ற பெரிய விழா ஒன்றில் அக்களஞ்சிய நூல்கள் வெளியிடப்பட்டன.

அதன்பிறகு கோவையில் ‘எப்போ வருவாரோ’ நிகழ்ச்சியில் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபர் திரு. கிருஷ்ணன் அந்தப் புத்தகங்களை மேள தாள வாத்தியங்களுடன் ஒரு பல்லக்கில் கொண்டுவரச் செய்து, செல்வக்கணபதி அவர்களை முன் னால் நடந்து வரச்செய்து, வழிநெடுக



அ.ச. ஞானசம்பந்தன்

மலர்கள் தூவி வரவேற்று ‘ஞானச் செம்மல்’ என்னும் விருதையும் அளித்தார்.

எளிய குடும்பத்தில் பிறந்தாலும், தன் உழைப்பாலும் நெறிமிக்க வாழ் வாலும் படிப்படியாக உயர்ந்து எப் போதும் மனநிறைவோடு காணப் படுவார்.

ஒருமுறை சமகால இலக்கியங்கள் பற்றிப் பேச அழைத்தபோது, ஒப்புக் கொண்டு வந்து பேசினார். அடுத்த முறை அழைத்தபோது "இல்லை தம்பி! எனக்கு அந்தத் தலைப்பு சரி யாக வரவில்லை. அதில் நல்ல பயிற்சி உள்ளவர்களைக் கூப்பிடுங்கள்" என்று சொல்லக்கூடிய நேர்மை அவருடைய தனித் தன்மைகளில் ஒன்று.

திருக்குறள், திருமுறைகள் ஆகிய வற்றில் புதிய பொருள் கண்டு தனிப் பட்ட உரையாடல்களிலும், கார்ப் பயணங்களிலும் அவற்றைச் சுவை யாக விளக்கிக் கொண்டே வருவார்.

அவருடைய துணைவியார் திருமதி சந்திரா செல்வக்கணபதி அவர்கள் நிறைந்த பண்புகளின் நிலைக்களன் ஆவார். மயிலாடுதுறை நகராட்சித் தலைவராக அவர் பொறுப்பு வகித்தார்.

அந்தப் பொறுப்பில் அவர் இருந்த போது, நிகழ்ச்சி ஒன்றிற்காக மதியம் மூன்றரை மணி அளவில் அவருடைய

இல்லம் சென்றேன். நகராட்சி ஆணையருடன் வரவேற்பறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவர், ஆணையரிடம் சில நிமிடங்கள் பொறுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, உள்ளே வந்து எனக்குச் சிற்றுண்டி தயாரிக்கத் தொடங்கினார். எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை.

செல்வக்கணபதி அவர்கள் இல்லத்தில் விருந்து உண்ணாத பேச்சாளர்கள் இல்லை என்றே சொல்லலாம். என்னுடைய பல நூல்களின் வெளியீட்டு விழாக்களுக்கு அவர் வருகைதந்து திறனாய்வு செய்து உரைகள் நிகழ்த்தியிருக்கிறார்.

என் 50–ஆவது நூலாகிய 'திருக்கடவூர்' எனும் நூல் வெளியிடப்பட்ட போது, மேடையில் மிகவும் நெகிழ்ந்து பேசினார். "என் உடன்பிறந்த சகோதரர் திரு. ராஜஇளங்கோ, உயர் நீதிமன்ற நீதிபதி ஆனபோது எவ்வளவு மகிழ்ந்தேனோ, அவ்வளவு மகிழ்வை இந்த மேடையில் அடைகிறேன்" என்றார்.

சத்குரு அவர்களை இரண்டு மூன்று முறை தரிசித்து மகிழ்ந்தார். ஒருமுறை சத்குருவுடன் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றிலும் பங்கேற்றார்.

"சத்குருவின் சாநித்தியம் அவருடைய சன்னதியில் என்னை மௌனமாக இருக்கவே தூண்டியது. கேள்வி கேட்கக்கூடத் தோன்றவில்லை" என ஒளிப்பதிவு முடிந்தபின் குறிப்பிட்டார்.

அவரும் நானும் இணைந்து தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றபோது, விழா அரங்கில் அருகருகே அமர்ந்திருந்தோம். தன் வாழ்வின் ஏற்ற இறக்கங்கள் குறித்து அப்போது மனம்விட்டுப் பேசினார். திறனறிந்து சொல்லுக சொல்லை என்பார் திருவள்ளுவர். அந்தத் திறன் அறிந்து சொல்லக் கூடியவர் டாக்டர் செல்வக்கணபதி.

அதனால்தானோ என்னவோ ஒருமுறை அவர் சொன்ன ஒரு சொல் எனக்கு அதிர்ச்சியளித்தது.

சென்னையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் ஒளிப்பதிவில் அவருடன் கலந்து கொண்டேன். அந்த அரங்கில் குளிர்சாதன வசதி இல்லை. அளவுக்கதிகமான வெப்பம் உமிழும் விளக்குகள் நடுவே வியர்வை பொங்கிப் பெருகியது. ஒளிப்பதிவு முடிந்ததும் அமைப்பாளர்களிடம் "வெந்து தணிந்தது காடு என்பது போல வெந்து தணிந்தது உடம்பு" என்றார்.

அந்தச் சொல்லில் அமங்கலம் தொனிக்கிறதே என அஞ்சினேன். அஞ்சியது போலவே இரண்டு வாரங்களில் இருதய அறுவைச் சிகிச்சைக்கான தேவை அவருக்கு ஏற்பட்டது. ஆனாலும் அதன்பிறகும் பல ஆண்டுகள் அவருடைய தமிழ்ப்பணி தொடர்ந்தது.

ஒருமுறை சென்னை செல்ல கோவை விமான நிலையத்தில் காத்திருந்தபோது, அவருடைய எண்ணிலிருந்து அலைபேசி அழைப்பு வந்தது.

வழக்கமான உற்சாகத்துடன் "அண்ணன் வணக்கம்! என்று பேசத் தொடங்கினேன். எதிர்முனையில் அவருடைய மகன் திரு. அருண் பேசினார். தன் தந்தை மறைந்த செய்தியைத் தெரிவித்தார்.

"சிவசிவா" என்று பதறிப்போய் விபரங்களைத் தெரிந்து கொண்டேன்.

இறுதி அஞ்சலி செலுத்த அவருடைய இல்லம் நுழைந்தபோது, அவருடைய துணைவியார் கோவையில் நிகழ்ந்த பாராட்டு விழாவை நினைவுகூர்ந்து அழுதார். அவருக்கும், அவருடைய அன்பு மகள் பாரதிக்கும் ஆறுதல் சொல்ல முயன்று தோற்றேன்.

சான்றாண்மை, பெருந்தன்மை, எளிவந்த தன்மை ஆகிய அம்சங்களின் அரிய கலவையாய் வாழ்ந்த அமரர் டாக்டர் இரா. செல்வக்கணபதி அவர்கள், தமிழ் உலகில் தனி அடையாளமாக நினைவுகளில் மட்டுமின்றித் தன் செயல்கள் வழியாகவும் நிலைத்திருப்பார்.

●

9–ம் பக்கத் தொடர்ச்சி

பிறகு, வலது மூக்கை மூடி இடது மூக்கின் வழியாக முடிந்தவரை மெதுவாக மூச்சை வெளிவிட வேண்டும்.


5) இப்படி மாற்றி மாற்றி சுமார் முப்பது முறை செய்தால் மூச்சு ஒழுங்காகும். நம் உடம்பிலுள்ள பத்து வாயுக்களும் நன்றாகச் செயல்படும். நரை, திரை, மூப்பின்றி நீண்ட காலம் வாழலாம். இப்பயிற்யை அதிகாலை வேளையில் நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் செய்வது மிகவும் அதிகமான பலனையளிக்கும். இது செயல்முறைப் பிராணாயாமம். இந்தப் பயிற்சியின் போது மனம் மூச்சுடன் பொருந்த வேண்டும். சிவநாமம் மனத்தால் நினைக்கப்படுவதால், இது சிவயோக மாகும்.

குதிரையின் மீது லகானை முறையாகப் பொருத்தி அதன்பிறகுதான் ஓட்ட வேண்டும். மனம் என்ற லகானை மூச்சு என்ற குதிரையில் இணைத்துப் பயின்றால், இனிப் பிறப்புமில்லை, இறப்புமில்லை என்கிறார் திருமூலர்.

"பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராணன் இடுக்கில் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்
பிராணன் அடைபேறு பெற்றுண்டீர் நீரே"

என்பது திருமந்திரம் (555). இப்பயிற்சியால் மனமும் அடங்கும்.

பிரத்தியாகாரம் : அட்டாங்க யோகத்தில் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் என்ற நான்கு நிலைகளை இதுவரை கண்டோம். ஐந்தாவது நிலை பிரத்தியாகாரம். இதன் பொருள் 'நன்றாக இழுத்தல்'. மனம் இந்திரியங்களின் வழியாகப் புறத்தே சென்று பற்றாமல், தடுத்து உள்ளே நிறுத்துதல் பிரத்தியாகாரம் ஆகும்.



"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்பது வள்ளுவம்.

மனம் வெளியில் ஓடாமல் மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களில் முறையாக நிற்குமாறு அகவழிப் படுத்துவது பிரத்தியாகாரம். இப்படி மனம் அடங்கி நிலை பெறுமானால், உலக பந்தம் கொஞ்சம் கொஞ்சமாக விலகும். இருள் நீங்கி ஒளி தெரியும். மனம் சாந்திபெறும். வேதங்களாலும் அளவிட்டுச் சொல்ல முடியாத இறைவனை உடம்புக்குள்ளே காணலாம்.

"கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடில்
கொண்டுகொண்டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே"

என்பது திருமந்திரம் (566). பிரத்தியாகாரத்தைத் தொகைநிலை என்பார் நச்சினார்க்கினியர். (தொல்காப்பியம் – பொருளதிகாரம் – புறம் 20) இதற்கு உபநிடதங்களும் விஷ்ணுபுராணமும் பல விளக்கங்களைக் கூறுகின்றன. அதன்படி பார்த்தால், பிரத்தியாகாரம் என்பதில்,

1) இயல்பாகவே இன்ப சுகங்களில் சென்று பற்றும் பொறிகளை வலிந்திழுத்து அடக்குதல். 2) எதனையும் நீக்கமற நிறைந்த சிவம் எனப் பாவித்தல். 3) கால், விரல், கரடு, கணைக்கால், முழந்தாள், தொடை, பாயு, இலிங்கம், நாபி, இதயம், கழுத்து, மிடறு, அண்ணம், நாசி, கண் புருவநடு, நெற்றி, சிரம் என் னும் பதினெட்டு இடங்களில், பிராணனை ஏற்றியும் இறக்கியும் நிலைபெறச் செய்தல். 4) நித்தியகர்மங் களின் பலத்தை விடுதல். 5) இறப்பு வரையில் இயற்றும் சுத்தம் அசுத்தம் அனைத்தையும் சிவார்ப்பணமாகச் செய்தல். 6) பசு கரணங்களைப் பதிகரணமாக்குதல். 7) வாயுவை மேற்கூறிய பதினெட்டு இடங்களிலும் ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு

மாற்றுதல். 8) உலக விஷயங்களில் பாராமுகமா யிருத்தல். 9) புத்தியை இழுத்துச் சமசித்தம் உள்ள வனாகி வேற்றுமையும் பற்றுமின்றி உயி ரிடம் நிறுத்துதல் ஆகி யவை அடங்கு கின்றன.

அட்டாங்க யோகத்தில் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் ஆகிய நான்கும் பூர்வபட்சம் என்றும் பிரத்தி யாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய நான்கும் உத்தரபட்சம் என்றும் சான்றோர் குறிப்பிடுவர்.

பிரத்தியாகாரப் பயிற்சியில், முதல் நிலை மூலாதாரத்தில் மனத்தை நிறுத்திப் பழகுதலாகும். இதற்குப் பிராசாத மந்திரம் மிகச்சிறந்த வழி யாகும். 'ஹம் ஸம்' என்ற இரண்டும் ஆத்மப் பிராசாதமாகும். இதைச் செபிக்காத மந்திரம் என்றும் அசபை என்றும் கூறுவர்.

மூச்சுக்காற்று 'ஹ' என்ற ஒலியுடன் வெளிப்படுகிறது. 'ஸ' என்ற ஒலியுடன் உள்ளே நுழைகிறது. இதுவே ஹம்ஸ மந்திரமாகும். இந்த மந்திரத்தை மூச்சு விடும் எல்லா உயிர்களும் செபிக் கின்றன. இம்மந்திரமானது ஆசாரிய னால் சுழிமுனை வழியில் 'ஸம்ஹம்' என, மாற்றி உபதேசிக்கப்படுமானால், இதுவே மந்திர யோகமாகும் என்று உபநிடதங்கள் கூறுகின்றன.

மூலாதாரத்தில் மனத்தை நிறுத்து வது முதல்நிலை என்பதால் அதை விளக்க வந்த திருமூலர் – 568–ஆம் பாடலில்,

"மூலத் திருவிரல் மேலுக்கு முன்நின்ற
பாலித்த யோனிக்கு இருவிரல் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழும் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரல் கீழதே"

என்கிறார். எருவிடும் வாசலுக்கு இரண்டு விரற்கிடை மேலாகவும், கரு வாய்க்கு இருவிரற்கிடை கீழாகவும் நிற் பது மூலாதாரம். இது உந்திக்கு நான்கு விரற்கிடை கீழ் உள்ளது. குண்டலினி சக்தியான செவ்வொளி தோன்றுமிடம் இதுவேயாகும் என்பது இம்மந்திரத்தின் பொருளாகும். இவ்வொளி வட்டமாய் வளைந்து நிற்பதால் இது பாம்பாகப் பாவிக்கப்படுகிறது. இதனாலேயே உலகத்துப் பாம்புகள் எல்லாவற்றையும் வழிபடும் வழக்கம் உண்டாயிற்று.

மூலாதாரத்தில் மனத்தை நிறுத்திப் படிப்படியாக மேல் நோக்கிச் செலுத்தி இதயத் தானமாகிய அநாகதச் சக்கரத் துக்குக் கொண்டு வந்தால், எல்லாச் சித்திகளும் கிடைக்கும். இந்த அநாகதம் மூக்குத் துவாரத்துக்குக் கீழ் பன்னி ரண்டு அங்குலத்தில் உள்ளது. இங்கே மனத்தை நிறுத்தித் தியானித்தால் அட்டமாசித்திகள் கிடைப்பதோடு உடம்பும் அழியாமல் இருக்கும். இதை 569–ஆம் பாடலில் திருமூலர் இப்படிக் கூறுகிறார் :

"நாசிக் கதோமுகம் பன்னிரண்ட ங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யும்
தேகத்துக் கென்றும் சிதைவில்லை யாமே"

இந்நிலையில் ஹடயோகம், ராஜ யோகம், அட்டமாசித்தி எல்லாம் கிடைக்கும். இவை யாவும் இறை வனைக் காட்டும் ஞானத்திற்குத் தடை யாகும் என்பதால் ஞானிகள் இவற்றைக் கடந்து மேலே செல்வர்.

இப்படி மூலாதாரம், சுவாதிட் டானம், மணிபூரகம், அநாகதம் என்ற நான்கு ஆதாரங்களையும் தாண்டி ஐந் தாவது ஆதாரமாகிய விசுத்தித் தானத் தில் மனத்தை வைத்துத் தியானித்தால், நெற்றிக்கு நேரே மின்னல் போல் பேரொளி தோன்றும். ஓர் ஆனந்தப் பரவசம் உண்டாகும். ஒரு புதிய அனு பவம் கிடைக்கும்.

"சோதி இரேகைச் சுடரொளி தோன்றிடில்
கோதில் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலவொளி எய்தினால்
ஓதுவது உம்முடல் உன்மத்த மாமே"

என்பது திருமூலர் வாக்கு (570). விசுத்தி என்பது நாக்கிற்கு அடியில் (உள்நாக்கு) உள்ள தலமாகும். இதற்கு மேலும் செல்ல விரும்பினால், கும்பகத்தால் நின்ற மூச்சுக்காற்று கீழே போகாமல் எருவாய்ப்புழையை இறுக அடைக்க வேண்டும். இதற்கு ஆசனங்கள் மூலம் குதத்தை நெருக்கித் தூக்கி நிறுத்த வேண்டும். இதனை மூலபந்தம் அல்லது அகுஞ்சனம் என்பர். சிரசின் உச்சியி லுள்ள பிரமரந்திரத் தானத்தில் மனத்தைப் பதித்துவைக்க வேண்டும். கண் வெளியே விழித்திருக்க வேண்டும். இப்படிச் செய்தால் காலத்தை வெல்ல லாம். வாயு வெளியில் சென்று மீளவும் உள்ளே புகாமல் நின்றுவிடும். அப் பொழுது இறைவன் சோதியாய்க்

காட்சியளிப்பான். இருந்த நிலையில் உலக முழுவதையும் அறியலாம். இந்தச் செயலைத் திருமூலர்,

"மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லும் கருத்திது தானே"

என்று 571–ஆம் பாடலில் குறிப்பிடுகிறார். இயல்பாக மூக்கின் வழியாக உட்புகுந்து மீண்டும் மூக்கின் வழியே வெளிச் செல்லுகின்ற காற்றை அவ்வாறு செல்லாமல் தடுத்து நிறுத்திக் கும்பகம் செய்ய வேண்டும். மூலாதாரத்தின் மேலுள்ள முதுகெலும்பின் அடிப்பாகத்திலிருந்து அந்த முதுகெலும்பின் உள்ளே செல்லும்படி செலுத்த வேண்டும். அது சிறிது சிறிதாக அண்ணத்திலுள்ள துளையை அடைந்து விடும். அக்காற்றை வாய்வழியே வராது தடுத்தால், உச்சியை அடைந்து மூக்கு வழியாக வெளிவரும். இந்த மாற்று வழியால் உடம்பில் செயல்படாமல் மடிந்து கிடக்கின்ற அறிவுக் கருவிகள் எழுச்சியுற்றுச் செயல்படும். பல உண்மைகள் எளிதில் புலனாகும். இதை இடைகலை, பிங்கலை என்ற இரு வழியை அடைத்துச் சுழுமுனை என்ற ஒரு வழியைத் திறப்பது என்று யோக நூற்கள் கூறுகின்றன. இதையே திருஞானசம்பந்தர்

"ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நான்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க் கிடர்
ஆனகெடுப்பன அஞ்செழுத்துமே"

என்று குறிப்பிட்டுப் பாடுகிறார்.

இவ்வாறு மூச்சை அடக்கும்போது இதயத் துடிப்பும் நிற்கலாம். அதனால் இதயம் கெட்டொழிந்து போகாது சிறிது நேரம் நின்று பிறகு செயல்படத் தொடங்கும். கடிகாரத்தில் பெண்டுலத்தைச் சிறிது நேரம் நிறுத்தி வைத்து விட்டு, மீண்டும் அசையவிடுவது போன்றது. எனவே இதனால் வாழ்நாள் நீடிக்கும். தகுந்த ஆசிரியர் வழிகாட்ட இவற்றைச் செய்ய வேண்டும். முறையறிந்து செய்யா விட்டால் பெருந்தீங்கு உண்டாகும்.



சேக்கிழார்

மூச்சுக்காற்றைச் சுழுமுனை வழியே செலுத்தி உச்சியிலிருந்து மூக்கு வழியாக மீளச் செய்கின்ற யோகிகள், தங்கள் உடம்பைவிட்டுப் போகக் கருதினால், உச்சியை அடைந்த காற்று, மூக்கு வழியாக வெளியே வராமல் மூக்கைப் பிடிப்பர். அக்காற்று உச்சியில் மென்மையாக மூடப்பட்டிருக்கும் பிரமரந்திரம் என்ற பெருந்துளையைத் திறந்து கொண்டு வெளியேறி விடும். உடல் என்ற எந்திரம் செயலற்று விடும். இதையே 'கபால மோட்சம்' என்பர். பற்றற்ற நிலையில் வீடு பேறு அடைய விரும்பும் சித்தர்களுக்கு இந் நிலை சித்திக்கும்.

பெரியபுராணத்தில் சுந்தரரின் அடியவரான பெருநிழலைக் குறும்பர் மிகப்பெரிய சித்தர். மறுநாள் ஆடிச் சுவாதியில் சுந்தரர் கயிலை செல்லப் போவதை அறிந்து, அதற்கு முந்திய நாளான ஆடி மாதம் சித்திரை நாளில் கயிலை செல்ல முடிவு கட்டினார் இந்தச் சித்தர். கண்ணின் மணி போன்ற சுந்தரரைப் பிரிந்து நான் வாழமாட்டேன் என்று எண்ணிய இவர், யோகத்தால் மூலத்துவாரத்தை அடைத்து மேலைத் துவாரம் திறந்து உடம்புக் கூட்டை விடுத்துக் கயிலை சென்று சேர்ந்தார். இதை,

"நாலுகரணங்களும் ஒன்றாய் நல்ல
அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச்
செலுத்தக் கபாலநடு
ஏலவேமுன் பயின்றநெறி எடுத்த
மறைமூலம் திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அடைவார் கயிலை
முன்னணைந்தார்"

என்று பாடுகிறார் சேக்கிழார்.

இதன்மூலம் பிரத்தியாகாரம் என்பது ஒவ்வோர் ஆதாரத்திலும் மனதை நிறுத்தி, அங்குள்ள ஆதார தேவதைகளைத் தியானித்து, அவற்றுக்குரிய மந்திரங்களைச் செபித்துப் புருவ நடுவில் பேரொளி மின்னல் தோன்றக் கண்டு, புருவமத்தியில் அகமுகப் பார்வையைச் செலுத்திக் காலத்தை வென்று களிப்பதேயாகும் என்பது பெறப்படுகிறது. ●

சாதிவாரி இடஒதுக்கீடு சாத்தியமா?

விவாத ஊடகங்களில் சில... சில... சில...

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற நிலையை உருவாக்குவதற்கு முதற் படியாகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை உயர்த்த, இட ஒதுக்கீடு முறையை அரசியல் சட்டத்தில் கொண்டு வந்தனர். ஓட்டு அரசியலால் சில சாதியினருக்கு ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிற்குள்ளேயே உள்ஒதுக்கீடு தரப்பட்டது. இவ்வாறு தரப்பட்ட உள்ஒதுக்கீடு தாம் இன்று சாதிவாரி ஒதுக்கீடுகளுக்கு வித்திட்டுள்ளது.

எந்த நோக்கத்திற்காக இந்த ஒதுக்கீடு முறை கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கமே சாதிவாரி ஒதுக்கீட்டினால் குலைந்துவிடும். ஒரே பிரிவினருக்கிடையே பகையும் விரோதமுமே மேலோங்கும். அதனால் கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்துவதன் மூலமும் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குச் சிறப்பு சலுகைகள் கொடுப்பது மூலமும் சாதிகளைக் கலக்க வைத்து, ஏற்றத்தாழ்வு நிலையினைப் போக்கிச் சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதன் வாயிலாகவும் கிரிமிலேயர் முறையை நடைமுறைப்படுத்துவதின் வாயிலாகவும் சாதிவாரிக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்யும்.

– **புலவர் கருமலைத்தமிழாழன்,** ஒசூர்.

சாதிவாரியாக இடஒதுக்கீடு என்பது சரியானது இல்லை. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சுதந்திரத்திற்கு முன்பே வீர ஆவேசத்துடன் பாடிய 'முண்டாசுக்கவி' சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த நாட்டில், எதற்கு சாதிவாரியாக இடஒதுக்கீடு? இப்படிச் செய்வது பல மாணவர்களின் எதிர்கால கனவினைச் சிதைத்துவிடும். மதிப்பெண் அடிப்படையில் இடஒதுக்கீடு செய்வதுதான் நல்ல சுகாதாரமான முறை. இதை யோசித்து நாம் எல்லோரும் ஓர் நிலை, நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற உணர்வுடன் சாதிவாரி இடஒதுக்கீடு செய்வதைத் தவிர்த்தால்தான் நல்லது.

– **உஷாமுத்துராமன்,** திருநகர்.

சாதிவாரியாக இடஒதுக்கீடு செய்வது இனித் தேவை இல்லை. எல்லோரும் இப்பொழுது முன்னேறிய நிலையில்தான் உள்ளனர். குறிப்பாக, ஆதி திராவிடர்கள் முன்னேறி இருக்கிறார்கள். அவர்கள் விவசாயக்கூலி வேலை செய்து நாள் ஒன்றுக்கு அறுநூறு ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகிறார்கள். இனிச் சாதியை வைத்து ஓட்டுக் கேட்பதால் யாது ஒரு பயனும் வாராது. அரசியல்வாதிகள் இதைப் புரிந்து தெரிந்து பேச வேண்டும் என்பது என் கருத்து

– **தங்கவேல் பழனிச்சாமி,** பெரியகள்ளிவலசு.

சாதிவாரி இடஒதுக்கீடு சாத்தியமில்லை. இன்று நடைபெறுவது இடஒதுக்கீடல்ல. பங்கீடு என்றே சொல்ல வேண்டும். ஓட்டுக்காகத் தேர்தல் சமயத்தில் முளைக்கும் நஞ்சுக் காளான்கள். வறுமைக் கோட்டிற்கு மேல், கீழ் என்று பிரித்து, அரசின் பலா பலன்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். இதனை இப்போதைய நடுவண் அரசு செய்யும் என்று நம்புவோம்.

– **ராம பழனியப்பன்,** கோவை.

பொருளாதாரப் பின்புலத்தை மட்

டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு பின் தங்கியவர்களுக்குச் சலுகைகள் வழங்குவதே காலாகாலத்திற்கு நிலைத்து நிற்கும் ஒன்றாக இருக்கும். முன்னேறிய சமூகம் என்று முத்திரை குத்தப்பட்ட சமூகத்திலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், சமூகநீதி பேசுவது எப்படிச் சரியானதொன்றாக இருக்க முடியும்?

காலவரையற்ற சலுகைகள் முன்னேறிய சமூகமாக அறிவிக்கப்பட்டவர்களைச் சலுகைகளுக்காகத் தாழ்த்தப்பட்டவர்களாக அறிவிக்கக் கோரிப் போராட வைத்திடும் என்பதையும் நெஞ்சம் கொள்வது நன்று. அரசியலில் ஏற்படும் அழுத்தத்தால் வாக்குவங்கியை மனதில் வைத்துக் கொண்டு இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பதைக் கடந்த கால வரலாறு நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. இனிவரும் காலங்களில் சாதிவாரி இடஒதுக்கீடு சாத்தியமில்லை என்பதுவே நிதர்சன உண்மையாகும்.

*– **மேலை. தமிழ்க்குமரன்,** முத்தரசநல்லூர்.*

சாதிவாரி இடஒதுக்கீடு சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் மக்களை ஏமாற்றி அரசியல் சுக வாழ்க்கையை நடத்திவரும் சுயநலப் புலிகள் குழப்பத்தை ஏற்படுத்தி வருவது மிக வேதனைப்படும் விசயமாகும். நீதியரசர் ரோகிணி ஆணையம் கண்டுபிடித்தது என்னவெனில், 994 சமுதாயங்களுக்கு OBC பிரிவில் 266 விழுக்காட்டை மட்டுமே கைப்பற்றுகின்றன. ஆனால், பிற சமுதாயங்களுக்குச் சொல்லிக்

வாசகர் கடிதங்கள்

2021 பிப்ரவரி 'ஓம் சக்தி' இதழின் முகப்பு ஓவியமாக அமைந்த தமிழ்த்தாயின் திருவுருவம் கருத்தைக் கவரும் வகையில் அமைந்திருந்தது. பாராட்டுக்கள்!

– **தி. வெற்றிச்செல்வன்,** மேலைச்சிவபுரி.

'சுரங்கம்' பகுதியில் வெளியான ''ஒரே சமயத்தில் நான்கு தேர்தல்கள்'' பற்றிய அருட்செல்வரின் அருமையான யோசனையை மத்திய – மாநில அரசுகள் கவனத்துடன் பரிசீலிக்கலாம்.

– **தங்கவேல் பழனிச்சாமி,** பெரியகள்ளிவலசு.

சொ.சொ.மீ–யின் ''தீவினை மாற்றும் திருமந்திரம்'' தொடர் கட்டுரையின் கருத்துக்கள் மிகவும் பயனுள்ளவை; பாராட்டத்தக்கவை.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

ஆன்மீகச் சேவை ஆற்றிவரும் ம. கிருஷ்ணன் போன்றோரை வெளியுலகிற்கு அடையாளம் காட்டும் மரபின் மைந்தனின் பணி மெய்சிலிர்க்க வைக்கிறது.

– **எல்.சூரியக்கண்ணு,** மதுரை.

இடர்ப்பாடுகளற்ற தொழிலும் வாழ்வும் இருக்கவே முடியாது என்ற பாடத்தைப் படமாகத் தீட்டிக் காட்டியது ''சுவர் இருக்கும் வரை'' சிறுகதை!

– **மு.இராமு,** திருச்சி.

நம் கால்கள் தடம்மாறும் கால்களாக இல்லாமல், தடம் பதிக்கும் கால்களாக இருக்க வேண்டும் என்பதைக் கவித்துவப்படுத்தியது கவிதாசனின் கவிதை!

– **தி.வெண்ணிலா,** புதுப்பட்டி.

''பெண்குலத்தின் பொன்விளக்கு'' ஆன்மிகக் கட்டுரை கடவுளையே கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது போலிருந்தது.

– **உஷாமுத்துராமன்,** திருநகர்.

தாய்மையும் தாயுள்ளமும் வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவை என்பதை நெஞ்சம் நெகிழும்படி உணர்த்தியது ''தாய்ப்பால்'' சிறுகதை.

– **மு.காந்திராஜா,** முத்தரசநல்லூர்.

கொள்ளும்படியாக எவ்விதமான பயன்களும் கிடைப்பதில்லை.

20 சதவிகிதம் MBC இட ஒதுக்கீட்டில் சமூகநீதி சூறையாடல்கள் நடப்பதாகவும் அவற்றில் 4 சமூகங்கள் அதிகளவில் பயன்படுத்தி வருவதாக மருத்துவர்கள் கூறியுள்ளார்கள். தேர்தல் நெருங்கும் நேரத்தில் இம்மாதிரி தேவையற்ற பிரச்சினைகளைக் கூறி மக்களைத் திசை திருப்புவது அரசியல்வாதிகளுக்குக் கைவந்த கலை எனலாம். நீதிமன்றம் இடஒதுக்கீடுகளுக்குச் சவுக்கடிக் கொடுத்திருப்பதை மறந்துவிட்டு மீண்டும் குப்பையைக் கிளறக் கூடாது என்பதே எங்களின் நிலையாகும்.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

சமூகநீதி உருவாகி வருகிற இத்தருணத்தில் சாதிவாரி இடஒதுக்கீடு தேவையில்லை என்று முற்றிலும் நிராகரிப்பது நியாயமன்று. மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களில் பெரும்பாலானோர் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் போராடிக் கொண்டிருக்கும் அவலநிலை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, தற்போது இருக்கும் இடஒதுக்கீடே இன்னும் சிறிது காலத்திற்கு நீடிப்பதுதான் சிறந்தது.

– **உ.மு.ந. ராசன் கலாமணி,**
கோபிசெட்டிபாளையம்.

அரசு, சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்திய பின், சாதிவாரி விகிதாச்சாரப்படி ஒதுக்கீடு அறிவித்து அதனை அனைத்துச் சாதிகளும் ஏற்றுக் கொண்டால், ஒதுக்கீடு பிரச்சினை ஓர் அளவுக்காவது தீர்க்கப்பட்டு சமநீதி, சமூகநீதி நிலைநாட்டப்படலாம். இல்லை எனில், அரசு தற்போது மேற்கொண்டு வரும் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்குத் திரும்ப வேண்டிவரும். வேறு வழியில்லை.

– **கோ.செ.மு. கந்தசாமி பாண்டியன்,**
திருப்பூர்.

சாதிவாரி இடஒதுக்கீடு விவகாரத்தில் இப்பொழுது உள்ள நடைமுறையை விடுத்து, புதியதாய் ஆணை ஏதும் அரசு பிறப்பித்தால் அது பெரிய குழப்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும்.

– **அ.அழகையா,** மதுரை.

சுதந்திரம் வாங்கி முக்கால் நூற்றாண்டை நெருங்கிவிட்ட ஜனநாயக இந்தியாவுக்கு இன்னும் சாதிவாரி இடஒதுக்கீடு என்பது கேவலம். எல்லாத் துறையிலும் திறன்காட்டி முன்னேறும் மனிதர்களை உருவாக்குவதுதான் அரசின் கடமை. இலவசங்களும், இடஒதுக்கீடும் வேண்டாம்.

– **இரா.கல்யாணசுந்தரம்,** மதுரை.

சாதிவாரி ஒதுக்கீடு என்பது சாத்தியமில்லை. நூற்றுக்கணக்கில் இருக்கும் சாதிகளுக்கு ஒதுக்கீடு எப்படிச் சாத்தியமாகும்? சாதிவாரி ஒதுக்கீடு என்பது சாதி பேதத்தைத்தான் அதிகரிக்குமே தவிர, ஒழிக்கப் பயன் தராது. பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கல்விக்குத் தேவையான வசதி வாய்ப்புகளுக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துக் கல்வியில் முன்னேற வழிவகை செய்வதுதான் சரியான உதவியாகும்.

– **மு. கணபதி,** பெருந்துறை.

ஜாதி, மத, இன வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்று அரசியல் சாசனத்தை அறிவித்துவிட்டு ஜனத்தொகைக்குத் தக்கவாறு இடஒதுக்கீடு செய்தால், காலவரையின்றி அனைத்து ஜாதியினருக்கும் தொடர்ந்தால் மக்களிடையே ஜாதி உணர்வு தலைவிரிக்கும். இன ஒற்றுமை சிதைந்து போகும். இடஒதுக்கீடு கொள்கையை நீர்த்துப்போகச் செய்வதே நாட்டுக்கும் வாழும், வாழப் போகும் மக்களுக்கும் நன்மை பயக்கும்.

– **எல்.சூரியக்கண்ணு,** மதுரை.

பொருளாதார ரீதியில் சலுகை என்பதும் பொய்த்துவிட்ட ஒன்று. பொருளாதார ரீதியில் இடஒதுக்கீடு என்றால் "பொய்மையும் வாய்மை இடத்த" என்ற குறளையே தன் தேவைக்குச் சமூகம் மனசாட்சியின்றிப் பயன்படுத்தத் தயாராகிவிட்டது. எனவே கற்றோர், கல்லாதோர், செல்வர் ஏழை என்றோ பகுத்தறிந்து இடஒதுக்கீட்டைச் செய்வது கானல் நீரே!


– **தெ.முருகசாமி,** புதுச்சேரி.

இடஒதுக்கீடு என்பது குடும்பத்தில் வருமானம் அடிப்படையில் இருப்பதால், மேலும் பலருக்கு வாய்ப்புக் கிடைக்கும். அதை கிரீமிலேயர் மீண்டும் அனுபவிக்காதபடியான சட்டங்கள் தேவை.

– **தி.இராதாகிருஷ்ணன்,** அரூர்.

இறைவனிடம் கோபித்த இறையடியார்கள்!

பேரா. தி. இராசகோபாலன்


அப்பர் அடிகள்

சைவமும் வைணவமும் தமிழ்த்தாய்க்கு இரண்டு கண்களாகும். சைவமும் வைணவமும் சித்தாந்தங்களில் வேறுபட்டு நின்றாலும், முரண்பட்டு நிற்பதில்லை. மேலும் தமிழென்று வருகின்ற போது, இரண்டு சமயங்களும் கொண்டும் கொடுத்தும் செல்கின்றன.

இறைவன் கொடுத்த இனிய வாழ்வை இறைப்பணியில் செலவழிக்காமல், சிற்றின்பங்களில் செலவிடுவதை, “முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே” எனும் உவமை மூலம் விளக்குகின்றார் அப்பர் அடிகள். தரையிலே வாழும் முயலைப் பற்றுவது எளிதானது. வானத்தில் பறக்கும் காக்கையைப் பற்றுவது கடினம். அப்பரடிகள் இலட்சிய வாழ்க்கையைச் சொல்லுவதற்குப் பயன்படுத்திய இந்த உவமையை அப்படியே பயன்படுத்துகிறார் திருமங்கையாழ்வார்.

வைணவத்தில் அர்ச்சாவதாரத்தை (விக்கிரகம்) வழிபடுவது எளிமையானது. வைகுண்டத்திலிருக்கும் பெருமாளை எட்டிப்பிடிக்க நினைப்பது செயற்கரிய செயல். இந்தச் செய்தியைச் சொல்வதற்குத் திருமங்கையாழ்வார், “ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே” எனச் சிறிய திருமடலில் அருளிச் செய்கிறார்.

திருமழிசையாழ்வார் தம் சீடனாகிய கணிகண்ணனுக்காகப் பெருமாளையும் காஞ்சிபுரத்தை விட்டுப் புறப்படும்படியாக வேண்டுகிறார். பெருமாளும் அப்படிப் புறப்பட்டதைச் சைவராகிய குமரகுருபரர் “பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப்பசுங் கொண்டலே” எனத் திருமாலைப் போற்றுகின்றார்.


திருமங்கையாழ்வார்

மகாபாரதத்தில் ஒரு சுவையான காட்சி. சிவபெருமானிடத்தில் இருந்து பாசுபதாஸ்த்திரத்தைப் பெறுவதற்காக இரவோடு இரவாக அர்ச்சுனனை அழைத்துக் கொண்டு கயிலங்கிரிக்குப் புறப்படுகிறான் கண்ணன். பகற்பொழுதில் அர்ச்சுனனுக்குப் பசிக்குமே என்று கனிகளைப் பறித்து வருகிறான் கண்ணன்.

அர்ச்சுனன் சிவபக்தன் ஆகையால், “சிவ பூசை செய்



யாமல் சாப்பிடமாட்டேன்" என்கிறான். உடன் கண்ணபிரான் பக்கத்திலுள்ள நந்தவனத்திலிருந்து பூக்களைக் கொய்து கொண்டு வந்து பூஜை செய்யுமாறு பணிக்கின்றான். அதற்கு அர்ச்சுனன், "நான் சாளக்கிரமத்தை (பூஜை பெட்டி) எடுத்து வரவில்லையே" என்கிறான்.





உடன் கண்ணன், "என்னையே சிவனாகப் பாவித்துப் பூசை செய்! என் மேல் சூட்டிய மாலையைக் கயிலையிலேயுள்ள சிவபெருமான் மார்பிலும் நீ காண்பாய்! அப்பொழுது நாங்கள் இருவரும் ஒருவரே என்பதை உணர்ந்து கொள்வாய்" எனச் சொன்னான்.

கயிலையை அடைந்த அர்ச்சுனன், கண்ணன் மேல் சூட்டிய மாலையைச் சிவனின் மார்பில் கண்டபொழுது, "கண்ணன் மேல் அணி மலரனைத்தும் காய்கனல்; வண்ணன் மேல் காணலுற்றான், சிவன் – திருமால் என இரு பொருள் இலதென உணர்ந்தானை" என ஸ்ரீவில்லிபுத்தூராழ்வார் சிவனைப் பெருமைப்படுத்துகிறார்.

சைவ நாயன்மார்களில் ஒருவராகிய கோச்செங்கட்சோழன் தம் வாழ்நாளில் எழுபது சிவாலயங்களையும், எட்டு வைணவ ஆலயங்களையும் கட்டுவித்தான். திருஞானசம்பந்தர் அச்சோழனைச் "செங்கட் பெயர் கொண்டவன் – செம்பியர்கோன், அங்கட் கருணை பெரிதாயவனே" எனப் பாராட்டுகின்றார்.

திருநாவுக்கரசர், "சித்தியினால் அரசாண்டு சிறப்புறச் செய்து சிவ கணத்துப் புகப்பெய்தார்" எனப் போற்றுகிறார். சுந்தரர், "பொன்னி நன்னீர்த்துறை வன்திகழ் செம்பியர் கோன் நானிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே" எனப் புகழாரம் சூட்டுகின்றார்.

திருமங்கையாழ்வார் திருநறையூர் எனும் திவ்விய தேசத்தைப் பாடும்போது, அந்த மணிமாடக் கோயிலை எழுப்பிய கோச்செங்கட்சோழனை ஒன்பது பாசுரங்களில் மனமாரப் பாராட்டுகின்றார். "தெய்வவாள்வலம் கொண்ட சோழன்", "தென்தமிழன் – வடபுலக்கோன் சோழன்", "வெம்மா உய்த்த செங்கணான் கோச்சோழன்", "சிலை தடக்கைக் குலச் சோழன்", "எழில் மாடம் எழுபதுசெய்து உலகம் ஆண்ட திருக்குலத்து வளச் சோழன்" என்பன திருமங்கையாழ்வார் கோச்செங்கட் சோழனைப் பற்றிச் செதுக்கிய மெய்க்கீர்த்திகளாகும். கோச்செங்கண் என்ற சோழனைத் திருமங்கையாழ்வார் போற்றியது போல், வேறெந்தத் தனி மனிதரும் போற்றப்படவில்லை.

நாயன்மார்களில் சுந்தரமூர்த்தி நாயனார்க்கும், ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாருக்கும் பல பொருத்தப்பாடுகள் உண்டு. பாடுபொருளிலும் இருவரும் கைகோர்த்துச் செல்கின்றனர்.

மூவர் பாடிய பாடல்களுக்குத் தேவாரம் எனப் பொதுப்பெயர் இருந்தாலும், சுந்தரர் பாடிய தேவாரத்திற்குத் "திருப்பாட்டு" எனவொரு சிறப்புப் பெயரும் உண்டு. "நயத்திற்குச் சுந்தரர்" என்ற ஆன்றோர் பாராட்டும் உள்ளது. அதுபோல திருமங்கையாழ்வார் "நாலு கவிப்பெருமாள்" எனப் பாராட்டப் பெற்றவர். "மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த மங்கையர் கோன்" என மணவாள மாமுனிகளால் போற்றப்பட்டவர்.

நாயன்மார்களில் வேறெவரும்

பேசாத பேச்சைச் சுந்தர மூர்த்தி நாயனார் பேசுகின்றார். காரணம், சிவபெருமானையே தோழராக்கிச் சகமார்க்கத்தில் சென்றவர். ஒருமுறை இறைவனிடத்துப் பொன் வேண்டுகிறார். அதைத் தருவதற்குச் சிவனார் தாமதிக்கவே, "உன்னைவிட்டால் வேறு கடவுள் இல்லையென்று நினைக்கிறாயா" எனும் பொருளில் "இவரலாது இல்லையோ பிரானார்" எனப் பாடுகிறார். இந்தத் தொனியில் வேறெந்த அருளாளர்களும் பாடியதில்லை.

சேரமான் பெருமாள் நாயனாரைச் சந்தித்து அவரிடத்துப் பொன் பெற்று, திருமுருகன் பூண்டிக்கு வருகிறார் சுந்தரர். தம்மைத் தவிர வேறு எந்த மனிதரிடமும் சுந்தரர் பொருள் பெறுவதை விரும்பாத சிவபெருமான் பூதகணங்களை அனுப்பி, சுந்தரரிடம் இருந்த பொன்னைப் பறிக்குமாறு பணிக்கிறார். பூதகணங்கள் வேடுவர் வேடம் தரித்துச் சுந்தரரிடமிருந்த பொன்னைப் பறிமுதல் செய்கின்றன.

இது இறைவனுடைய திருவிளையாடல் என்பதை உணராத சுந்தரர் ஏகவசனத்தில், "பாதுகாப்பில்லாத – பாதுகாப்பைத் தராத இவ்வூரில் உமாதேவியோடு ஏன் இங்கிருக்கிறீர்" எனும் பொருளில் "நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கு இங்கிருந்தீர்" எனப் பாடுகிறார். மேலும் "எல்லை காப்பது ஒன்றில்லையாகில் எத்துக்கு இங்கிருந்தீர்" என ஏகவசனத்தில் பேசுகின்றார் சுந்தரர்.

சுந்தரரைப் போன்றே ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் சற்றே உரத்த குரலில் பெருமாளிடம் பேசுகிறார். பாசுரத்தினாலேயே பரந்தாமனைத் தம் நெஞ்சத்தில் கட்டிப் போட்டதாகப் பாடுகிறார். "பாட்டினால் உன்னை என் நெஞ்சத்து இருந்தமை காட்டினாய் கண்ணபுரத்துறையம்மானே" என்பது பாசுரம். மேலும் சாரமில்லாத, சத்தில்லாத பாடல்கள் பாட்

குரு சொன்ன யோசனை!



ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கியது. தற்போது அதன் மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது. மடத்தின் உள்ளேயே பிக்குகள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல், ஒருநாள் மடாலயத் தலைவர் தன்னைவிட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்றுநேரம் ஆழ்ந்து யோசித்துவிட்டு பிறகு, "உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி மடாலயம் சிறப்புற்றுச் செழிக்கும்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அதன் தலைவருக்கு வியப்பு. மடத்திற்குத் திரும்ப வந்து, அங்கே இருந்த புத்த பிக்குகளுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர், கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள்.

நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை!



திருஇந்தளூர்ப் பெருமாள்

டல்ல என்று, "ஆர்வத்தால் பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல கேட்டாமே" எனும் பாசுரத்தின் வழி அருளிச் செய்கிறார்.

தம்முடைய கவித்துவத்திலுள்ள அசையாத நம்பிக்கையில் திருக்கண்ண மங்கைப் பெருமாளைப் பார்த்து, "உனக்கு நேரமிருந்தால், விருப்பமிருந்தால் என்னிடம் கவிதையைக் கற்க வரலாம்" எனப் பாடிவிடுகிறார். "வெண் சங்கம் ஒன்றேந்திய கண்ணா! நின் தனக்கும் குறிப்பாகில், கற்கலாம் கவியின் பொருள்தானே" என்பது பாசுரம்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமங்கையாழ்வாரும் ஏககண்டராய் (ஒரே குரலில்) பேசிய இடம் ஒன்று உண்டு. ஒற்றைக் கண்ணை இழந்தவராய் சுந்தரர் திருவாரூர் தியாகேசனை வழிபட்டு நின்று மற்றைக் கண்ணையும் தருமாறு வேண்டுகிறார்.

இறைவன் தாமதிக்கவே சுந்தரர் பேசாத பேச்சை, பேசக்கூடாத பேச்சைப் பேசுகின்றார். "என்னுடைய கண்ணை ஏன் பறித்தீர்? இதனால் பழிபட்டீர்! வாயைத் திறவாமல் இருக்கின்றீரே! மற்றைக்கண் தரவில்லையென்றால் வாழ்ந்துட்டு போ" எனப் பேசுகின்றார். "அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால், வாளா இங்கிருப்பீர். திருவாரூரில் வாழ்ந்து போதிரே!" என்பது சுந்தரர் தேவாரம்!

சுந்தரரைப் போலவே திருமங்கையாழ்வாரும் இந்தளூர்ப் பெருமாளிடம் தடித்த குரலில் பேசுகின்றார். திருஇந்தளூரில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருமேனியும் உதடுகளும் தங்கக் காசுபோல் தகதகவென்று இருக்குமாம். அதனைப் பார்ப்பதற்கென்றே அடியார்கள் கூட்டம் திரளுமாம். திருநாங்கூர், திருவிண்ணகரம் போன்ற பதினொரு திவ்ய தேசங்களைத் தரிசித்துவிட்டு திருஇந்தளூருக்குப் பேரவாவோடு வருகின்றார். அது நடை சாத்தப்பட்ட நேரம்.

இதனால் திருவாசலில் நின்றே பத்துப் பாசுரங்களை அருளிச் செய்கிறார். அப்படியும் நடை திறக்காததால், திருமங்கையாழ்வாரும் ஏக கண்டராய் ஏகவசனத்தில் பேசுகின்றார். "ஏற்கனவே பால் வண்ணனாயும், நீல மேகமாவும் இருக்கின்ற நீர், இந்தளூரில் பொன்வண்ணமாய் இருக்கின்றாய்! நித்திய சூரிகளுக்கு மட்டுமே தரிசனம் தரும் நீர், என் போன்றவர்களுக்குத் தராவிட்டால், வாழ்ந்தே போம் நீரே" எனப் பேசிவிட்டுப் புறப்படுகின்றார்.

"முன்னை வண்ணம் பாலின் வண்ணம், முழுவதும் நிலைநின்ற பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம், வண்ணம் எண்ணுங்கால் பொன்னின் வண்ணம், மணியின் வண்ணம் புரையும் திருமேனி, இன்னவண்ணம் என்று காட்டீர் இந்தளூரிரே! காசில் ஒளியில் திகழும் வண்ணம் காட்டீர் எம் பெருமான். இந்தளூரிலே வாழ்ந்தே போம் நீரே" என்பன பாசுரங்கள்.

சைவமும், வைணவமும் இரண்டு கண்களாய் இருந்தாலும், பார்வை ஒரே திசையில்! தமிழ் என்று வருகின்ற பொழுது ஆழ்வார்களும் நாயன்மார்களும் பேதம் பார்த்ததே இல்லை. தமிழ் என்ற இரயில் தடம்புரளாது ஓடுவதற்குச் சைவமும் வைணவமும் இரண்டு தண்டவாளங்களாய் அமைந்து கிடக்கின்றன. ●

கட்டுரை

இறைப்பற்றையும் விஞ்சிய தமிழ்ப்பற்று



பே.சா. கர்ணசேகரன்

ஏழு முறை தல யாத்திரை மேற்கொண்டு தமிழகத்தில் உள்ள தலங்கள்தோறும் சென்று “சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளி, குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே” என்ற முறையில், தாண்டவப் பெருமானைத் தண்டமிழால் பாடிக் கும்பிட்டவர், திருஞான சம்பந்தர்.

கும்பிடுவதற்கு இவ்வளவு முக்கியத்துவம் அளித்த அப்பெருமான்தான், தமிழகத்திற்கு அப்பாலுள்ள தலங்களுக்குச் சென்று அப்படிக் கும்பிட வேண்டும் என்ற ஆர்வம் அரும்பிய போதும் அதைத் தவிர்த்தார். இறைப்பற்றையும் விஞ்சிய அவருடைய தமிழ்ப்பற்றே அதற்குக் காரணம்.

கண்ணுதலான் காற்றாய் இருக்கும் கவின்மிகு காளத்திற்குச் சென்ற சம்பந்தர், அங்கு மலைமீது அன்பின் மெய் வடிவாம் கண்ணப்பரையும், அவ்வன்பில் நிலைத்திருப்பவராம் காளத்தியப்பரையும் கண்டு வணங்கினார்.

இவ்வாறு இருவரையும் ஒன்றாக ஓரிடத்தில் பார்த்ததனால், அவருள் பக்திப் பெருக்கெடுத்தது. அதனால் அவர் அவ்விருவரையும் மீண்டும் மீண்டும் வணங்கிய வண்ணம் இருந்தார்.

அப்படி நெடுநேரம் வணங்கிய பின்பும்கூட அங்கிருந்து அகல அவருக்கு மனம் வரவில்லை. ஆனாலும் அரை மனதோடு அங்கிருந்து அகன்றார். மலையடிக்குச் சென்று மடமொன்றில் தங்கினார். உரிய காலங்கள்தோறும் சென்று சென்று அரிய தமிழ் பாடிப்பாடி அவ்விருவரையும் வணங்கி வந்தார்.

இவ்வாறு அவர் அங்கே இருந்தபோது, அக்காளத்திக்கு வடக்கிலும் மேற்கிலும் உள்ள சிவத்தலங்களுக்கும் சென்று சந்தனத் தமிழ் பாடிச் சங்கரனைக் கும்பிட விரும்பினார். ஆனால், இறைப்பற்றால் அரும்பிய அவ் விருப்பத்தை அவருடைய தமிழ்ப்பற்று வென்றது. அதனால்,

“சிறையாரும் மடக்கிளியே இங்கே
வா தேனொடுபால்
முறையாலே உணத்தருவேன்,
மொய்பவளத் தொடுதரவும்
துறையாரும் கடல்தோணி புரத்தீசன்
துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கொருகால் பேசாயே”

என்று எந்த நாயகன்பால் தம் காதலைப் படரவிட்டாரோ அந்த நாயகன் எழுந்தருளி உள்ள தலங்களே ஆனாலும், தமிழ் நடையாடாத தலங்கள் அவை என்பதால், அத்தலங்களில் நடையாட அவர் விரும்பவில்லை.

“இறைவன் கழல் ஏத்தும் இன்பம் இன்பமே” என்ற கருத்துடையவரே ஆனாலும், தமிழ் நடையாடாத அத் தலங்களுக்குச் சென்று அவ்வின்பத் தைப் பெற அவர் விரும்பவில்லை.

எனவே அவர், அத்தலங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தார். அங்கிருந்தே அத்தலங்களை அருந்தமிழால் பாடி வணங்கினார்.

இவற்றை எல்லாம் இப்படிச் சொல்கிறார் கவிகளின் கவி தெய்வச் சேக்கிழார் :

“அங்கண் வடதிசை மேலும் குடக்கின் மேதும்
அருந்தமிழின் வழக்கு அங்கு நிகழாதாகத்
திங்கள்புனை முடியார் தம் தானம்தோறும்
சென்று தமிழ் இசைபாடும் செய்கை போல
மங்கையுடன் வானவர்கள் போற்றி இசைப்ப
வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப் பாடிச்
செங்கமல மலர் வாவித் திருக்கேதாரம்
தொழுது திருப்பதிக இசை திருந்தப் பாடி”

“கூற்றுதைத்தார் மகிழ்ந்த கோகரணம் பாடிக்
குலவு திருப்பருப்பதத்தின் கொள்கை பாடி
ஏற்றின்மிசை வருவார் இந்திரன் தன்நீல
பருப்பதமும் பாடி மகிழ்ந்து இறைவர்தானம்
போற்றிய சொன் மலர்மாலை பிறவும் பாடிப்
புகலியர் தம் பெருந்தகையார் புனிதமாகும்
நீற்றின் அணிகோலத்துத் தொண்டர்சூழ
நெடிது மகிழ்ந்து அப்பதியில் நிலவுகின்றார்”

(பெரியபுராணம் – 2924, 2925)



சேக்கிழார்

ஆண்கள் மட்டுமே வழிபாடு!

கர்நாடக மாநிலம் சிக்மகளூர் அருகில் அமைந்துள்ளது அண்ணப்ப சுவாமி திருக் கோயில். வருடத்தில் பொங்கல் நாளன்று மட்டுமே இந்தக் கோயில் திறக்கப்பட்டுப் பூஜைகள் நடத்தப்படுகின்றன. இக் கோயிலின் 140 படிகள் ஏறிச் சென்று வழிபட ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்படு கிறார்கள்.

– நெ. இராமன்

இவ்வாறு அவர் இறைப்பற்றை விடத் தமிழ்ப்பற்றில் விஞ்சி நின்ற காரணத்தால்தான், தம்மை இறைவ னோடு இணைத்து இயம்புவதை விட,

“தமிழ் ஞானசம்பந்தன்”, “நற்றமிழ் ஞானசம்பந்தன்”, “செந்தமிழ் ஞான சம்பந்தன்”, “அருந்தமிழ் ஞான சம்பந்தன்”, “தமிழ் கெழு ஞான சம்பந்தன்”, “தமிழ்க்கிழமை ஞானன்”, “தமிழ்நாதன் ஞானசம்பந்தன்”, “தமிழ் விரகன்” என்று தமிழோடு இணைந்து இணைத்து இயம்பினார். அதுவும் ஏறத்தாழ அறுபத்து ஐந்து இடங்களில் அப்படி இயம்பிப் பெருமிதம் கொண் டார்.

தமிழ்நடையாடாத தலங்கள் சிவத்தலங்களே ஆனாலும் அங் கெல்லாம் நடையிடச் சம்பந்தர் விரும்பவில்லை என்றால், தமிழ் அறி யாத தெய்வத்தைத் தெய்வமாகவே மதிக்கவில்லை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

“தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதுஎனில் / அஃது உணர் அலகை யில் தாழ்வு எனல் அறமே” என்று அத்தெய்வத்தைத் தமிழ் அறிந்த பேயைவிடக் கீழானதாகக் கருதினார்.

இறைப்பற்றையும் விஞ்சிய இவ்விரு இறைப்பற்றாளரின் தமிழ்ப் பற்று வியப்பில் ஆழ்த்துகிறது என் றால், தமிழ் பேசுவதையே தரக்குறை வாகக் கருதும் இன்றைய தமிழரை நினைக்கும்போது வேதனையே மேலிடுகின்றது. ●



முதியவர் செய்த உதவி!

ஒரு காட்டில் ஓர் இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தின் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் ஏறி, அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்றபோது, அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்துவிட்டது.

சட்டென்று சுதாரித்த அவன், கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால், தரை வெகு கீழாக இருந்தது. பயந்து போய் ‘‘யாராவது காப்பாற்றுங்கள்’’ என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான்.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்ட வலியால் அவனுக்கு ஆத்திரம் வந்தது. ‘‘பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே, அறிவில்லையா உமக்கு?’’ என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்துக் கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றைப் பலமாக பற்றிக் கொண்டு ‘‘நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விடமாட்டேன்’’ என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்துக் கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரைச் சரமாரியாகத் திட்டினான். ‘‘ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?’’ என்றான்.

பெரியவர் அமைதியாகச் சிரித்துக் கொண்டே ‘‘தம்பி... நான் உனக்கு உதவிதான் செய்தேன்’’ என்றார். இளைஞன் திருதிருவென விழித்தான்.

பெரியவர் விளக்கினார். ‘‘நான் உன்னை முதலில் பார்த்தபோது, நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லைவிட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து, நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கிவிட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன், அவ்வளவுதான்’’ என்று சொல்லிவிட்டுத் தன் வழியே அவர் போய்விட்டார்.

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 39 மார்ச் 2021 இதழ் : 2

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD.
A/c OMSAKTHI" என்ற பெயரில்
D.D.–யாகவோ அல்லது மணியார்டர்
மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

நெல்லிக்காய் சாதம்

தேவையானவை : *நெல்லிக்காய் : 100 கிராம், பாசுமதி அரிசி : 1/4 கிலோ கிராம், முந்திரிப் பருப்பு : 6, மிளகுத்தூள் : 1/4 தேக் கரண்டி, சீரகத்தூள் : 1/4 தேக் கரண்டி, நெய் : 3 தேக்கரண்டி, உப்பு : தேவைக் கேற்ப, இஞ்சி விழுது : சிறிது, பூண்டு விழுது : சிறிது.*

செய்முறை :

1. *நெல்லிக்காயைப் பொடியாகத் துருவிக் கொள்ளவும்.*
2. *அரிசியுடன் போதுமான அளவு நீர் சேர்த்து, குக்கரில் உதிரியாக வடித்து எடுக்கவும்.*
3. *முந்திரிப் பருப்பைத் துண்டுகளாக ஒடித்து நெய்யில் வறுத்து வைக்கவும்.*
4. *அடிக் கனமுள்ள பாத்திரத்தில் சிறிது நெய்விட்டு, துருவிய நெல்லிக்காயை இட்டு வதக்கவும்.*
5. *இத்துடன் உதிரியான சாதம், முந் திரிப் பருப்பு, மிளகுத் தூள், சீரகத் தூள், இஞ்சி, பூண்டு விழுது, உப்பு, மீதமுள்ள நெய் இவற்றைச் சேர்த்து நன்கு கிளறிக் கொடுத்து, மூன்று நிமி டங்களில் இறக்கவும்.*

சுவையான 'நெல்லிக்காய் சாதம்' தயார். இத்துடன் அப்பளம் பொரித்து வைத்துச் சாப்பிட, மிகவும் சுவையாக இருக்கும். நெல்லிக்காயில் வைட்டமின் 'சி' சத்து கணிசமாக இருப்பதால், உடல் நலத்திற்கு நல்லது. குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவர்.

– ராதிகா அழகப்பன், விக்கிரமசிங்கபுரம்.

சிறுகதை



கீதா சீனிவாசன்

வார்த்தைகளில் வாழ்பவர்கள்

அகிலேஷ் தன் கேன்வாஸ் ஷூவை மாட்டிக் கொண்டு வாக்கிங் கிளம்பத் தயாரானான். 'அகி...' மனைவி தியா குரல் கேட்டுத் திரும்பினான். சின்ன ஆச்சரியம்! அவளும் ஒரு ட்ராக் சூட்டுடன் வாக்கிங் செல்லத் தயாராக வந்து நின்றாள்.

'சொல்லவே இல்ல...' வடிவேலு பாணியில் அகிலேஷ் ஆச்சரியப ப்ட்டான்.

'எஸ்... சர்ப்ரைஸா இருக் கட்டும்னுதான் சொல்லல... இனிமே நானும் உங் கூட வரப்போறேன்...' என்றபடி வாசற்கதவைப் பூட்டினாள்.

இருவரும் தெருவில் நடக்கத் தொடங்கினர். பல ஆச்சரியப் பார்வை களைக் கண்டுகொள்ளாமல், தியா கேட்டாள். 'எனக்காகக் கொஞ்சம் மெதுவா நடங்க... ப்ளீஸ்!'

'சரி... ஆனா, எங்கேயும் ஹால்ட் கூடாது... ஒரு முப்பது நிமிஷம் ஆபரேஷன்லேயே இருக்கணும்...'

'ஷ்யூர்...' தியா சிரித்தாள்.

எதிரில் ஒரு வயதான பெண் மணி 'ஹாய் அகிலேஷ்' எனக் குரல் கொடுக்க... 'குட்மார்னிங் ஆன்ட்டி... நேத்திக்கு வரல போல...' அகிலேஷ் கேட்டான்.

ஆமாம்... கொஞ்சம் டயர்டா இருந்தது... இவங்க உங்க ஒய்ஃபா?' கேட்டாள் அந்தப் பெண்மணி.

'எஸ் ஆன்ட்டி...' என்றான் அகிலேஷ். அந்தப் பெண்மணியும் தியாவைப் பார்த்துப் புன்னகைத்து, ஹலோ சொன்னாள். தியாவும் பதிலுக்கு 'ஹலோ' என்றாள்.

அந்தப் பெண்மணியைக் கடந்தவுடன்,



சில நிமிடங்களில் அவர்கள் ஒரு குளத்தை அடைந்தனர். குளம் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருந்தது. சுற்றிலும் நடைபாதை அமைக்கப்பட்டிருந்தது. பல ரகங்களில் மனிதர்கள் நடையும், ஓட்டமும் பயின்று கொண்டிருந்தனர். சிலர் அப்பாடா என்று பெஞ்சில் உட்கார்ந்திருந்தனர். சிலர் கண்மூடி தலையில் ஹெட்ஃபோனுடன் கடமையாக வட்டமடித்தனர். அவர்களோடு அகிலேஷும், தியாவும் இணைந்தனர்.

'இவங்க வயது என்ன தெரியுமா?' அகிலேஷ் கேட்டான். தியா உதட்டை பிதுக்க... 'செவண்டி டூ...' தியாவால் நம்ப முடியவில்லை.

'உண்மையாவா?'

'ஆமாம்... டை யூஸ் பண்றாங்க... யங்கா ஃபீல் பண்றாங்க. ஆனாலும் லைஃப் என்ஜாய் பண்றாங்க.'

தியாவுக்குச் சிறிது ஆச்சரியமாக இருந்தது. பிறகு சில நிமிடங்கள், நடைக்குப் பிறகு... 'ஹலோ அகிலேஷ் குட் மார்னிங்' ஒரு குரல் கேட்க... தியா திரும்பினாள். இவர்களைவிட வேக மான நடையுடன், ஒரு வயதானவர் ட்ராக் சூட்டுடன் வந்து கொண்டி ருந்தார்.

'ஹலோ ஜேம்ஸ் சார்... குட் மார் னிங்... பை தி பை ஷீ இஸ் மை வைஃப்!' அகிலேஷ் சொன்னான், நடந்து கொண்டே...

'ஓ... குட். குட்மார்னிங் மிஸஸ் அகிலேஷ்...' என்றார் ஜேம்ஸ். அகிலேஷ் கேட்டான். 'என்ன சார்... காயின் கலெக்சன்ல புதுசா ஏதாவது சேர்ந்திருக்கா?'

'எஸ்... 2001–இல் வெளிவந்த ஐந்து ரூபாய் காயின் மட்டும் கிடைக் கலேன்னு சொல்லியிருந்தேன்ல... அது கிடைச்சிருக்கு!' மகிழ்ச்சி பொங்கச் சொன்னார் ஜேம்ஸ்.

'என்ன சார்... குழந்தைங்க மாதிரி ஹாபியா பண்றீங்களா' தியா கேட்டாள்.

'எஸ் மேடம்... அதைவிட அந்தக் காயின் வெச்சு பல டீடைல்ஸ் நமக் குக் கிடைக்கும்... இந்தக் காயின் வெளியிட்டதோட காரணம், நம்ம மகாவீரர் ஞானம் பெற்ற வருஷத்தோட சிம்பல்!'

‘அப்படியா?’ ஆச்சரியமாகக் கேட்டாள் தியா.

‘எஸ்... அதுமாதிரி காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா வந்து நூறு வருஷம் ஆனது... பிரய்லியோட இருநூறு வருஷம் குறித்தது... 1995 உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பிக்கும் வகையில்...னு பல காரணங்களோட கவர்மெண்ட் காயின்ஸ் வெளியிடறாங்க... தவிர, பழைய காலத்து நாணயங்களும் வெச்சிருக்கேன்!’ ஜேம்ஸ் சொல்லிக் கொண்டே அவர்களைக் கடந்து சென்றார்.

‘ஆமாம் தியா... இப்ப டி.வி... செல்ஃபோன் வந்ததால நமக்கும், எதிர்காலத் தலைமுறையினருக்கும் இந்த ஹாபி விஷயங்களே இல்லாமப் போச்சு... எப்ப வேணும்னாலும், எது வேணும்னாலும் உடனே கிடைக்கும்போது, ஏன் தேடிப் போய் கத்துக்கணும்கிற அலுப்பு...’ அகிலேஷ் சொன்னான்.

சில நிமிடங்களில் அவர்கள் ஒரு குளத்தை அடைந்தனர். குளம் சுத்தமாகப் பராமரிக்கப் பட்டிருந்தது. சுற்றிலும் நடைபாதை அமைக்கப் பட்டிருந்தது. பல ரகங்களில் மனிதர்கள் நடையும், ஓட்டமும் பயின்று கொண்டிருந்தனர். சிலர் அப்பாடா என்று பெஞ்சில் உட்கார்ந்திருந்தனர். சிலர் கண்மூடி தலையில் ஹெட்ஃபோனுடன் கடமையாக வட்டமடித்தனர். அவர்களோடு அகிலேஷும், தியாவும் இணைந்தனர்.

தொப்பையுடன் ஒருவர் வேகமாக நடக்க அகிலேஷ் சொன்னான், ‘இவர் தொடர்ந்து வாக்கிங் வர்றவரு... ஆனா, தொப்பை குறையவே இல்லை!’

அதற்குத் தியா சிரித்துவிட்டு சொன்னாள்... ‘வாக்கிங் போயே இப்படின்னா, வாக்கிங் போகலேன்னா?’

அகிலேஷும் சிரித்தான். ‘அதில்லை காரணம்... இவங்க வாக்கிங் போறோமேன்னு நல்லாச் சாப்பிடவும் செய்யறவங்க...!’

தியாவுக்குக் கொஞ்சம் டயர்டா இருந்தது. ஆனால், அகிலேஷ் சொன்னதால் விடாமல் நடக்க முயற்சித்தாள்.

ஒரு மரத்தின் ஓரமாக நின்று... கை, கால்களை நீட்டிப் பயிற்சி செய்து கொண்டிருந்த முதியவரை நெருங்கினான் அகிலேஷ்.





‘சார்... எப்படி இருக்கீங்க...?’

‘ஓ... ஃபைன்’ என்றவர், ‘இரு... கூட வர்றேன்...’ என்று அகிலேஷ், தியாவிற்கு இணையாக நடக்க ஆரம்பித்தார்.

‘என்ன சார்... இன்னிக்கு ஏதாவது விசேஷமா?’

‘ஆமாம்ப்பா... இன்னிக்கு ஆடிப்பெருக்கு...’

‘ஆடிப்பெருக்கா... அப்படின்னா?’

‘அப்படிக் கேளு... நீங்க மெட்ராஸ் ஆளுங்க... நான் தஞ்சாவூர் பக்கம். ஆடிப்பெருக்குன்னா... அது ஆடி மாசம் பதினெட்டாம் நாள், விசேஷம்... எங்க ஊர்ல ஆத்துல தண்ணி வர்ற மாசம்... வருஷம் பண்டிகை தொடங்குற மாசம். கோடை முடிஞ்சு வசந்தம் தொடங்குறதக் குறிக்கும் பருவம். அப்ப, வீட்டைச் சுத்தம் செஞ்சு... வகை வகையா சாதம் செஞ்சு... ஆத்தங்கரையில உட்கார்ந்து, அம்மனைக் கும்பிட்டு வழிபடற பண்டிகை... இங்க ஃபிளாட்ஸ்ல எங்க அதெல்லாம் முடியும்? ஏதோ அம்மனுக்குப் பூஜை மட்டும் பண்ணினோம்.’

அவர் சொல்ல... அகிலேஷ் தியாவிற்கு விளக்கினான். ‘சார் பேரு வேதாசலம்... பண்டிகை... விசேஷம், இதுல ரொம்ப எக்ஸ்பர்ட். மக்கள் கவலை மறந்து சந்தோஷமா இருக்கத்தான் இந்த ஏற்பாட்டை சமூகம் செய்யுதும்னு சொல்வாரு... அத வச்சு உறவினர்கள், நண்பர்களைப் பார்க்கறது, பேசறதுன்னு, ஒரு சந்தர்ப்பம் வரும்னு சொல்வாரு!

‘சரி, சார். எங்க நம்ப ராகவன் சார்...?’ கேட்டான் அகிலேஷ்.

‘அட சொல்ல மறந்திட்டேன்... அவருக்கு உடம்பு சரியில்லை... பாவம், ஃபோன்ல கூட பேச்சு சரியில்ல...’ வேதாசலம் வருத்தமாகச் சொன்னார்.

‘தியா, ஒரு நிமிஷம்... நாம போற வழியில மிஸ்டர் ராகவன் சார, பாத்திட்டுப் போய்டலாமா?’ அகிலேஷ் கேட்டான்.

தலையாட்டிய தியா சொன்னாள், ‘நீங்க வர்றது வாக்கிங் இல்லீங்க... டாக்கிங்... அதான் அரைமணின்னு சொல்லிட்டு, ஒரு மணி நேரம் கழிச்சே வர்றீங்க...’ கிண்டலாகச் சொன்னாள்.

‘உண்மைதான் தியா... அத அப்பறமா

சொல்றேன். வா... ராகவன் வீடு பக்கத்துலதான்...!'

நடந்தபடி... மனைவியுடன் குளத்தைச் சுற்றி முடித்தான். வாசலில் அருகம்புல் ஜூஸ் விற்றுக் கொண்டிருந்த ஒரு வயதான பெண்மணியுடன் நலம் விசாரித்தான். அருகில் இருந்த குறுகலான சாலையைக் கடந்து, வலதுபுறம் திரும்பிய பின் இருந்த ஒரு சிறிய வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

அங்கு ஆம்புலன்ஸ் ஒன்று நிற்க... கொஞ்சம் கவலையானான் அகிலேஷ். ஏதாவது விபரீதமா...? அவர்கள் வாசலை அடைய, ராகவனை அவரது மகன் கைதாங்கலாகத் தூக்காத குறையாக மெதுவாக உள்ளிருந்து அழைத்து வந்தான்.

உடனே அகிலேஷ் பதறி... ராகவன் அருகில் சென்றான். 'சார்... சார்...' கூப்பிட்டான். பஞ்சடைந்த கண்களுடன் மெதுவாக ராகவன்... அகிலேஷைப் பார்த்ததும், புன்னகைக்க முயன்று தோற்றார்.

'என்னாச்சு?' அகிலேஷ் ராகவன் மகனிடம் விசாரித்தான்.

'ஒண்ணுமில்லை. அவருக்கு ஏற்கனவே வீசிங் ப்ராப்ளம் உண்டு. இதுல உடம்பும் சரியில்லாமப் போச்சு... அதுதான், பெட்லியே இருந்தாரு... சுத்தமா சாப்பிட முடியல... சரின்னு ஹாஸ்பிடலில் போய் அட்மிட் பண்ணலாம்னு இருக்கேன்.' சொல்லிவிட்டு ஆம்புலன்சில் மெதுவாக தன் அப்பாவை ஏற்றிப் படுக்க வைத்தான்.

அகிலேஷ் ஆம்புலன்சின் உள்ளே சென்று ராகவன் கைகளைப் பற்றினான். 'சார்... நத்திங் ஒர்ரி... ட்ரீட்மெண்ட் முடிஞ்சு சண்டே வந்துடுங்க... இந்தியா வெர்சஸ் பாகிஸ்தான் மேட்ச்... நாமதான் ஜெயிப்போம்.' நம்பிக்கையுடன் உற்சாகமூட்டினான்.

ராகவனும் தலையாட்டினார். அவருடைய கைகள் அகிலேஷின் கைகளைக் கெட்டியாகப் பிடிக்க முயன்று தோற்றது.

பிறகு வரும் வழியில் தியா கேட்டாள். 'வயசானாலே கஷ்டம்தாங்க...?'

அகிலேஷ் சிரித்துவிட்டுச் சொன்னான். 'எதுல கஷ்டம் இல்ல, தியா? குழந்தைல மத்தவங்களுக்குக் கஷ்டம்... அப்பறம் படிக்கிறது கஷ்டம்... நல்ல வேலை கிடைக்கிறது கஷ்டம்... அப்பறம் கல்யாணம், குழந்தை அதன் வளர்ப்பு... இதுவும் கஷ்டம்தான்... ஆனா, எல்லாக் கடமையும் முடிஞ்சு... கடைசியா நிம்மதியா வாழ்க்கையை அசைபோட்டு வாழலாம்னா, அப்ப உடம்பே கஷ்டமாயிடுது... அதே நேரம் மனசு தெம்பா இருந்தா கொஞ்சம் சமாளிக்கலாம். மனசுக்கு தெம்பு எது? மத்தவங்களோட அன்பான பேச்சுதான் அது! இது யாருக்கும் புரியமாட்டேங்குது! இருபத்தி நாலுமணி நேரத்துல... வீட்ல உள்ள பெரியவங்க கிட்ட ஒரு பத்து நிமிஷம் ஏன் ஆறுதலா அவங்களுக்குப் பிடிச்சதப் பத்திப் பேசக் கூடாது? இந்தப் பேச்சு அவங்களுக்குப் பெரிய தெம்பைக் கொடுக்கும்னு ஏன் தோணல? எல்லாரும் அந்தப் பருவத்தை அடையத்தான போறோம்? இந்த ராகவன் ஒரு கிரிக்கெட் பைத்தியம்! அவரைப் பார்க்கும்போது, கிரிக்கெட் பத்திப் பேசும்போது ஆளே குழந்தையாய்டுவாரு தெரியுமா?

'வாழ்க்கை பணத்துலயோ... இல்ல படிப்பிலையோ... அஸ்திவாரம் போட்டு ஆரம்பிக்கலாம். அதிர்ஷ்டம் இருந்தா, சொர்க்கமா கூட மாறலாம். ஆனா, உடலும் மனசும் ஒடுங்கற இந்தக் கடைசி அத்தியாய வாழ்க்கையை வாழறவங்களுக்கு ஆக்சிஜன்... மத்தவங்க அவங்களை அங்கீகரிச்சுப் பேசற சில வார்த்தைகள்தான்!

'இது வெட்டிப் பேச்சா தோணலாம்... அது பாக்குறவங்களுக்கு! நாளைக்கு அவங்களே வார்த்தைகளால் வாழறவங்களா மாறும்போதுதான்... அதன் அருமை தெரியும்!'

அகிலேஷின் பக்குவப்பட்ட விளக்கம், தியாவுக்கு மனதில் சிறு பொறி தட்டியது. அவள், ஆபீசைப் பெருக்கும் ஆயாவிடம்... வாட்ச்மேனிடம் மிக மேலோட்டமாகத்தான் பேசுவாள். இனி... கொஞ்சம் உட்புகுந்து விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது.

வெறும் சொற்கள்... அக்கறையோடு சென்றடையும்போது... அதன் பலன் பலரின் ஆயுளைப் பாதுகாக்கிறது என்பது எத்தனை நிஜம்! ●



நகைச்சுவை உணர்வு அவசியமா?

நண்பர் ஒருவர் காந்திஜியிடம், "வாழ்க்கையில் நகைச்சுவை அவசியமா?" என்று கேட்டார். அதற்கு காந்திஜி, "எனக்கு நகைச்சுவை உணர்வு இல்லாமல் இருந்திருந்தால், நான் வெகு காலத்திற்கு முன்பே தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" என்றாராம்.

விவசாயம் செழிக்க வேளாண்மைச் சுற்றுலா





செ.சரத்

சுற்றுலா என்பது இன்றைய மனிதர்களின் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாய் மாறிப்போய் உள்ளது. காரணம், பலரும் இன்றைய தினசரி வாழ்க்கையில் இருந்து சிலநாள் விடுபட்டு நிம்மதியையும், அமைதியான வாழ்வையும் அடைய முற்படுகின்றனர்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நம் பாரதப் பிரதமர், கடந்த சுதந்திர தினத்தன்று ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். “2022–க்குள் (75–வது சுதந்திர தினம்) நாம் ஒவ்வொருவரும் நமது குடும்பத்தை 15 சுற்றுலாத் தலத்திற்காவது அழைத்துச் செல்ல வேண்டும். அதில் நாம் சில இடர்பாடுகளைச் சந்தித்தாலும் நமது பாரதத்தின் பெருமையை, இயற்கையின் கொடையைக் குழந்தைகள் முதல் அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

மேலும் இதன்மூலம் இளைய சமுதாயத்திற்கு வேலைவாய்ப்பும் உருவாகும். அதேபோல் நல்ல 100 சுற்றுலாத் தலங்களை உருவாக்கி, அதில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஐந்து அல்லது ஏழு சுற்றுலாத்தலங்களைத் தரத்துடன் உருவாக்கி, அதன்மூலம் நமது பூமித்தாயின் அருமை, பெருமைகளைப் பாரினில் கூற வேண்டும். எங்கோ ஒரு நாட்டில் உள்ளவர் நம் நாட்டின் பெருமைகளை உணர்வதற்குள் நாம் உணர வேண்டும்” என்று பிரதமர் கூறியது உண்மையிலும் உண்மை.

இதனிடையே தான் சுற்றுலாவானது பல நிலைகளிலும் அவதாரங்கள் எடுத்து தற்போது வேளாண்மையிலும், வேளாண் சுற்றுலாவாக வளர்ந்து வருகிறது.

வேளாண்மைச் சுற்றுலா : உலகச் சுற்றுலா நிறுவனம் வேளாண் சுற்றுலாவை, “வேளாண் பண்ணையில் சுற்றுலாவாசிகளைத் தங்கவைத்து, அவர்களுக்கு உணவளித்து, வேளாண் பணிகளில் ஈடுபடவைத்து மேன்மை அடையச் செய்வதே” என்று விளக்கியுள்ளது.

இதுபோக, வேளாண் சுற்றுலா என்பது பலவற்றையும் உள்ளடக்கிய ஒன்றாகும். ஆம், வேளாண் அறுவடையைக் கொண்டாடுவது, தோட்டத்தில் விளைந்த பழங்கள், காய்கறிகளைத் தேவையான அளவில் சுற்றுலா வாசிகளே அறுவடை செய்வது, பண்ணைக் குட்டைகளில் மீன்பிடிப்பது, ஊரக வேளாண் சந்தையைப் பார்வையிடுவது, கிராமப்புறக் கைவினைக் கலைஞர்களிடம் பொருள்கள் வாங்குவது,

மாட்டுவண்டியில் சவாரி செய்வது, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வேளாண்மை சார்ந்த வகுப்புகளை நடத்திக் கற்றுக்கொடுக்க வைப்பது எனப் பலவற்றையும் கொண்டுள்ளது.

ஆயினும் வெளிநாடுகளில் பிரபலம் அடைந்த அளவுக்கு நம் இந்தியாவில் வேளாண்மைச் சுற்றுலா வளராமல் போனது ஒரு குறையே. அதனை நிவர்த்தி செய்யும் வகையில்தான் தற்போது விவசாயிகளின் வருமானத்தை 2022–க்குள் இரட்டிப்பு ஆக்குவோம் என்று மத்திய அரசாங்கம் சூளுரைத்துள்ளது. அதில் வேளாண்மைச் சுற்றுலாவும் முக்கியக் காரணியாய் அமைந்துள்ளது.

வேளாண்மைச் சுற்றுலாவின் வரலாறு : 1985–ஆம் ஆண்டில் இத்தாலிய தேசியச் சட்டக் கட்டமைப்பு வேளாண் சுற்றுலாவைக் கட்டமைத்தது. இதன் மூலம் சுற்றுலாவாசிகளைப் பண்ணைகளில் தங்கவைத்துக் கொள்ளலாம். இதனால் இயற்கையை நேசித்து வேளாண்மையை விரும்பி வரும் சுற்றுலாவாசிகளின் வரவு அதிகரித்து, இத்தாலிய விவசாயிகளின் வருமானமும் பெருக ஆரம்பித்தது.

அதன் பலனாய் விவசாயிகளும் விவசாயத்தை ஆர்வத்துடன் மேற்கொண்டு பல புதுமைகளையும் புகுத்தினர். இதனால் நாளடைவில் இத்தாலியில் உள்ள டஸ்கனி வேளாண்மைச் சுற்றுலாவிற்கே பெயர்போன ஒன்றாய் விளங்கி வருகிறது.

இதுபோலவே, நம் பாரதத்தின் முதுகெலும்பான வேளாண்மையைச் செறிவூட்டி வளர்க்க, வேளாண் சுற்றுலாவை நாமும் செயல்படுத்த வேண்டும்.

வேளாண்மைச் சுற்றுலாவின் வெற்றிக் கதையை மனதில் வைத்துத்தான் மகாராஷ்டிரா மாநிலத்தில் வேளாண்மைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்று 2004–ஆம் ஆண்டு பாண்டுரங் தவாரே அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் முன்னோடித் திட்டமாக மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பாரமதி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. பின் தொடர்ந்து 500 விவசாயிகளுக்குப் பயிற்சியும், 152 இடங்களும் தேர்வு செய்யப்பட்டன. இதனால் தொடக்கத்தின் முதலே அங்குள்ள விவசாயிகள் தங்களின் வருமானத்தில் 25 சதவீதக் கூடுதல் வருமானத்தைப் பெற்றனர்.

தொடர்ந்து வேளாண்மைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது, விவசாயிகளுக்கு வேளாண்மைச் சுற்றுலா சார்ந்த பயிற்சி அளிப்பது, அங்குள்ள இளைஞர்களைச் சுற்றுலா வழிகாட்டியாய் நியமிப்பது, சுற்றுலாவாசிகளுக்கு உணவு தயார் செய்ய மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் பணியமர்த்துவது இவையன்றி, மாநில அரசாங்கத்துடன் தொடர்பு ஏற்படுத்தி புனே மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் விவசாயிகளுக்குக் கடனும் கொடுக்கப்பட்டது.

கி.வா.ஜ.-வின் நகைச்சுவை



ஒரு நண்பரின் வீட்டிற்கு கி.வா.ஜ. சென்றார். நண்பர் அடுக்குமாடியில் குடியிருந்தார். புடவை உலர்த்துவதற்கு வெயில் படுகிற வகையில் வசதியான இடம் அந்த வீட்டில் இருக்கவில்லை.

வாசல் பக்கத்தில்தான் வெயில் அடித்துக் கொண்டிருந்தது. நண்பரின் மனைவி வாசல் கதவைத் திறந்துவைத்து, வெயில் படும்படியாகத் துவைத்த புடவையை அதன்மேல் காயப் போட்டிருந்தார். புடவையைப் பார்த்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்த கி.வா.ஜ.,

“இது என்ன புடவை தெரியுமா?” என்று நண்பரைக் கேட்டார்.

“ஏன் சாதாரணப் புடவைதானே?” என்றார் நண்பர்.

“அல்ல, இந்தப் புடவைக்கு ஒரு விசேஷச் சிறப்பு உண்டு. இதுதான் உண்மையான ‘வாயில் புடவை’ என்றார் கி.வா.ஜ.

இதன் விளைவாக 2014, 2015 மற்றும் 2016–ஆம் ஆண்டுகளில் கணக்காய்வு செய்ததில் முறையே 4, 5 மற்றும் 7 லட்சம் சுற்றுலாப் பயணிகளும், இதன் மூலம் அங்குள்ள விவசாயக் குடும்பங்களுக்கு ரூ.3.57 கோடி வருமானமும், பல இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்தது தெரிய வந்தது.

இதைக் கண்டு ராஜஸ்தான் அரசாங்கமும் பேரிச்சம் பழம் சார்ந்த வேளாண்மைச் சுற்றுலாவை மேம்படுத்த நடைவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இவை இன்றி பஞ்சாப், கர்நாடகம் மற்றும் குஜராத் முதலிய மாநிலங்களிலும் சில தனியார் அமைப்புகள் வேளாண் சுற்றுலாவைச் செயல்படுத்தி வருகின்றன.

நன்மைபயக்கும் வேளாண் சுற்றுலா: விவசாயிகள் தாங்கள் விளைவித்ததை அங்கேயே வரும் சுற்றுலா வாசிகளுக்கு விற்றுக் கொள்ளலாம்.


கிராமப்புறப் பகுதிகளில் வேலை வாய்ப்பை உண்டாக்கும்.

கிராமப்புற வாழ்க்கையையும் அதனோடு தொன்றுதொட்ட விவசாயத்தையும் அதன் கலாச்சாரம் சார்ந்த நடைமுறைகளையும் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

கிராமவாசிகளையும் நகர்ப்புறவாசிகளையும் ஒன்றிணைத்து நல்லதொரு கலாச்சாரப் பிணைப்பை உண்டாக்கும்.

விவசாயத்தின் நடைமுறைகளையும், அதன் மதிப்பையும் சுற்றுலாவாசிகளிடத்தில் ஏற்படுத்தும்.

தமிழ்நாட்டில் வேளாண்மைச் சுற்றுலா மேம்பட்ட நிலையில் இல்லை என்பது வேதனைக்குரிய ஒன்றாகும். நம் தமிழ்நாடு கலாச்சாரத்திற்கும், உழைப்புக்கும், வேளாண்மைக்கும் பெயர் போன ஒன்றாகும். இல்லையென்றால், 2017–இல் இந்திய அளவில் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் முதலிடமும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் இரண்டாமிடமும்



வகிக்க முடியுமா என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எனவே நம் அரசாங்கம் முன்வந்து, முதலில் இதனை அரசாங்கப் பண்ணைகளில் முன்மாதிரியாகச் செயல்படுத்தலாம். அவை மட்டுமின்றி, தற்போது வளர்ந்து வரும் 1000 விவசாயிகளை உள்ளடக்கிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்துடன் வேளாண்மைச் சுற்றுலாவை இணைந்து தொழிலாக மேற்கொள்ளும்போது, நல்ல இலாபத்தைப் பெறலாம்.


வேளாண்மைச் சுற்றுலா விவசாயிகளுக்கு நல்லதொரு வருமானத்தைக் கொடுப்பதுடன், அவர்களுக்கான கௌரவத்தையும் சமூகத்தில் ஏற்படுத்தித் தருகிறது. மேலும் நகர வாசிகளுக்கு விவசாயம் சார்ந்த கிராமிய பந்தத்தை உருவாக்குவதுடன், அவர்களை ஒரு மகிழ்ச்சிகரமான, அமைதியான இயற்கையோடு இயைந்த வாழ்விற்கு எடுத்துச் செல்கிறது.

எனவே, தற்போதைய காலகட்டத்தில் பலரும் இயற்கையை விட்டு, நம் பாரம்பரியத் தொழிலை விட்டு விலகியிருக்கும் சூழ்நிலையில், வேளாண்மைச் சுற்றுலாவென்பது ‘காந்தியின் இந்தியா’ அதன் கிராமங்களில்தான் வாழ்கிறது என்பதை மெய்ப்பித்துக் காட்டும். ●

கட்டுரை

நாயன்மாரின் தமிழ்ப்பணி

சைவ சமயத்தின் மாண்பைத் தம் வாழ்வில் விளக்கஞ் செய்தவர்கள் நாயன்மார். இவர்களில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் எனப்படும் முதல் மூவரைத் தவிர, கவிஞர்களாக இருந்தவர்கள் திருமூலர், காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், காரிநாயனார் ஆகியோராவர்.



இந்த எட்டு நாயன்மார்களே அறுபத்துமூன்று நாயன்மார்களின் பாடல் நெறி கொண்டு தமிழ்ப் பணியாற்றினர். பிறர் சமயப் பணியாற்றிச் சைவத்தை வளர்த்தனர்.


ஞானசம்பந்தர் : கி.பி. 7–ஆம் நூற்றாண்டிற்குரிய திருஞானசம்பந்தர் 16000 பாடல்களைப் பாடியவர் என்று கூறுவர். ஆயினும் கிடைத்துள்ளவை 394 பதிகங்களும் 4158 பாடல்களும் ஆகும். இவர் தம் பதிகத்திற்குத் தரும் பெயர் "திருநெறிய தமிழ்" என்பதாகும்.

சேக்கிழார் பெருமான் சம்பந்தருடைய திருமுறைகளில் மூல இலக்கியங்கள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் யாப்பியல் வரலாற்றில் புதிய பாவினங்களை மூல இலக்கியமாக வழங்கியவர் சம்பந்தர்.

பதின்மூன்றாண்டுகளில் ஆறுமுறை தம் ஊரில் இருந்து புறப்பட்டு ஏறத்தாழ 220 திருப்பதிகளுக்குச் சென்று பதிகங்கள் பாடியவர் சம்பந்தர். தனித்து அல்ல, அடியார் குழாமுடன் செல்லும் மரபை உண்டாக்கியவர் எனலாம்.

சங்க இலக்கியத்தின் அகத்திணை மரபிலும் தடம் பதித்தவர், சம்பந்தர். தன்னைத் தலைவியாகவும், தோணிபுரத்தீசனைத் தலைவனாகவும் பாவித்துப் பாடியவர். தமிழையும் இசையையும் மகோன்னதமான தெய்விக நிலைக்கு ஏற்றம் பெறச் செய்துள்ளார் ஞானசம்பந்தர்.

தெய்வச் சேக்கிழார், பெரிய புராணத்தில் சம்பந்தரின் அனைத்துச் சிறப்புகளையும் விதந்தோதிய இடங்களில், "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்லவும்" "இசை முழுதும் மெய்யறிவு இடங்கொள்ளும் நிலை பெருகவும்" அவர் பிறந்தார் என்று போற்றிப் பரவியுள்ளார்.



தமது தல யாத்திரையில் கண்ட ஊர்கள், மலைகள், ஆறுகள், பறவைகள், விலங்குகள், செடி,

பெ.சு. மணி

கொடி மரங்களின் இயற்கை வருணனைகளைப் பின்புலமாக வைத்துப் பதிகம் பாடியவர், சம்பந்தர். தமிழ்மொழி இயற்கை வருணனை ஆற்றல் பெற்றது என்பதையும் உணர்த்தியுள்ளார்.



திருநாவுக்கரசு நாயனார்: திருநாவுக்கரசு நாயனாரும் மூல இலக்கியங்களை வழங்கியுள்ளார். வேறு எந்தத் திருமுறைகளிலும் இல்லாத திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் ஆகிய நான்கும் அப்பர் பெருமான் திருமுறைகளில் இருக்கின்றன.

திருமுறைகண்ட புராணத்தில் இவருடைய பாடல்களின் எண்ணிக்கை 4900 என்று கூறப்பெற்றுள்ளது. ஆனால், இப்பொழுது கிடைத்துள்ள பாடல்களின் தொகை 3066 ஆகும்.

சம்பந்தர் போன்று தமிழ் யாப்புக்கு அப்பரும் புதிய யாப்புகளை முதன்முறையாக இடைக் காலத் தமிழிற்குப் புதிய இலக்கிய நன்கொடையாக வழங்கியுள்ளார். தமிழ் நெடுங்கணக்கினைப் பின்பற்றி முப்பது பாடல்கள் கொண்ட ஓர் அரிய பதிகத்தினையும் அருளியுள்ளார்.

‘தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன்’ என இசைத்து தேவார இறை இலக்கிய நெறிக்குரிய தமிழ் இயக்கவுணர்வையும் வெளிப்படுத்தியுள்ளார்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிடும் பொழுது அப்பர் பெருமானிடம் கண்டிக்கும் போக்கும் சீற்றமும் வெளிப்படுகின்றது. சம்பந்தரிடம் இப்போக்கு பாடல்களில் வெளிப்படவில்லை. ஆனால், சமண – பௌத்த சமயங்களைக் கண்டிக்கும்பொழுது சீற்றமும் குத்தலும் வீறுபெறுகின்றது.

தொண்டு நெறியின் மேன்மையை பக்தி இயக்கத்தில் முதன்மை இடம் அளித்து வலியுறுத்தியவர், அப்பர் அடிகள். சம்பந்தர் பாடல்களில் மிகுதியாக வெளிப்பட்ட இயற்கை வருணனை அப்பர் பாடல்களில் மிக அருகியே காணப்படுகின்றது.

சுந்தரர் : ஞானசம்பந்தரை அடுத்து பண் சுமந்த பாடல்களை மிகுதியாக அருளியவர் சுந்தரமூர்த்தி நாயனார். திருமுறை கண்ட புராணத்தில் இவர் 3800 பதிகங்கள் பாடியதாகக் கூறப்பெற்றுள்ளது. இப்பொழுது 100 பதிகங்கள் 1026 பாடல்களுமே கிடைத்துள்ளன.

சிவனடியார்களின் திருத்தொண்டுகளையும் பக்தித் திறங்களையும் உலகமறியச் செய்த பெருமை சுந்தரருக்கே உரியதாகும். சம்பந்தர், அப்பர் போன்று இறைவனைத் தமிழுடன் தொடர்புபடுத்தி, “பண்டைத் தமிழ் ஒப்பாய்” என்று பாடியுள்ளார், சந்தரர். இறைவனை ‘தமிழான்’ என்றும் குறிப்பிட்டுள்ளார் சுந்தரர்.

சம்பந்தர், நாவுக்கரசர் போன்று சுந்தரரும் அகத்திணை மரபுப் பாடல்களை இயற்றியுள்ளார். காதலனைப் பிரிந்து வருந்தும் நிலையில் தலைவி, நாயகனிடம் அன்னம், குருகு முதலிய பறவைகளை அனுப்பித் தனது நிலையை எடுத்துரைக்குமாறு வேண்டும் தூதுப் பாடல்கள் சுந்தரர் வாக்கில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.



சம்பந்தர், நாவுக்கரசர் பாடல்களைப் பெரிதும் ஆராய்ந்தவர் சுந்தரர். பேயோடு ஆடும் சிவபெருமான் வருணனைப் பாட்டில் சுந்தரர், காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகப் பாடல்களை நினைவூட்டும் வண்ணம் பாடியுள்ளார். பழமொழிகள், குறட்பாக்கள் ஆகிய

வற்றை சுந்தரர் தமது பாடல்களில் பயின்றுள்ளார்.

திருமூலர் : சைவத் திருமுறைகளில் பெரும்பான்மை தோத்திரங்களாகவும், திருத்தொண்டர் புராணம் சிவனடியார் களது வரலாறாகவும் இருக்க, திருமந் திரம் தோத்திர – சாத்திர நூலாகத் திகழ் கின்றது. உலகியலையும், மெய்ந்நெறியை யும் ஒருங்க வைத்து, மெய்ந்நெறியை முதன்மைபடக் கூறுவது திருமந்திரம். திருமூலரே, “மூவாயிரம் தமிழ்” என்றும் “தமிழ்ச் சாத்திரம்” என்றும் தம் நூலி னைக் குறிப்பிட்டுள்ளார்.

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னைநன்றாகத் தமிழ்செய்யு மாறே”

எனும் திருமூலர் வாக்கு தமிழ்மொழி ஆர்வலர்களால் பரவலாக எடுத் தாளப் பெற்று வருகின்றது. ‘தமிழ்’ செய்தல் என்பதன் தத்துவ – நுட்பம் ஆழச் சிந்திக்கத் தக்கது.

ஆகமச் சாரமாக பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மை யினையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால் வகை நெறிகளையும் தமிழ்ப் பாடல்களில் தருதல் என்பதைத்தான் “தமிழ் செய் யுமாறே” எனும் சொற்றொடர் குறிப்பிடுகின்றது. இங்கு ‘தமிழ்’ எனும் சொல் ‘ஆகமம்’ எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

கடவுட் கொள்கையை வைத்துச் சமூக சீர்திருத்த நோக்கை திருமந் திரத்தில் செறிவுறச் செய்தவர் திருமூலர். இறைவனை தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் உணர்த்தவல்லன என்றும் திருமூலர் கூறியுள்ளார்.

காரைக்கால் அம்மையார் : புனித வதி எனும் இயற்பெயர் கொண்டவர். இறைவனால் ‘அம்மே’ என்று விளிக்கப் பெற்றவர். பிறந்த ஊர்ப் பெயரும், ‘அம்மே’ எனும் விளியும் சேர்ந்த நாயன்மார் வரலாற்றில் காரைக்கால் அம்மையார் எனப் பதிவாகியுள்ளது.

பதினோராம் திருமுறையில் காரைக் கால் அம்மையாரின் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் காலம் கி.பி. 5 அல்லது கி.பி. 6 ஆம் நூற் றாண்டு எனக் கருதப்படுகின்றது.

மூல இலக்கியத்தைப் படைத்தளித் தவர் காரைக்கால் அம்மையார். பதிகம், இரட்டைமணிமாலை, அந்தாதி எனும் மூவகைப் பிரபந்தப் படைப்புகளுக்கு இவரே மூலவர். இவருடைய திரு வாலங்காடு பதிகம் மூத்த பதிகம் என்று பெயர் பெற்றது. முதல் மூவருக்கும் முன்பே பாடப்பெற்ற முதுமை கருதி மூத்த பதிகம் எனப் பெயர் பெற்றது. ஏழு பண்களையும், பன்னிரண்டு இசைக் கருவிகளையும் ஒரு பாட லில் அம்மையார் பட்டிய லிட்டுள்ள பாங்கு குறிப் பிடத்தக்கது.



காரைக்கால் அம்மையார்

இவரை தமிழ் இசை யின் தாய் என்றும் கூறப்படுவதுண்டு. அற் புதத் திருவந்தாதியில் சைவ சித்தாந்தக் கருத் தொன்றை அறிய உத வும். “அறிவானுந்தானே யறிவிப்பான் தானே…” என்று தொடங்கும் பாடல், சிவஞான போதம் இரண்டா வது சூத்திரப் பேருரையில் சிவ ஞான முனிவரால் ஆளப்பட்டுள்ளது.

பேயுருக் கொண்டவர், திருவாலங் காடு சிவபெருமானைத் தரிசனம் செய்யத் தலையால் நடந்து சென்றவர் எனும் சிறப்புக் குறிப்புகள் இவருடைய வரலாற்றில் கூறப் பெற்றுள்ளன. ஞான சம்பந்தர் திருவாலங்காடு செல்ல நினைத்த பொழுது, அதைத் தவிர்த்தார். ஏனெனில், அம்மையார் தலையால் நடந்த ஊரில் தாம் காலால் நடக்க விரும்பவில்லை என்று கருதினார்.

சேரமான் பெருமாள் நாயனார் : சுந்தரரின் நெருங்கிய நண்பர். இருவரும் இணைந்து தலயாத்திரை மேற்கொண் டனர். இவருடைய படைப்புகள், பொன் வண்ணத்தந்தாதி. ●

கட்டுரை


ஆங்கிலேய அதிகாரிக்குப் பரிசளித்த காந்திஜி

தென்னாப்பிரிக்காவில் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் காந்திஜி கலந்துகொண்ட போது, ஆங்கிலேய அதிகாரி ஸ்மட்ஸ் காந்திஜியைத் தனது பூட்ஸ் காலால் எட்டி உதைத்தார். அதில் காந்திஜியின் இரண்டு பற்கள் விழுந்தன. பிறகு காந்திஜியின் மார்பிலும் உதைத்தார். பிறகு காந்திஜியைச் சிறையில் அடைத்தார்.

தினமும் அந்த அதிகாரி, காந்திஜி இருந்த அறையைக் கடந்துதான் தனது அலுவலக அறைக்குள் போவார். அப்படி அந்த ஸ்மட்ஸ் அதிகாரி காந்திஜியின் அறையைக் கடந்து போகும்போது, அவரைக் காந்திஜி உன்னிப்பாகக் கவனித்தார். குறிப்பாக அவரது பாதங்களைக் கவனித்தார்.



ஆங்கிலேய அதிகாரி ஸ்மட்ஸ்



காந்திஜி, சிறையில் தனக்குக் கிடைத்த சில தோல் பொருள்களைக் கொண்டு ஜெனரல் ஸ்மட்ஸ்க்குக் கொடுக்க ஒரு ஜோடி பூட்ஸ்களைத் தயாரித்தார்.


காந்திஜி சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே வரும்போது, தான் தயாரித்த பூட்ஸ்களை ஜெனரல் ஸ்மட்ஸ்க்கு அன்புப் பரிசாகக் கொடுத்தார். இதை அந்த அதிகாரி எதிர்பார்க்கவில்லை. காந்திஜியின் பரிசுப் பொருளை உள்ளும் வெளியேயும் உற்றுப்பார்த்து காந்திஜியிடம் கேட்டார் : “உங்களது பரிசுப் பொருள் கனகச்சிதமாக உள்ளது. என்னுடைய பாதங்களை அளவெடுத்துத் தயாரித்தது போல் உள்ளது. எனக்குத் தெரியாமல் எனது பாதங்களை எப்படி அளவு எடுத்தீர்கள?”

அதற்குக் காந்திஜி சொன்னார்: “நீங்கள் எனது மார்பில் உதைத்ததற்கான

கி. தியாகராஜன்

பதிவு அப்படியே இருந்தது. சிறைக்குள் வந்தபிறகு நான் அதை அப்படியே படி எடுத்தேன். மேலும் நீங்கள் ஒவ்வொரு நாளும் எனது அறையைக் கடந்து போகும் போது சரிபார்த்துக் கொண்டேன்." காந்திஜியின் பதிலைக் கேட்ட அந்த அதிகாரி வெட்கித் தலைகுனிந்தார்.

பிறகு "உங்களது பரிசுப்பொருள் கால்களில் அணிவதற்கானதல்ல. தொழுவதற்கு உரியதாகும்" என்று கூறிய அந்த அதிகாரி, காந்திஜியின் பரிசுப் பொருளை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். அது இன்றும் புனே ஆகாகான் மாளிகையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.



மகாத்மா காந்தி

இங்கு நமது வாசகர்களில் சிலருக்கு ஒரு சந்தேகம் வரக் கூடும்; காந்திஜி யாவது பூட்ஸ் தயாரிப்பதாவது? நம்ப முடியவில்லையே என்று. இதற்கும் காந்திஜி வாழ்க்கையில் ஆதாரம் உள்ளது.

ஒரு சமயம் காந்திஜியின் செருப்புப் பழுதாகிவிட்டது. காந்திஜியின் காரிய தரிசி மனுபென் அந்தப் பழுதான செருப்பைக் கொண்டுபோய் செருப்புத் தைக்கும் தொழிலாளியிடம் கொடுத்துப் பழுதைச் சரிசெய்து கொடுக்குமாறு கேட்டார். அதற்கு அந்தத் தொழிலாளி 'கூலி எட்டணா கொடுக்க வேண்டும். ஒரு மணி நேரம் கழித்து வந்து வாங்கிப் போகலாம்' என்றான்.

மனுபென் திரும்பிவந்த போது, காந்திஜி வெளியே செல்லத் தயாராகி தனது செருப்பைத் தேடிக் கொண்டிருந்தார். மனுபென் நடந்ததைச் சொல்ல, காந்திஜி "என்னைக் கேட்காமல் ஏன் இப்படிச் செய்தாய்? அந்தத் தொழிலாளிக்குக் கூலி எட்டணாத் தர வேண்டும் என்கிறாய். இப்போது என்னிடம் எட்டணா இல்லை. உன்னிடமும் இல்லை. இதை அவனிடம் நாம் சொல்ல முடியுமா? ஒருவேளை அந்தத் தொழிலாளி அது என்னுடைய செருப்பு என்பதற்காகக் கூலி வேண்டாம் என்றால், அது நமக்குக் கௌரவம் ஆகுமா?" என்றார்.

தர்ம சங்கடத்திற்கு உள்ளான மனுபென், செருப்புத் தொழிலாளியிடம் போய் "நீ செருப்பை ரிப்பேர் செய்ய வேண்டாம். செருப்பை வாபஸ் கொடு" எனக் கேட்டார். அதற்கு அந்தத் தொழிலாளி"'இன்னிக்கு எனக்கு வந்த முதல் வேலை அது. அதனால் வேலை முடிக்காது திருப்பிக் கொடுக்க முடியாது" என்று சொல்லிவிட்டான்.

வேறு வழியின்றி மனுபென், "ஐயா! அது காந்திஜியின் செருப்பு! உடனே வேண்டும்" என்றுகூற, அந்தத் தொழிலாளி "அப்படியா! ரொம்ப சந்தோஷம். காந்திஜியின் செருப்பை ரிப்பேர் செய்வது எனக்குப் பெருமை. எனக்குக் கூலியே வேண்டாம். இரு! கொஞ்ச நேரத்தில் நான் சரிசெய்து கொடுத்து விடுகிறேன்" என்றான்.

மனுபென் அந்தத் தொழிலாளியிடம் சமரசமாகப் பேசி, அவனை காந்திஜியிடம் அழைத்து வந்தார். அந்தத் தொழிலாளியிடம் காந்திஜி, "என்னப்பா, என்னுடைய செருப்பை ரிப்பேர் செய்வதைப் பாக்கியமாகக் கருதுகிறாயா? நல்லது. அப்போது எனக்கு ஒன்றைச் செய்வாயா? என்னை உன் சீடனாக ஏற்றுக்கொண்டு செருப்புத் தைக்கும் கலையை எனக்கு நீ கற்றுக் கொடு" என்றார்.

காந்திஜியின் பேச்சைக் கேட்ட அந்தத் தொழிலாளி ஆனந்தத்தில் மூழ்கிப் போனான்.

காந்திஜி, அந்தத் தொழிலாளியின் இரு கரங்களையும் பிடித்து அவனது இருக்கையில் உட்கார வைத்தார். பிறகு அந்தத் தொழிலாளியின் எதிரில் அமர்ந்து கொண்டு அவன் செய்த பணிகளை மிகவும் பவ்யமாகவும், உன்னிப்பாகவும் கவனித்தார்.

இப்படித்தான் காந்திஜி செருப்புத் தைக்கும் தொழிலைக் கற்றுக் கொண்டார். ●


ஸ்ரீ துர்காதேவி திருக்கோயில், பத்தியூர்



ஆன்மிகம்

உழவிற்குத் தலைவணங்கும் உன்னதத் திருக்கோயில்





சிதம்பரம் இரவிச்சந்திரன்

கேரளா ஆலப்புழை மாவட்டம், கார்த்திகைப்பள்ளி தாலுகா, பத்தியூர் பஞ்சாயத்தில் அமைந்துள்ளது ஸ்ரீதுர்காதேவி திருக்கோயில். இந்தியாவில் புகழ்பெற்ற 108 துர்கை அம்மன் திருக்கோயில்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்தத் திருத்தலத்தில், திருவிதாங்கூர் அறநிலையத்துறையின் சார்பில், 'தேவஹரிதம்' என்ற திட்டத்தின்கீழ், வேளாண்மை செய்யப்பட்டு ஒரு புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது.

தரிசாக உள்ள கோயில் நிலங்களைப் பயிர்செய்து பசுமையாக்கும் இத்திட்டத்தின்கீழ் இரண்டரை ஏக்கர் தரிசு நிலத்தில், நெற்பயிர் விளைவிக்கப்பட்டுள்ளது. தரிசு பூமியைப் பொன்விளையும் பூமியாக மாற்றத் தேவையான நெல்விதை, இயற்கை உரங்கள் முதலியவற்றைக் கிராமப் பஞ்சாயத்து மனமுவந்து அளித்தது.

நாற்று நடுதல், களை பறித்தல் முதலிய பணிகளில் நூறு நாள் வேலைத் திட்டத்தின்கீழ் 50–க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பணி புரிந்தனர். இந்தப் பசுமைப் புரட்சியின் மூலம் பத்தியூர் பஞ்சாயத்து தரிசுநிலம் இல்லாத பஞ்சாயத்தாக மாறியுள்ளது. காயங்குளம் ஓநாட்டுக்கரா வேளாண் ஆராய்ச்சி நிலையம் உருவாக்கிய 'பாக்யா' என்ற நெல் ரகம் பயிரிடப்பட்டு அமோக விளைச்சல் எடுக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர் தவிர இஞ்சி, மஞ்சள், வாழை, பலவிதமானப் பூச்செடிகள், தென்னை, மா, வனத்தில் காணப்படும் மரங்கள் முதலியவற்றையும் நட்டு வளர்க்கப்படுகிறது. கோயிலுக்கு வெளிப்புறத்தில் உள்ள இடத்தில் காய்கறிகளும் பயிர் செய்யப்படுகிறது. நெற்பயிர் அறுவடைக்குப் பிறகு, எள் விதைக்கப்பட்டுள்ளது. டிராக்டர் பயன்படுத்தி நிலத்தைப் பண்படுத்தியது தவிர, மற்ற விவசாயப் பணிகள் அனைத்தையும் கிராம மக்களே செய்தனர்.

பாரம்பரிய ரீதியில் அரிவாளைப் பயன்படுத்தியே அறுவடை செய்யப்பட்டது. இங்குள்ள மகளிர் இப்பணியை எந்தப் பிரதிபலனையும்

எதிர்பார்க்காமல் செய்தனர்.

தரிசாகக் கிடந்த கோயில் நிலம், பொன் விளைந்து நெற்பயிர்கள் கதிர்களின் பாரம் தாங்காமல் புதுமணப் பெண் போல, நாணத்துடன் தலை குனிந்து நின்ற காட்சியைச் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து மக்கள் தங்கள் குழந்தைகளுடன் வந்து கண்டு மகிழ்ந்தனர்.

மூன்றே மாதங்களில் முட்செடிகளும், புதர்களும் மண்டிக் காடாகக் கிடந்த கோயில் இடம், பச்சை பசேலென்று பசுமைப் போர்த்தி நின்றது. நூறு பரை நெல் விளைந்தது. ஒரு கோயில் திருவிழா போலவே அறுவடை நடந்தது. இதன்மூலம் விவசாயத்தில் ஒரு புதிய கலாச்சாரம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுபோல மற்ற திருத்தலங்களில் செய்யப்பட்டால், வெற்றி நிச்சயம் என்பதை இந்த நிகழ்வு எடுத்துக் காட்டியுள்ளது.

விவசாயப் பணியின் ஆரம்பக் கட்டம் முதல் இறுதிவரை கிராம மக்கள், பஞ்சாயத்து ஊழியர்கள், அறநிலையத்துறை, வேளாண்துறை, விவசாய ஆராய்ச்சி நிலையம் முதலிய பல துறையினரின் உழைப்பின் மூலம் இந்த வெற்றி சாதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் ஒரு மாலையில் கோர்த்த முத்துக்கள் போல, ஒன்றிணைந்து செயல்பட்டதால் நூற்றாண்டுகளாகப் பாழாகக் கிடந்த கோயில் தரிசுநிலம் பச்சை பிடித்தது. பொன் விளையும் பூமியாக மாறியது.


இந்த வெற்றியுடன் நின்று விடாமல், இத்திட்டத்தைத் தொடர ஊர் மக்களும், கோயில் நிர்வாகமும் திட்டமிட்டுள்ளது.

நவம்பர் 2020 முடிவில் எள் விதை போடப்பட்டது. பூச்செடிகள், மஞ்சள், வாழை முதலியவை பக்தர்களால் தன்னார்வத்துடன் கொடுக்கப்பட்டு, நட்டு வளர்க்கப்படுகிறது. கோயிலின் அன்றாடத் தேவைகளுக்காக இவை அனைத்தும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இதுபோன்று, எல்லாத் திருத்தலங்களிலும் செயல்படுத்தப்பட்டால், கோயில்கள் வெறும் சடங்கு, சம்பிரதாயங்களுக்கு உரிய இடமாக மட்டும் இல்லாமல், உழவை உதாசீனப்படுத்திச் சோம்பித் திரிபவரை கலப்பையைப் பிடித்து மண்ணில் இறங்க ஊக்கம் கொடுக்கும். ஆன்மாவிற்கு ஆனந்தம் தரும் ஆலயங்கள் உழவையும் போற்றி வளர்க்கும் புண்ணிய பூமியாக மாறும். அதற்கு பத்தியூர் துர்காதேவி திருக்கோயில் உதாரணமாகத் திகழ்கிறது.

●

விநோதமான கோயில்



மதுரையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் நான்குவழிச் சாலையில் 25 கி.மீ. தொலைவில் உள்ளது ‘வலையங்குளம்’ கிராமம். இக்கிராமத்தின் நடுவே சுயம்புவாய்த் தோன்றிக் காட்சி தரும் தனலிங்கப் பெருமானுக்குக் கம்பீரமாய் ஒரு கோயில் உள்ளது.

இந்தக் கோயிலுக்குள் பெண்களை அனுமதிப்பதில்லை. கோயில் வாசலில் இருந்துதான் வழிபட வேண்டும். இந்தக் கோயில் மந்தைப் பகுதியில் செருப்பு அணிவது கிடையாது. இதன் அருகிலேயே முத்தமிழில் ஒன்றான நாடகம், ஆண்டுக்கு 100 நாட்கள் நடைபெறுகின்றது.

நாடகம் நடக்கும்போது, விடிய விடியக் கோயில் திறந்திருக்கும். அதில் வீற்றிருக்கும் பெருமான் நாடகப் பிரியர். அவர் கண்முன் நாடகம் நடைபெற வேண்டும் என்பதற்காகவே, கோயில் முன் நாடக மேடை கட்டப்பட்டுள்ளது. எனவே, இந்த மேடையில் வேறு நிகழ்ச்சிகளை ஊர்மக்கள் நடத்தமாட்டார்கள்.

– சு. இலக்குமணசுவாமி



NEWS 7 TAMIL தொலைக்காட்சிக்கு டாக்டர் ம. மாணிக்கம் பேட்டி...



கேள்வி : "தென்னிந்தியாவின் புகழ்பெற்ற நிறுவனத்தின் பிசினஸ் மேனாகிய நீங்கள், இந்த Health Care Industry – சேவைத் துறைக்கு வந்தது எப்படி?

பதில் : எங்களது குடும்பத்தில் உறவினர் ஒருவருக்குக் கடந்த 2002–இல் புற்றுநோய் வந்து குணப்படுத்த முடியாமல் இறந்துவிட்டார். அப்போது இந்த நோய்க்கு ஒரு தீர்வு இல்லையா என்ற யோசனை வந்தது. **எஞ்சினியரிங் இன்டஸ்ட்ரியில் ஒரு பிரச்சினை வருமாயின், Fishbone Analysis என்பதன் மூலம் அப்பிரச்சினையை அக்குவேர் ஆணிவேராகப் பிரித்து மூலத்தைக் கண்டுபிடித்துச் சரி செய்யலாம்.**

நம்முடைய உடம்பில் 'மைட்டோ காண்ட்ரியா' (Mito Chondria) எனும் ஒரு கிருமி உள்ளது. நம்ம உடம்பே அந்தக் கிருமிதான். நம்முடைய உடம்பில் உள்ள ஒரு சில கோடி செல்லில் பல கோடி 'மைட்ரோ காண்ட்ரியா' உள்ளது.

நாம் உண்ணும் உணவிலே 90 சதவிகித உணவை அந்த 'மைட்ரோ காண்ட்ரியா'தான் எடுத்துக் கொள்கிறது. நாம் எடுத்துக் கொள்கிற ஆக்சிஜனிலும் 90 சதவிகிதம் அந்த 'மைட்ரோ காண்ட்ரியா' தான் எடுத்துக் கொள்கிறது. இவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு அது எலக்ட்ரானைக் கொடுக்கிறது. அந்த எலக்ட்ரான்கள்தான் நமது உடம்பை இயக்குகின்றன.

அந்த எலக்ட்ரான்களுக்குள் இருந்து செயல்படுவது இந்த நுண்ணுயிர்கள்தான். இவை நன்றாக இருந்தால், எல்லாமே நன்றாக இருக்கும். கேன்சரோ, ரத்தக்கொதிப்போ எந்தவித நோய்களுக்கும் இந்த நுண்ணுயிர்களின் செய்வாண்மை சரியில்லை என்றால், அந்தச் செய்வாண்மையைச் சரிசெய்தால் பிரச்னையே இல்லாமல் பண்ணிவிடலாம்.

இதற்குத் தீர்வு காண நிறைய மருத்துவ ஆராய்ச்சிகள் அமெரிக்காவில் ஆரம்பித்துள்ளார்கள். இதனை Functional Medicine, Metabolic Medicine என்று சொல்வார்கள். நம்முடைய நாட்டில் இன்னும் இதுபோன்று எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.



அமெரிக்காவில் ரேடன் கிளினிக் என்று ஒன்று உள்ளது. இது 1975–இல் ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரியமான 45 ஆண்டுக் கால கிளினிக். அவர்களோடு சேர்ந்து நாங்கள் இந்த முயற்சியை எடுத்துள்ளோம்.

கேள்வி : Wellness Clinic ஆரம்பிக்கணும்னு ஆர்வம் எப்படி வந்தது?

பதில் : எனக்கு மருத்துவத் துறையில் எப்போதும் ஆர்வம் உண்டு. எனது தந்தையார் 1986–இல் உடல்நலமில்லாது இருந்தபோதும், எனது தாயார் 1996–இல் உடல்நலமில்லாது இருந்தபோதும் அவர்களின் அருகிலே இருந்து அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு மருத்துவர்களிடம் நிறைய விவாதித்துள்ளேன். அதன் ஒரு முயற்சியாகத்தான் இந்த யோசனை வந்தது. புற்றுநோய் பற்றி அதிகம் வாசித்தபோதுதான், புற்றுநோயைக் குணப்படுத்தத் தீர்வு இருக்கிறது என்று அறிந்தேன். அதன் பின்னரே இந்த முயற்சியில் இறங்கினேன்.

அதற்காக 2002–லிருந்து 2020 வரை 18 ஆண்டுகள் அதுகுறித்த பல ஆராய்ச்சிகள் செய்து, அதன்பின் 2018–இல்தான் இந்தக் கிளினிக்கை ஆரம்பித்தோம்.

ஸ்பிட் ஸ்கேன் Focus செய்து வந்தோம். இப்போ ஆட்டோ யூனியன் டிசிஸ், தோல்நோய் எல்லாவற்றிலும் கவனம் செலுத்துகிறோம். எல்லாவற்றுக்கும் இந்த ‘மைட்டோ காண்ட்ரியா’தான் காரணம். அதனைச் சரியாக வைத்திருந்தால், எந்தப் பிரச்சினையும் வராது என்பதுதான் எங்கள் கண்டுபிடிப்பு.

கேள்வி : புற்றுநோய்க்குச் சிகிச்சை கொடுக்க உங்களுக்கு எப்படி ஆர்வம் வந்தது?

பதில் : இப்படிப்பட்ட சிகிச்சையால் புற்றுநோயை எப்படிக் குணப்படுத்துவது என்று மட்டும் இல்லாமல், அதை எப்படி வேரோடு அழிப்பது என்பதுதான் எங்கள் முயற்சி. அதை வெட்டி எடுப்பது, எரித்துவிடுவது, விஷம் கொடுத்துக் கொல்வது போன்றவற்றைப் பற்றி நாம் வழக்கமாகச் சிந்திக்கிறோம்.

புற்றுநோய்க்கு ஹீமோதெரபி, ரேடியேசன், சர்ஜரி என்று 3 வகைதான் உள்ளன. அதைக் குணப்படுத்த அந்தச் செல்லையே (Cell) எதிர்ப் பரிணாம வளர்ச்சிக்கு மாற்ற வேண்டும். இப்போதுள்ள பாரம்பரிய மருத்துவம் அலோபதிதான்.

உலகில் பல்வேறு மருத்துவ வகைகள் இருப்பினும், இந்தியாவில்தான் அலோபதி, ஆயுர்வேதம், யுனானி, சித்தா என்று நிறைய சிகிச்சை முறைகள் உள்ளன. நாம் எல்லாவற்றிற்கும் மரியாதை கொடுத்து அந்தந்த மருத்துவத்தைப் பயன்படுத்தி வருகிறோம். இந்த மருத்துவச் சிகிச்சைகளில் சில வித்தியாசமாக வருகின்றன.

குறிப்பாக, புற்றுநோயைக் குணப்படுத்த முடியும் என்று சில மருத்துவ முறைகள் பரிந்துரைக்கின்றன. நாங்கள் அவற்றையும் எடுத்துக் கொண்டோம். அதோடு புதிய கண்டுபிடிப்புகளையும் சேர்த்து ஆராய்ச்சி செய்தோம். மாற்று மருத்துவ முறையில் உள்ள நல்ல விசயங்களையும் எடுத்துக் கொண்டு அலோபதி மருத்துவ முறையைத்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் அது மாறுபட்ட முடிவுகளைத் தருகிறது.

கேள்வி : புற்றுநோய் என்றாலே ஹீமோதெரபி அல்லது ரேடியேசன்தான் கொடுக்க வேண்டும். வேறு மாற்றுவழி இல்லை. இதைத்தான் மருத்துவர்கள் மூலமாக நாம் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அதிலிருந்து நீங்கள் எதை மாற்றச் சொல்கிறீர்கள்?

பதில் : ‘மைட்டோ காண்ட்ரியா’–வை நாம் சரிசெய்துவிட்டால், புற்றுநோயே வராத ஒரு கட்டத்திற்குக் கொண்டு போக முடியும். புற்றுநோய் என்பது நம்முடைய செல்லில் (Cell) உள்ள டிஸ்பன்சன் (செயலிழப்பு). அந்தச் செல் படிப்படியாகச் சாகாமல், உயிரோடு இருந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு செல்லின் ஆயுளுக்கும் கெடு இருக்கிறது. அது அந்த அழிவு நாளை மறந்து மார்க்கண்டேயன் மாதிரி உயிரோடு இருக்கிறது. அதுதான் புற்றுநோய்.

‘நீ மார்க்கண்டேயன் இல்லை. ஒருநாள் சாவு

உனக்கு உண்டு என்றால், அது செத்துப் போய் விடும். அந்தச் செல் அழிந்து அதற்குப் பதிலாகப் புது செல் வர வேண்டும். அப்படிச்செய்தாலே புற்றநோயை அழித்துவிடலாம். வளர்சிதை மாற்றம் என்று சொல்வதுபோல், உடல் வளர்ச்சிக்குச் செல்கள் தோன்றி அழிந்து கொண்டே இருக்கும். அவ்வாறு அழியாமல் செல்கள் கட்டிப்படுமானால், அந்தச் செல்களைத்தான் புற்றுநோய் என்கிறோம்.

கேள்வி : இந்த நோய்க்கு ஹீமோதெரபி, ரேடியேசன் கொடுக்கிறாங்களே, அந்த முறை நமக்குச் சரிப்பட்டு வருமா?

பதில் : அதைத் தப்புன்னு சொல்ல முடியாது. நிறைய கேன்சர் நோயாளிகளில் குணமாகிறவங்களும் இருக்காங்க, குணமாகாதவங்களும் இருக்காங்க.

குணமாகாதவங்களைப் பார்க்கிறபோது, ஏன் குணமாகலை, இவ்வளவையும் மீறி ஏன் இந்த நிலை எனக் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இதனை ஸ்டேஜ்–1, ஸ்டேஜ்–2, ஸ்டேஜ்–3, ஸ்டேஜ்–4 என்கிறார்கள்.

எங்களிடம் வருகிறவர்கள் எல்லாமே ஸ்டேஜ்–4 நிலையில் உள்ளவர்கள்தாம். அவர்கள் வழக்கமான (Normal) மருத்துவத்திற்குப் போகிறபோது ஸ்டேஜ்–1. அடுத்து, ஸ்டேஜ்–2வில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஸ்டேஜ்–3, ஸ்டேஜ்–4 என்கிறபோது, அந்த மருத்துவர்களுக்குச் சில பிரச்சினைகளும், கட்டுப்பாடுகளும் இருக்கிறது. முற்றிய நிலையில் உள்ள ஸ்டேஜ்–4 நோயாளிகளுக்குத்தான் நாங்கள் சிகிச்சை கொடுக்கிறோம். வேறு சிகிச்சைகளில் முடியாது என்ற சொன்ன பிறகுதான் கடைசியில் எங்களிடம் வருகிறார்கள்.

கேள்வி : மற்ற மருத்துவர்கள் கைவிட்ட நிலையில், கடைசியில் கோவிலுக்குப் போவதுபோல் உங்களிடம் ஏதாவது தீர்வு கிடைக்காதா என்று உங்களிடம் வருகிறார்கள், அப்படித்தானே...?

பதில் : ஆமாம், சரிதான். 'எத்தத் தின்னால் பித்தம் தெளியும்' என்பதுபோல, எல்லா நிலையிலும் கைவிடப்பட்டவர்கள்தாம் இங்கு வருகிறார்கள். அப்படி வந்தவர்களில் நிறையப் பேரை நாங்கள் குணப்படுத்தியும் இருக்கிறோம்.

கேள்வி : தங்களிடம் ஹீமோதெரபி, ரேடியேசன் எதுவும் இருக்கிறதா? சர்ஜரி எதுவும் செய்கிறீர்களா? எப்படி இந்த நோயைக் குணப்படுத்துகிறீர்கள்?

பதில் : அந்த முறைகள் எங்களிடம் இல்லை. அவற்றை நாங்கள் செய்வதுமில்லை. நாங்கள் தருவது எல்லாம் ஊட்டச்சத்துதான். உணவு, உணவுசார்ந்த மருந்துகள்தாம். வைட்டமின்–சி மற்றும் சில கூடுதல் சத்துக்கள் (Supplements). இவைகளைத்தான் கொடுக்கிறோம். உணவுமுறைகளை மாற்றி அமைக்கச் சொல்கிறோம். அநேகமாக இயற்கை வைத்தியம் மாதிரித்தான்.

அப்படிச் செய்கிறபோது, அமிலத்தன்மையாக இருக்கிற உடம்பு ஆல்ஹலினாக மாறுகிறது. உடம்பில் ஆல்கலைன் இருந்தால், நோய் வராது என்று ஒரு கோட்பாடு இருக்கிறது. அதற்கு ஏற்ப நமது உடம்பை ஆல்கலினாக மாற்ற வேண்டும். கோதுமை, அரிசி, பாலைத் தவிர்த்துக் காய்கறிகளையே அதிகமாகச் சாப்பிட வேண்டும். அவ்வாறு சாப்பிட்டாலே உடம்பின் அமிலத்தன்மை மாறி ஆல்கலைனாக மாறிவிடும். உடம்பின் தன்மையை மாற்றினால் கேன்சர் இருக்க வாய்ப்பில்லை.



கேள்வி : உணவு வகைகளை மாற்றுவதன் மூலமாக இந்தக் கேன்சர் கட்டி போய்விடுமா? அப்படியெனில், எவ்வளவு நாளில் போகும்?

பதில் : உடனே குணமாகிவிடும் என்று சொல்ல முடியாது. நிச்சயமாக 15 நாட்களில் உடலில் ஒரு வித்தியாசத்தைக் காட்ட முடியும். கட்டியின் தன்மை குறைந்து, அந்த வித்தியாசத்தைக் காணலாம். அப்போது அந்த நோயாளிக்கு மனதளவில் ஒரு தைரியம் ஏற்படும். அது நோயைக் குணப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். மூன்று வாரங்களில் நாம் முழுமையாகக் குணமாகிவிடுவோம் என்கிற மனத்தைரியத்தைத்

தருவதன் மூலம் நோயாளிகளுக்குள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திவிடலாம்.

கேள்வி : 'மிராக்கிள்'னு (அதிசயம்) பெயர் வச்சது அதனாலதானா? மிராக்கிள் பானம் அண்மைக் காலமாக விளம்பரங்களில் பார்க்க முடிகிறது. மேலைநாடுகளில் ஊக்க பானம் என்பார்கள். அது பாட்டிலில் இருந்தால் வேண்டாம் என்பார்கள். புதிதாகப் பழங்களையே சாப்பிடுவோம் என்கிற எண்ணம் இருக்கும். 'மிராக்கிள் பானம்' தயாரிக்கணும்னு ஏன் தோனிச்சு?

பதில் : இந்த மிராக்கிள் பானம் என்பது வைட்டமின்–சி. அதில் லைசின், புரோலின் என்று இரண்டு அமிலங்கள் இருக்கு. அப்புறம் பாஸ்போ–லிபிட்ஸ் (Phospholipids). நம்முடைய உடம்பில் அத்தனைத் திசுக்களுமே பாஸ்போலிபிட்ஸ் மூலம் ஆனதுதான். ஆனால் அதிகமாக நாம் பாஸ்போ–லிபிட்ஸ் சாப்பிடுவதில்லை. அதனாலதான் இந்த வயோதிகம், தோல் சுருக்கமெல்லாம் வருகிறது.

ஒவ்வொரு மிராக்கிள் பாட்டிலிலும் 3 கிராம் பாஸ்போலிபிட்ஸ், 1 கிராம் வைட்டமின்–சி, 500 மி.கிராம் லைசின், 90 மி.கி புரோலின் உள்ளது.

இதை நீங்க சாப்பிட்டீங்கன்னா, உணவுக் குழாய் வழியாக இல்லாம, செல் வழியாக உள்ளே போய்விடும். உலகிலே இது மாதிரியான ஒரு பானம் இதுவரை யாரும் தயாரிக்கவில்லை. நாங்க (பேட்டன் ரைட்டும்) காப்புரிமை வாங்கியிருக்கோம். இதைக் குடிக்கிறபோது நல்ல வித்தியாசம் தெரியும். இப்ப இதை சில மருத்துவமனைகளில் செல் வால்வு வழியாகக் கொரோனா நோயாளிகளுக்கும் கூட கொடுத்துப் பார்த்திருக்கோம். சாதாரணமாக 15 நாட்களில் குணமாகக் கூடிய கோவிட் நோயாளிகள் 5 – 6 நாட்களில் சரியாகியுள்ளனர். அதனால் கோவையில் 4 – 5 மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குத் தொடர்ச்சியாகக் கொடுத்து வருகிறார்கள்.

கேள்வி : மிராக்கிள் என்று சொல்கிறபோது, மாம்பழச் சாறுள்ள இந்தப் பானத்தை சுகர் நோயாளிகள் எப்படிப் புரிந்து கொள்வார்கள்?

பதில் : மாம்பழம் என்பது சர்க்கரை நோய்க்குப் பிரச்சினையல்ல. சர்க்கரைதான் சர்க்கரை வியாதிக்குப் பிரச்சினை. நாங்க இப்ப மிராக்கிளை இரண்டு வகையாகத் தயாரிக்கிறோம். சர்க்கரை உள்ள பானம். சர்க்கரையில்லா பானம். மாம்பழச்சாறை அதிகம் கலந்து சர்க்கரையில்லாமல் செய்திருக்கிறோம். சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இதை எடுத்துக் கொள்ளலாம்.

கேள்வி : மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக்கில் என்ன விதமான டிரீட்மெண்ட் கொடுக்கறீங்க?

பதில் : நோயாளி வந்தவுடன் முதலில் ரத்தப் பரிசோதனை மூலம் அவர்களது உடம்பைப் பரிசோதனை செய்கிறோம். அவர்களின் எதிர்ப்பு சக்தியைப் பரிசோதித்து அவர்கள் உடல்நிலை இருக்கும் தன்மைக்கு ஏற்றார்போல், அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கிறோம். முதலாவது உணவுப் பழக்கங்கள். இரண்டாவது தேகப் பயிற்சி. அடுத்தது O_2 - Oxygen, O_3 - Ozone. இவற்றை நேரடியாக உடம்பில் கொடுக்க இயலாது. அதனால் தண்ணீரில் கரைத்து, அந்தத் தண்ணீரை நரம்பு வழியாகக் கொடுக்கிறோம். அதனால் உடம்பில் நல்ல எதிர்ப்பு சக்தி வருகிறது.

வைட்டமின்–சி–யையும் நரம்பு வழியாகக் கொடுக்கிறோம். இந்த இரண்டையும் தான் முக்கியமாகச் செய்கிறோம். அப்புறம் **தெர்மல் ஆப்டிக் கேமரா** வைத்திருக்கிறோம். அது கேன்சர் இருந்தால் காட்டிவிடும். முக்கால் வாசிப்பேருக்கு வயிற்றில் கேன்சர், மலச்சிக்கல் மூலம் வரும். அந்த நோய்க்குப் பிரத்யேகமான இந்தக் கருவியைக் கனடாவிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறோம். அதன்மூலம் அவர்களுக்குக் குடலைக் கழுவி (Colon Wash) சுத்தப்படுத்தி விடுகிறோம். வயிற்றிலுள்ள 5 வருட உணவுத் துகள்களைக்கூடச் சுத்தம் செய்து உணவுக்குரிய பாக்டீரியாவைக் கொடுக்கிறபோது, நிறைய வித்தியாசம் தெரிகிறது.

கேள்வி : ஸ்டேஜ் 4-இல் வந்தவர்கள் குணம் அடைந்துள்ளார்களா?

பதில் : இதுவரைக்கும் ஸ்டேஜ் 4–இல் வந்தவர்கள் 80–லிருந்து 90 சதவீதம்வரை குணம் அடைந்துள்ளார்கள். ஒருவருக்கு ஆசனவாயிலிலோ, பெருங்குடல் முழுவதிலுமோ கேன்சர். நீங்கள் உயிரோடு இருப்பது இரண்டு மாதங்கள் தான். வேண்டுமானால் ஒரு மாதம்வரை நீடிக்கலாம் என்று மருத்துவர்களால் கைவிடப்பட்டவர். அவர் எங்கள் மருத்துவமனைக்கு வந்தார்.

அவருக்கு நாங்கள் சிகிச்சைக் கொடுத்தோம். நான்கு வாரங்களில் ஆசனவாயிலில் இரத்தம் வருவதைத் தடுத்து நிறுத்திக் குணம்

அடைய வைத்துள்ளோம். ஹீமோ தெரபி, ரேடியேசன் எதுவும் கொடுக்க வில்லை. இப்போது அவர் குணமாகி நடைப்பயிற்சி போகிறார்.

அதேபோல் மூளைக் கட்டியோடு (Brain Tumor) ஒருவர் வந்தார். வரும் போது அவர் சக்கர நாற்காலியில்தான் வந்தார். முப்பது நாட்களில் எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டார். ஸ்பெட் ஸ்கேன் செய்கிறபோது 40 சதவிகிதம் மூளைக்கட்டி பாதிப்புக் குறைந்துள்ளதை நாங்கள் அறிந்தோம்.





அந்த மாதிரி இன்னொரு பெண்மணி. வெவ் வேறு மருத்துவமனைகளில் ஆறு மாதம் ஹீமோ இதெல்லாம் பண்ணி, இனி முடியாதுன்னு ஸ்ட்ரெச்சரில் வீட்டுக்கு எடுத்துட்டுப் போறாங்க.. அவங்க எங்க கிளினிக்கிற்கு வந்து மூன்று மாதம் இருந்தாங்க. ஒரு வாரத்திலே ஸ்ட்ரெச்சரிலிருந்து வீல்சேருக்கு வந்துட்டாங்க. மூன்றாவது வாரம் நடக்க ஆரம்பிச்சிட்டாங்க. இப்போது மாதம் ஒரு தடவை பரிசோதனைக்கு வந்து செல்கிறார்கள்.

கேள்வி : மாற்று மருத்துவ விதிமுறைகளைப் பயன் பாட்டுக்குக் கொண்டு வருகிறபோது நிறைய எதிர்ப்புகள், விமர்சனங்கள் இருக்குமே. நம்ம மெடிசனுக்கு உலக அளவில் புரோட்டகால் பண்ணனும். அவற்றையெல்லாம் தாண்டி விஞ்ஞான ரீதியாக இதை நிரூபணம் செய்யணும். மனிதஉடல் என்பது பரிசோதனை செய்கிற கூடம் இல்லை. இதையெல்லாம் நீங்க சந்திச்சீங்களா?

பதில் : விமர்சனங்கள் இருக்கு. புரோட்ட காலை (Protocol) பொறுத்தவரை அமெரிக்கா வின் ரேடன் கிளினிக்கின் புரோட்டகாலை நாங் கள் பயன்படுத்துகிறோம். அவர்கள் 1000-க்கும் அதிகமான நோயாளிகளைப் பரிசோதித்து ஆய்வு செய்திருக்கிறார்கள். எங்களுடைய புரோட்ட காலையும் அவர்களிடம் காண்பித்துள்ளோம். அதை ஆய்வுசெய்து எங்களுக்கு அவர்கள் அனுமதி கொடுத்துள்ளார்கள். அதனால் உலக ரீதியாகப் பல்வேறு மருத்துவமனைகளுடன் சேர்ந்து ஓர் ஒருமித்த புரோட்டகாலைப் பயன்படுத்துகிறோம். எங்கள் வாதம் – நுண்ணு யிருக்கு ஊட்டச்சத்துக் கொடுத்தால் உடம்பு நன் றாக இருக்கும். எல்லாம் சரியாகிவிடும். மருந்தே உணவு. உணவே மருந்து அவ்வளவுதாங்க.

கேள்வி : இந்த மிராக்கிள் பானத்தை விளம்பரம் செய்து சேர்க்கும்பொழுது, நம் முன்னோர்கள் பழச் சாறைவிட பழம்தான் பலன் தரும் என்பார்கள். அந்தப் பழச்சாறு ஒரு புட்டியில் அடைத்துக் கொடுப்பது சரியாக இருக்குமா? அதில் பிரசர்வேட்டிவ் எல்லாம் கலந்து இருப்பார்களே...?

பதில் : பழச்சாறு என்பது ஒரு போர்வைதான். குடிக்கிறதுக்கு நாக்குக்கு ருசியாக இருக்கணும். குழந்தைகளுக்குப் பிடிக்கணும். அதனால் பழச் சாறு போர்வையில் நாங்க கொடுத்திருக்கிறது வைட்டமின்–சி. நானோபார்ட்டிகிள் பாஸ்போலிபிட்ஸ்தான் இதை எடுத்துப் போகும் கருவி. இந்தப் பழச்சாற்றில் பிரசர்வேட்டிவ் எதுவும் நாங்கள் கலப்பதில்லை. டெட்ரா பேக்கில் பயன் படுத்துவது வெறும் பழச்சாறு மட்டும்தான். மாங் காய்ச் சாறு காய்ச்சும்போது வரும் ஆவியைத் தான் இந்தப் பானத்தின் வாசனையில் நாங்கள் திருப்பிக் கொடுக்கிறோம்.

கேள்வி : உங்களுடைய தொழில் குழுமம் நிறைய துறைகளில் தடம் பதித்துள்ளன. இந்த வெல்னெஸ் கிளினிக் எப்படிப் போக வேண்டும் என்று நினைக் கிறீர்கள். இந்த மாற்று மருத்துவத்தை எப்படி மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்று ஆசைப் படுகிறீர்கள்?

பதில் : இந்த மாற்று மருத்துவமுறை என்பது இப்போது உலகெங்கும் வந்துவிட்டது. ஜெர்மன், ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளிலெல்லாம் இது இருக்கிறது. இது நம்ம இந்தியாவுக்குள்ளும் வரவேண்டும் என்பதே எங்கள் ஆசை. நாங்க தான் இதைச் செய்ய வேண்டுமென்பது இல்லை. இந்த முறையை எல்லோரும் பின்பற்றி, எல்லா மருத்துவமனைகளிலும் இதனையும் ஒரு சிகிச்சை முறையாகச் சேர்த்துக் கொண்டு வந் தால், நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும் என எதிர் பார்க்கிறோம்."

●

தொலைந்த கிராமம்

மண் சுவர் அகத்தி மரவிட்டம்
ஓட்டுக் கூரை கிழக்கு பார்த்த வாசல்
இடப்பக்கத் திண்ணையில் அப்பாவின் அப்பா...

கீழே கோழிக் கூண்டு வலப்பக்கம் அடுப்பங்கரை
அண்டா குண்டா பானை பண்டம் அம்மிக்கல்
வெண்ணை உறி மேலே புகை போக்கி...

முன்அறையில் ஆண்டியாய் முருகன்
இடப்பக்கம் அவன் அண்ணன்
வலப்பக்கம் அப்பன் சிவன்
அம்மை துணையுடன்.....

பின்புறம் மாட்டுத் தொழுவம்
இரண்டு காளைகள் ஒரு எருமை
நிறம்கருமை பெயர்லட்சுமி ஒரு ஆட்டுக்கல்
இரு குழுதாடி புண்ணாக்குத் தண்ணி

இன்னும் பின்னே
கயிற்றுக் கட்டில் வைக்கோல் படப்பு
சாணக் குவியல் சுற்றி முள்வேலி...

வடக்கு பார்த்து அத்தை வீடு
அண்ணனுக்கான அழகு தேவதை...
திறந்தவெளிக் கழிப்பிடம்
மகளிர்க்கு மட்டும் சொல்லாத நியதி...

வடக்கு எல்லையில் பிள்ளையார்
கிழக்கே ஆரம்பப் பள்ளி ஒரே ஆசிரியை
பக்கத்துக்கு ஊரிலிருந்து வந்து செல்வார்
உண்மைப் பெயர் ஜொஹன்னாள்...

முன்னால் கொடிக்கம்பம்
பின்னால் சிறு தோட்டம்
ஒரு முருங்கை ஒரு வாகை
சோளக் காடு மிளகாய் தோட்டம்



நடுவில் கிணறு வற்றாத ஊற்று
கரிசல் காட்டில் கம்புப் பயிர்
காதலர் ஒதுங்க மஞ்சள் அத்திப் புதர்...

இன்னும் போனால் கன்னிமார் கோயில்
கருப்பன் என்கிற காவல் தெய்வம்
குதிரை மேலே அதிரும் தோற்றம்
குலையும் நடுங்கும் கோபப் பார்வை...

ஊரின் நடுவில் சாவடி
ஒருபக்கம் சிறுசுகளின் குதூகலம்
மறுபக்கம் பெருசுகளுக்கு தாயக் கட்டம்
மாலை நேரத்தில் ஊர் பஞ்சாயத்து...

பாட்டிகளின் வளர்ந்த காதுகள்
அசைந்து ஆடும் பாம்படங்கள்
ஊருக்கெல்லாம் மருத்துவச்சி
கூலுப்பானை அப்பத்தா...

ஆண்களோ
இடையில் கோவணம் தலைப்பாகையுடன்
காந்தியின் வாரிசுகள்...
நாராயணசாமி நாயுடு மாமா
நகை ஆசாரி சித்தப்பா
கோயில் பூசாரி அண்ணன்
சித்ரவேல் பண்டாரம் இன்னொரு மாமா...

அங்கே சாதி இல்லை உறவு மட்டும்
அதற்கு மேல் மனிதம் இருந்தது
சாவு என்றால் ஊர்கூடி அழும்
சடங்கு என்றால் ஊரெல்லாம் பாடும்...

இன்று அக்கிராமம்
தோலுரித்த கோழியாய்
மணல் தொலைத்த ஆறு ஓடையானது...

விவசாயம் செத்துப் போச்சு
பள்ளிக்கூடம் இடிஞ்சு போச்சு...
ஒருபக்கம் தீப்பெட்டி
மறுபக்கம் பட்டாசு வேலை
வளர்ச்சியின் உச்சமாய் ஊருக்குள் 'டாஸ்மாக்'...

பழசு எதுவும் இன்று இல்லை
பாதி மனிதர்கள் பரலோகத்தில்
மீதி இங்கும் அங்கும்
கருப்பு வெள்ளைப் படமாய் எனது கிராமம்
தொலைந்து போச்சு..



கு. முனியசாமி







வித்தை அல்ல, வேதம் !

தேரோட்டியான அதிரதன் மற்றும் ராதையினால் வளர்க்கப்பட்டவன் கர்ணன். பிறப்பால் சத்ரியன். வீரத்துக்குக் குறைச்சல் இல்லை. இருந்தாலும் குரு வேண்டுமே?

துரோணாச்சாரியார் மறுத்துவிட, கிருபாச்சாரியாரிடம் ஒருநாள் அதிகாலை போகிறான் கர்ணன்.

மாணவர்களின் திறமையைச் சோதிக்க, வானத்தில் பறக்கும் ஒரு பறவையைக் குறி பார்த்து வீழ்த்தச் சொல்கிறார் குரு.

அர்ஜுனன் ஒரே அம்பில் பறவையை வீழ்த்திவிட்டுத் தேரேறிப் போய்விட்டான்.

இப்போது கர்ணனின் முறை.

அம்பை நாணில் பூட்டியாயிற்று. ஒரு கணம் பறவையை வானில் குறி பார்த்தவன், வில்லையும் அம்பையும் கீழே வைத்துவிட்டான்.

மிகச் சிறந்த வில் வீரனான கர்ணன் அப்படிச் செய்தது குருவுக்கு அதிசயம். காரணம் கேட்கிறார்.

"குருவே! இது மிகவும் அதிகாலை நேரம். இந்த நேரத்தில் ஒரு பறவை விண்ணில் பறக்கிறது என்றால், நிச்சயம் தன் குஞ்சுகளுக்கான உணவைக் கொண்டு போகிறது என்றுதான் பொருள்.

"இப்போது திறமைக்காக அதைக் கொன்றுவிட்டால், நான் வீரனாவேன். ஆனால் அந்த இளம் குஞ்சுகள் அனாதை ஆகிவிடும். எனவே, நான் அந்தப் பறவையைக் கொல்ல மாட்டேன்" என்றானாம்.

கலங்கிப் போன குரு சொன்னாராம், "கர்ணா! நீ கற்றது வித்தை அல்ல, **வேதம்**" என்று.



சாந்தா எனும் மெழுகுவர்த்தி

இந்தப் பிரபஞ்சம் தோன்றிய காலத்திலிருந்து காலம்தோறும் மனிதர்கள் இவ்வுலகில் ஜனித்து மரணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

"வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி... மக்களின் மனதில் நிற்பவர் யார்?"

பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் தாங்கள் வளரும் சூழ்நிலைக்கேற்ப தான், தன் குடும்பம், தனது சுகம் என்று ஏராளமான செல்வங்களைச் சேர்ப்பதிலே ஆர்வம் காட்டி வருகிறார்கள். அதையும் ஒரு சாதனையாக நினைத்துக் காலத்தை நகர்த்துகிறார்கள்.

அதில் ஒருசிலர் மட்டுமே எவ்வளவு செல்வம், பதவி கிட்டினும் எப்படிப்பட்ட ராஜ போக வாழ்க்கையின் வாரிசாகப் பிறந்திருந்தாலும் அவை யெல்லாவற்றையும் புறம்தள்ளிவிட்டுத் தனித்துவமாகத் தங்களை இவ்வுலகிற்கு அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வானத்து நட்சத்திரங்களிடையே நிலவாய் ஜொலிக்கிறார்கள். கடவுளுக்கும் சமமானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.



மருத்துவமனையில் குழந்தைகளுடன் டாக்டர் சாந்தா



இரா.பொன்னாண்டான்



மேனாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியுடன் டாக்டர் சாந்தா

அப்படிப்பட்டவர்களைத்தான் நாம் மகான், ஞானி, மகாத்மா, அன்னை, கர்மயோகி என்று பலபலப் பெயர்களால் அழைக்கின்றோம். அவரவர்கள் ஏதாவது ஒரு துறையில் தங்களது பங்களிப்பின் மூலம் இந்தச் சமூகத்திற்கான அரிய பணியைச் செய்து, வருங்காலம் அவர்களை எப்போதும் தன் நெஞ்சில் சுமக்குமாறு செய்துவிட்டுப் போய் விடுகிறார்கள்... அவர்களின் மறைவு நம்மை நிலை குலையச் செய்துவிடுகிறது...

அப்படிப்பட்ட ஒருவர்தாம்... புற்றுநோய் மருத்துவர் டாக்டர் சாந்தா அவர்கள்.



சர்.சி.வி. ராமன்



விஞ்ஞானி சந்திரசேகர்

இவரை நாம் எந்த அடைமொழி சொல்லி அழைப்பது என்று தெரியவில்லை. நோயாளிகளின் அருகிலேயே இருந்து அவர்களைத் தன் குழந்தைகளைப் போலக் கவனித்துக் கொண்டதால், அவரை 'அன்னை' என்று அழைப்பதா?

புற்றுநோயிலிருந்து மனிதர்களைக் காப்பதையே தன் கடமை, குறிக்கோள் என்று தனி அவதாரம் எடுத்து, யுத்த களத்தே தனித்து நின்று போராடும் வீராங்கனைபோல் விளங்கிய அவரை அந்தச் சக்தியின் அம்சம் என்பதா?

மனித உயிர்களை மலிவாகக் கருதும் இந்தக் காலத்தில், அந்த உயிர்களைக் காக்கும் அரிய பணியில் ஈடுபடுவதற்குத் திருமணம் ஒரு தடையென்று கருதி, அதையும் உதறிவிட்டுத் துறவி போல் வாழ்ந்த இந்தத் துய்மையான ஆத்மாவை கர்மயோகி என்று அழைத்தால் அது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், எந்தப் பலனையுமே எதிர்பார்க்காமல் பரந்தாமன் சொன்ன கீதையின் விளக்கமாக வாழந்து காட்டியவர் டாக்டர் சாந்தா அவர்கள்.

புற்றுநோய் என்றால் மரணம்தான் என்ற கொடிய வார்த்தையை மருத்துவர்களே உபயோகித்து வந்த ஒரு காலத்தில், இவர் மருத்துவ உலகிற்குள் நுழைந்தார். புற்றுநோய் பற்றிய அச்சத்தைப் போக்கி, அதையும் குணப்படுத்த முடியும் என்கிற உலகளாவிய சிந்தனையை மருத்துவ உலகிற்கு உணர்த்தினார். அந்த நோயுடன் வரும் நோயாளிகளின் மரண பயத்தைப் போக்கிய மாதரசியாகத் திகழ்ந்தார் டாக்டர் சாந்தா.

புற்றுநோய் குறித்த ஆராய்ச்சியில் எந்த ஒரு சாதகமான முடிவும் உலகின் எந்த நாட்டில் கிடைத்தாலும், அந்தப் பரிசோதனையின் வெற்றியை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நோயாளிகளுக்குக் கிடைக்கச் செய்தார்.

தனது வாழ்நாளை புற்றுநோய் நோயாளிகளின் புனர்வாழ்விற்காகவே அர்ப்பணித்தவர். எல்லா வளமிருந்தும் இளமை என்கிற ஈர்ப்புப் பருவம்கூட அவரது சேவை மனப்பான்மையிடம்

தோற்றுப் போனது சொல்ல வொன்னா சோகம். டாக்டர் சாந்தாவைப் படைத்த இறைவனே வியக்கத்தக்க சம்பவம் இது.

இளம் வயதில் சாந்தா விஞ்ஞானியாக வர வேண்டும் என்று அவர்தம் பெற்றோர் விரும்பினார்கள். ஆனால் சாந்தாவோ தேர்ந் தெடுத்தது மனித உயிர் களைக் காக்கும் மகத்தான மருத்துவப் பணி.



மேனாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாமுடன் டாக்டர் சாந்தா

1927 மார்ச் 11–இல் சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். இரண்டு அறிஞர்களை ஏற்கனவே தாங்கிய குடும்பம் அது. நோபல்பரிசு பெற்ற விஞ்ஞானி சர்.சி.வி.ராமன் சாந்தா வின் தாத்தாவின் சகோதரர் ஆவார். மற்றொரு நோபல்பரிசு பெற்ற விஞ்ஞானி சந்திரசேகர், இவரது தாய் மாமா ஆவார். சாந்தாவின் சேவை யும் நோபல் பரிசுக்குத் தகுதியானதே. இவர் மருத்துவரான பின் 1953–இல் கனடாவின் டொரண்டோ நகரில் புற்றுநோய் சிகிச்சை தொடர்பாகப் பணியாற்றினார்.

1954–இல் சென்னை அடையாறில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி ஆரம்பித்த புற்றுநோய் மருத்துவ மனையில் மருத்துவராகப் பணியில் சேர்ந்தார். பணியில் சேர்ந்த முதல் 3 ஆண்டுகள் எவ்வித ஊதியமும் பெறா மலே பணிபுரிந்தார். காலப்போக்கில் மருத்துவமனையின் வளாகத்திலேயே தங்கிப் பணிபுரிந்தார்.

அவருடைய சேவை மனப்பான்



பாரதப் பிரதமர் நரேந்திர மோடியுடன் டாக்டர் சாந்தா



மையின் உச்சமாக அவர் திருமணம் செய்து கொள்ளாமலே நோயாளிகளுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். 1984–இல் அதே அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

வெறும் 12 படுக்கையுடன் தொடங்கிய இந்த மருத்துவமனை மையம் இன்று 450 படுக்கைகளுடன் தென்னிந்தியாவிலேயே புற்றுநோய்க்கான மிகப்பெரிய மருத்துவமையமாகத் திகழ்கிறது. இந்த மகத்தான சாதனைக்குப் பின்னால் சாந்தா என்கிற சாந்தம் நிறைந்த முகமே தெரிகிறது.


அரசாங்கமோ, ஒரு தனிநபரோ ஒரு திட்டத்திற்கான நிதிநிலையை ஒதுக்கி அதற்கான ஓர் இயக்குநரையும் நியமித்துச் செயல்பட அனுமதித்து விட்டுச் சென்றுவிடுகிறது.

ஆனால் எத்தனை இயக்குநர்கள் அந்த நோக்கத்தை நிறைவேற்றுகிறார்கள்? அந்தத் திட்டங்களைத் தனது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்பவர்கள்தாம் இங்கே அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அதை நாட்டுக்காக, மக்களுக்காகக் கொண்டு சேர்க்கும் ஓர் அர்ப்பணிப்பு மனதோடு தனது பணியைச் செவ்வனே செய்தவர் டாக்டர் சாந்தா அவர்கள். இந்த மருத்துவமனையை உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை மையமாக மாற்றுவதற்கு அரும்பாடுபட்டார்.

இவரது சேவைக்காக மத்திய – மாநில அரசுகள் பல்வேறு விருதுகளை அளித்தாலும், அவற்றாலும் இவரை கௌரவிப்பது என்பது முழுமையடையாத ஒன்றுதான்.

மக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே தனது 93 வயதையும் மருத்துவ உலகிற்காக அளித்தவர். புற்றுநோய் என்கிற ஒரு மாயமான மரண பிம்பத்தைத் தனது உழைப்பால் போராடித் தகர்த்தவர். காலம் அவரை அழைத்துச் சென்றிருந்தாலும், அவருக்கான ஓர் உயரிய ஆசனம் மக்கள் மனதில் எப்போதும் இருக்கும். ‘பாரத ரத்னா’ விருது டாக்டர் சாந்தாவுக்கு வழங்கப்படுமானால், அது பாரத ரத்னா விருதுக்கே பெருமை சேர்க்கும். ●

மகிழ்ச்சி!



மகிழ்ச்சி என்பது வாழ்வின் அடிநாதம்
மனித வாழ்வின் இனிய சங்கீதம் - அது
மாபெரும் சபையை மயக்கும் மந்திரச் சாவி
மாசில்லா மனதைத் திறக்கும் மாயவிளக்கு

அவரவர் தமக்கு அவரவர் மகிழ்ச்சி
அறுவடைத் திருநாள் உழவனுக்கு மகிழ்ச்சி
மழலையின் சிரிப்பு தாய்க்கு மகிழ்ச்சி
மழையின் சாரல் மண்ணிற்கு மகிழ்ச்சி

பார்த்துக் கட்டிய சிறுவீடு மகிழ்ச்சி
பார்க்காத நண்பனைப் பார்த்தால் மகிழ்ச்சி
அறத்துடன் வாழும் வாழ்க்கை மகிழ்ச்சி
அன்பாய்ப் பகிர்ந்தால் துன்பமும் மகிழ்ச்சி


பாடல் என்பது மனதிற்கு மகிழ்ச்சி
விளையாடல் என்றும் சிறுவர்க்கு மகிழ்ச்சி
ஆடல்கூட சிலருக்கு மகிழ்ச்சி - ஆனால்
தேடல் என்பதே வாழ்வின் மகிழ்ச்சி

மகிழ்ச்சி என்பது வெளியில் இல்லை - இதை
புரிந்து கொண்டால் இல்லை தொல்லை
மயக்கம் தெளிந்து தயக்கம் தவிர்ப்போம்
மகிழ்ச்சியை என்றும் மனதில் விதைப்போம்!

ஹரீஷ் சின்னராஜன்

கருமையத்தை நாம் கற்பனைதான் செய்துகொள்ள வேண்டும். கருமையத்தை மும்மலங்கள் களப்படுத்துகின்றன என்பதும் நமது அனுமானம்தான். அதனைச் சுத்திகரிப்பது ஒரு தொடர் முயற்சி. இவை எல்லாமே எண்ணங்களில்தான் ஏற்படுகின்றன என்கிற அருள்தந்தையின் அகவெளியை அருள்நிதி எஸ்.கே.எம். தெளிவாகச் சித்தரித்துள்ளார்.

– இ.ஆர்.



கருமையம் (Genetic Centre)



ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் பற்றிச் சைவ சித்தாந்தம் பேசுகிறது. இவை மூன்றும்தான் கருமையத்தில் களங்கங்களை ஏற்படுத்துகின்றன என்ற கருத்தும் இருந்து வருகிறது.

கருமையத்தின் தூய்மையைக் களங்கப்படுத்தக் கூடியவை நமது தீய எண்ணங்களும், தீய செயல்களும்தான் என்பதைப் பற்றி அருள்தந்தை ஆழமாகப் பேசுகிறார். அத்தீயவை நான்கு.

நிறைவேறாத நமது மனதில் அடைத்து வைத்திருக்கும் ஆசைகளும், கற்பனையான எதிர்பார்ப்புகளும் முதலானவை.

மற்றவர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து அதன் காரணமாக அவர்களுடைய சாப அலைகளைப் பெறுதல் இரண்டாவது.

உணவு, உறக்கம், உழைப்பு, உடல் உறவு, எண்ணம் ஆகியவற்றில் அளவு முறையைக் கடைப்பிடிக்காமல் இருப்பது. அதனால் உடல்நலம் பாதிப்பு, மனச்சோர்வு, தவறாகச் செயல்படுதல் மூன்றாவதாகும்.

நான்காவது, பொறாமை. பிறருடைய புகழைக் கண்டு மனம் பொறுக்காமை. மற்றவருடைய மகிழ்ச்சியையும், வெற்றியையும், நலத்தையும் சீர்குலைக்க விரும்பும் சின்ன புத்தி. பொறாமைதான் இதற்கெல்லாம் காரணமாகும்.

உடலிலே நோய், உள்ளத்திலே

களங்கம் இவை இரண்டுமே கருமையக் களங்கத்திற்கு அடையாளமாகும். அருள்தந்தை சுருக்கமாகச் சொல்வது : இறையுணர்வு பெற்றவர்களும் சிந்தனையாற்றலால் உயர்ந்தவர்களும் விழிப்பு நிலையில் நின்று, விளைவை அறிந்து செயல்புரிவார்களானால், கருமையத் தூய்மையை அவர்கள் எளிதாகப் பெற்றுக் காக்கலாம்.

இதற்குமாறாக, கல்வியறிவு பெறாதவர்களும், சிந்திக்கும் திறம் குறைந்தவர்களும் கருமையத் தூய்மை பெறுவதற்கு எளிய வழி உண்டு என்பதை அருள்தந்தை விளக்கியுள்ளார்.



அருள்நிதி எஸ்.கே.எம். மயிலானந்தன்

தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்

1. பெற்றோரை, குருவை ஆட்சித்தலைவரை, தெய்வத்தை மதித்து வாழ்தல் வேண்டும். இதற்குக் கல்வியறிவு அவசியமில்லை.
2. ஒழுக்கம், கடமை, ஈகை மூன்றும் இணைந்த அறநெறியைப் பின்பற்றுதல் வேண்டும்.
3. அகத்தவப் பயிற்சியை முறையாகச் செய்தல் வேண்டும்.
4. இரத்தம், காற்று, உயிர், சீவகாந்தம் இவை தடையின்றி ஓடி உடலைக் காத்துக்கொள்ளுமாறு உரிய உடற்பயிற்சிகளை அளவோடு செய்தல் வேண்டும்.
5. பெற்றோரை, கணவன் – மனைவியை, குழந்தைகளைப் பொறுப்போடும், அக்கறையோடும் காத்திட வேண்டும்.
6. இறைநிலையை உணர்ந்து அதனோடு அடிக்கடி ஒன்றுதல் வேண்டும்.
7. இயற்கை வளத்தையும், நாம் உற்பத்தி செய்கிற பொருட்களையும், பிறர் உபயோகிக்கும் பொருட்களையும் சேதப்படுத்துதல் கூடாது.
8. இயற்கை என்ற பேராற்றல் கட்டமைத்த ஒவ்வொரு உடலின் பெருமையை உணர்ந்திட வேண்டும். உடலுக்குள் அறிவாக விளங்குவது தெய்வத்தின் ஒளியே என்றும் அதனை மதித்தும், ஒத்தும் உதவியும் வாழ்தல் வேண்டும்.
9. உள்ளத்தில் பகை, வஞ்சம் எதையும் வைத்துக் கொள்ளுதல் கூடாது. மன்னிப்பும், கருணையும் கொண்ட உள்ளத்துடன் எல்லோருடனும் இன்முகத்தோடு பழகுதல் வேண்டும்.
10. தேசம், மதம், சாதி, இனம், மொழி இவற்றால் மனிதரை வேறுபடுத்துதல் கூடாது. எல்லோரும் இயற்கையின் மக்கள் என்ற நினைவிலேயே வாழ்தல் வேண்டும்.

இப்பத்து அம்சங்களையும் கடைப்பிடித்தால், கருமையத்தில் மேலும் களங்கங்கள் ஏற்படாது. கருமையத்தில் ஏற்கனவே உள்ள வினைப் பதிவுகளான களங்கங்களைத் தூய்மை செய்து கொள்வதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும். கருமையக் களங்கத்தை முழுமையாகப் போக்கித்

தூய்மை செய்து கொள்வதற்கு, **அகத் தவப் பயிற்சி** மிகமிக அவசியமாகும்.

அகத் தவத்தின் நிறைவில் நாம் ஒவ்வொருவரும் சங்கல்பம் செய்வதற்காக அருள்தந்தை அருளியிருக்கும் இரண்டொழுக்கப் பண்பாட்டின் சாரம் :–

முதலாவது, எவருக்கும் மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ மனதுக்கும் உடலுக்கும் துன்பம் இழைக்கக் கூடாது.

இரண்டாவது, தேவை உள்ளவர்களுக்கும், துன்பத்தினால் வருந்துபவர்களுக்கும் உடல் ஆற்றல், அறிவின் ஆற்றல், பொருட்கள் இவற்றைக் கொண்டு இயன்றவரை உதவிசெய்ய வேண்டும்.

மனித அறிவைப் பற்றிக் கூர்ந்துணர்ந்த மெய்ஞ்ஞானிகள் அதன் நுண்மாண் நுழைபுலன் பற்றிக் கூறியுள்ளார்கள். அது நுண்ணிய பெருமை வாய்ந்தது. ஊடுருவி ஆராயத்தக்க அறிவுநிலை அது. இப்பேரறிவு எல்லா மக்களிடமும் இயல்பாக அமைந்திருக்கிறது.

ஆனால், தினசரி வாழ்வில் அவ்வறிவு போதிய அளவு பயன்படாமல் உள்ளது. மறைபொருள் உண்மைகளை விளங்கிக் கொண்டு, அதன் விளைவாகக் கிடைக்கும் விழிப்போடு வாழ்வது மனித சமுதாயத்தில் இன்னும் முழுமையாக அது உருவாகவில்லை.

இக்காலத்தில் மனித அறிவு தத்துவம், விஞ்ஞானம் இரண்டிலுமே உச்ச நிலையை நாடி உயர்ந்து கொண்டே வருகிறது. மறைபொருட்களின் மூலமான பிரபஞ்சப் பேராற்றலான காந்தத்தைப் பற்றி எளிதில் நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

கம்ப்யூட்டர் முதலிய நுட்பமான காந்த ஆற்றலின் இயக்கக் கருவிகள் பரவலாக இக்காலத்தில் மனித வாழ்வில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. காந்தநிலையை அறியும் ஆராய்ச்சி வளர்ந்து வருகிறது. அதன் மூலம் கருமைய அமைப்பு பற்றியும் தன்மை, இயக்கம் அவற்றின் விளைவுகள் பற்றியும் மனிதனுக்குத் தெளிவு ஏற்பட வேண்டும்.

அறிவு மிக அவசியம்; தெளிவு மிகமிக அவசியம்.

வாழ்க வளமுடன்!

திருநீறு பூசிக்கொண்ட மாணவன்!



ஒருமுறை வாரியார் சுவாமிகள் வடலூரில் இருந்து ஈரோட்டுக்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அதே ரயிலில் பயணம் செய்த ஒரு மாணவர் இவரைப் பார்த்துக் கிண்டலாக, "ஐயா! ஏன் நெற்றிக்கு வெள்ளையடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டு நக்கலாகச் சிரித்தான்.

அதற்கு, "தம்பீ! குடியிருக்கின்ற வீட்டிற்குத்தான் வெள்ளையடிப்பார்கள். காலியாக இருக்கும் வீட்டிற்கு யாரும் வெள்ளையடிக்க மாட்டார்கள். என்னோட நெற்றியில் பகுத்தறிவு குடியிருக்கின்றது. அதனால் நான் வெள்ளையடித்துக் கொண்டேன்" என்றார் நகைச்சுவையாக...

இரயிலை விட்டு இறங்கும் பொழுது, அந்த மாணவன், வாரியாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, "சிறிது திருநீறு கொடுங்கள் சுவாமி!" என்று கேட்டு வாங்கி நெற்றியில் திருநீறு பூசிக் கொண்டான்.

இதுபோல, சந்தர்ப்பத்திற்கு ஏற்றார் போல் நகைச்சுவை கலந்த அறிவுரை வழங்குவார் வாரியார் சுவாமிகள்.



தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
SUPREME
SPECIAL
SELECT
Pasteurised Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

சண்டிகேசுவரர் யார்?

சிவன் கோயிலுக்குச் செல்பவர்கள் எந்தச் சன்னதியில் நிற்க மறந்தாலும், கண்டிப்பாக ஒரு சன்னதி முன் அவசியம் செல்வார்கள். அங்கே தவநிலையில் அமர்ந்திருக்கும் சிவனடியாரைத் தரிசித்துவிட்டுக் கைகளைத் தட்டி அல்லது சொடுக்கிவிட்டு நகர்வார்கள்.

ஆமாம். சிவத்தலத்தில் இருந்து ஒருபோதும் விலகாத சண்டேஸ்வரர் அவர். யார் அவர்? அவர் கதை என்ன? அவர் முன் கைதட்டலாமா? கூடாதா?



மூர்த்திகளுள் ஒருவராக இறைவனோடு எழுந்தருளும் பேறுபெற்ற இவர், 63 நாயன்மார்களுள் ஒருவர். கும்பகோணத்தை அடுத்த ஆடுதுறைக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது சேய்ஞ்ஞலூர்.

இவ்வூரில் அந்தணர் மரபில் வந்த எச்சதத்தன் – பவித்திரை தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு விசார சருமன் என்றொரு மகன் இருந்தான். ஐந்து வயதிலேயே வேத சிவ ஆகமங்களைக் கற்காமலேயே அறிந்தார். வேத பாடசாலையில் பயின்ற அவர், கலைகளுக்கெல்லாம் பொருள் முடிவாய்த் திகழ்வது தில்லைக்கூத்தனின் திருவடியே எனச் சிந்தை தெளிந்தார்.

ஒருநாள் கன்றுடன் சென்ற பசு ஒன்றை மேய்ப்பன் அடிப்பதைக் கண்டார் விசாரசருமன். 'பசு தெய்வம். அதனைத் துன்புறுத்தாதே! என்று கூறி, 'அன்பில்லாத நீ மாடு மேய்க்கத் தகுதியற்றவன். இனி இந்த ஜீவன்களை மேய்க்கும் பொறுப்பை நானே மேற்கொள்கிறேன்' என்று சொல்லி அன்றுமுதல் அவரே மாடு மேய்க்கலானார்.

பசுக்கள் சந்தோசித்தன. விசாரசருமனின் அருகில் சென்றதும், கறவாமலே பால் பொழிந்தன. அந்தப் பால் இறைவனை அபிஷேகிக்க ஆகுமே என்று நினைத்த விசாரசருமன், ஆற்று மணலில் லிங்கம் அமைத்துப் பசும்பாலால் இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்து பூஜித்தார்.

விசாரசருமன் செய்த பூசையைக் கண்ட சிலர், பால் வீணாவதாக எச்சதத்தனிடம் புகாராகக் கூறினார்கள். நடப்பதைத் தாமே நேரில் காண விரும்பினார் எச்சதத்தன்.


மறுநாள் விசாரசருமன் வழக்கம் போல் பசுக்களை ஓட்டிச் சென்று எப்போதும் போல் நீராடி, மணல் லிங்கம் அமைத்துப் பாலாபிஷேகம் செய்து வணங்கினார். அதைக் கண்ட தந்தையாருக்குக் கோபம் மூண்டது. கையிலிருந்த கோலால் விசாரசருமனின் முதுகில் அடித்தார். அதைப்

புலவர் க. சுகுமாரன்

பொறுத்துக் கொண்டு பூசையிலேயே கவனமாக இருந்தார். மேலும் கோபத்தோடு பாற்குடங்களைக் காலால் எத்தினார் எச்சதத்தன்.

அவ்வளவுதான், இறைவனுக்குரிய பாலைக் கொட்டியவர் தந்தை என்றும் பாராமல், அங்குக் கிடந்த கோல் ஒன்றை எடுத்து அவரது கால்களின் மேல் வீசினார் விசாரசருமன். அதுவே மழுவாகி எச்சதத்தனின் கால்களைத் துண்டித்தது.

அப்போது விசாரசருமனுக்குச் சிவபெருமான் உமாதேவியுடன் விடையின் மேல் வந்து காட்சி கொடுத்தார். “பெற்ற தந்தையையே எம்பொருட்டு வெட்டினை, இனி நாமே உனக்கு



அடுத்த தாதை (தந்தை) என்று கூறி, அணைத்து உச்சிமோந்து மகிழ்ந்தார்.

அதோடு விசாரசருமரை தம் தொண்டர்களுக்குத் தலைவர் ஆக்கி ‘நாம் உண்ட பரிகலமும், உடுப்பவையும் சூடுபவையும் உனக்கே உரிமையாகும்படியும் சண்டீசன் என்னும் பதவியையும் தந்தோம்” என்று திருவாய் மலர்ந்தார். அதற்கு அடையாளமாகத் தன் முடியிற் சூடியிருந்த கொன்றை மாலையைச் சூட்டியருளினார்.

சண்டீசர் மணல் லிங்கத்திற்குப் பாலினால் திருமஞ்சனம் ஆட்டிச் சிவபூசை செய்த இடம் ‘திருஆப்பாடி’ என்ற திருத்தலமாக இன்று விளங்குகிறது.

சண்டேசுவர நாயனார் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோருக்கும் முற்பட்டவர். பதினொரு திருமுறைகளிலும் அவர் பாராட்டப் பெற்றிருக்கிறார்.

சேக்கிழார், பெரிய புராணத்தில் அவர் வரலாற்றை 59 பாடல்களில் அழகுபெற அருளியுள்ளார். இதில் சண்டேசுவரரைச் சிறிய பெருந்தகையார், சேய்ஞ்ஞலூர் பிள்ளையார், சிறிய பெருந்தோன்றலார், பக்தி முதிர்ந்த பாலகனார் என்றெல்லாம் புகழ்ந்து போற்றுகிறார்.

சிவாலயம் சென்று வழிபட்ட பலனைப் பக்தர்களுக்குக் கிட்டச் செய்தவர் இவர்தான். அதேசமயம் எந்நேரமும் சிவ தியானத்தில் ஆழ்ந்திருக்கும் இவர் முன் கைதட்டவோ, நூலை இவர் மீது போடவோ வேண்டியதில்லை. இவரைத் தரிசித்தாலே போதும். தமது சுவாசத்தினாலேயே பக்தர்களை உணர்ந்து உரிய பலனைக் கிட்டச் செய்வார் என்பதுதான் உண்மை.

நல்வாழ்த்துக்களுடன்!



ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983

விவாதம்

விவசாயப் போராட்டம் வேளாண் சட்டத்துக்கு எதிரானது அல்ல!

கடந்த 88 நாள்களாக டெல்லித் தலைநகரத்தில் காசிப்பூர், சிங்கு, திக்ரி ஆகிய மூன்று நுழைவுவாயில்களில் பஞ்சாப், ஹரியானா விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.



மக்களவையிலும், மாநிலங்களவையிலும் மத்திய அரசு நிறைவேற்றிய மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து இப்போராட்டம் நடந்து வருகிறது. இந்தப் போராட்டம் பஞ்சாப் மாநிலத்தில் பிரதானமாகவும், ஹரியானாவில் சற்றுக் குறைவாகவும், உத்தரப் பிரதேசத்தில் மேலும் குறைவாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேசமயம் தென்னிந்தியாவில் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத் முதலிய மாநிலங்களிலும் மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், பீகார் முதலிய வட மாநிலங்களிலும் பெரிய தாக்கம் எதையும் இப்போராட்டம் ஏற்படுத்தவில்லை.



பிரதமர் நரேந்திர மோடி

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், டிராக்டர்களில் வந்து டிராக்டர்களிலேயே கூடாரம் அமைத்துத் தங்கிப் போராடுகிறார்கள். அங்குக் கடுங்குளிர் என்பதால், அவர்கள் கஷ்டப்படுவது உண்மை. ஆனாலும் அதையும் பொருட்படுத்தாமல், போராட்டக் களத்தில் வாலிபால் விளையாடுகிறார்கள், மல்யுத்தம் செய்கிறார்கள், உபன்யாசம் பண்ணுகிறார்கள். இவையெல்லாம் அவர்களின் நேரத்தைப் போக்கவும், சோர்வு வராமல் இருக்கவும் செய்யப்படுபவை எனப்படுகிறது.

அவர்களுக்குச் சாப்பிடச் சுடச்சுடச் சப்பாத்தி வந்து கொண்டே இருக்கிறது. அதற்குரிய உணவுப் பொருள்கள் டிராக்டர்களில் இறக்குமதி ஆகின்றன. பெரியவர்களும், பெண்களும், குழந்தைகளும்கூட இந்தப் போராட்டத்தில் ஏதோ திருவிழாவிற்கு வருவதைப் போல் வந்து கலந்து கொள்கிறார்கள்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், நமது தேசத்தின் குடியரசு தினத்தன்று காவல் துறை அனுமதியுடன் டிராக்டர் பேரணி நடத்தினார்கள். அந்தப் பேரணியில், சட்டம்

ஒழுங்கைப் பராமரிக்கக் குறிப்பிட்ட பாதையில் தான் பேரணியை நடத்த வேண்டும் என்று காவல் துறை நிபந்தனை விதித்தது. போராட்ட சங்கங்களும் அதற்கு ஒப்புக் கொண்டன.

ஆனால், குடியரசு தினத்தன்று அனுமதிக் கப்பட்ட நேரத்திற்கு முன்பாகவே டிராக்டர்களில் ஏறி, அனுமதிக்கப்படாத பாதைகளில் ஊர்வலம் புறப்பட்டுப் போனார்கள். அதனால் தேசத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த குடியரசு தினத்தின் அணிவகுப்பைப் பற்றிய மக்களின் கவனம் சிதைந்தது.

போராடும் விவசாயிகள் பேரணியைச் சட்டத்திற்குப் புறம்பாக நடத்தியதால், அமைதி யாக அதை நடத்தியதாகச் சொல்ல முடியாது. ஏறக்குறைய 300–க்கும் அதிகமான காவல்துறை அதிகாரிகள் மீது கல்வீச்சு நடந்தது. 200–க்கும் அதிகமான காவல்துறை அதிகாரிகள் காயம் அடைந்தார்கள். காயம் அடைந்தவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். அதோடு டெல்லி செங்கோட்டையில் குடியரசு தினத்தன்று பிரவேசித்த விவசாயிகள், தேசியக் கொடியை இறக்கி அவமரியாதை செய்தார்கள்.

அதுமட்டுமல்ல, அகாலிதளக் கட்சிக் கொடியைக் கம்பத்தில் பறக்கவிட்டார்கள். "இது ஒரு தேசிய அவமானம் என்று போராடும் விவ சாயிகள் சங்கங்களின் ஒருசில சங்கங்கள் அதிருப்தி தெரிவித்தன. அதனால் போராட் டத்தைக் கைவிட்டு வெளியேறவும் தீர்மானித் தனர்."

விவசாயிகள் அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதாகச் சொல்லப்பட்டு இருந் தாலும், உண்மையில் தலைநகரத்து நுழைவு வாயிலை அடைத்து வாகனங்களைத் தடுத்துப் போராடினார்கள். இவ்வாறு நடந்த இந்தப் போராட்டம், போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்துத் தலைநகரையே ஏறக்குறைய முற்றுகை இட்டது எனக் கூறலாம்.

இந்த முற்றுகையை அமைதிப் போராட்டம் என்று சொல்லுவதா? வன்முறையின் மாறுவேடம் என்பதா? அது விவாதத்துக்குரியது.

இதற்கு முன்பு உச்சநீதிமன்றத்தில் விவசாய சங்கங்கள் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிமன்றம், விவசாயிகளுக்குப் போராடுகிற உரிமையுண்டு என்பதை ஒப்புக் கொண்டது. அதே சமயம் விவசாயிகள் நடத்தத் திட்டமிட்டுள்ள டிராக்டர் பேரணி நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உரியதல்ல எனவும் அரசாங்கத்தின் சட்டம் – ஒழுங்குப் பிரச்சனை என்பதாகவும் கூறிவிட்டது.

சட்டம் – ஒழுங்குப் பிரச்சனையை உண்டாக்கும் இப்பேரணியை நடத்தும் விவசாய சங்கத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை காவல்துறையை அநேகமாக ஏமாற்றிவிட்டது என்றே சொல்லலாம். ஒப்புக்கொண்டபடி, அந்தப் போராட்டம் அன்றைக்கு அப்படி நடக்கவில்லை.

இந்தப் பின்புலத்தில், தொடர்ந்து போராடி வருகின்ற விவசாய சங்கங்களைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசு குறிப்பாக பிரதமர் அந்த மூன்று சட்டங்களையும் ஒன்றரை வருடத்திற்கு ஒத்திவைத்துக் கொள்கிறோம் என்ற ஓர் அறிவிப் பையும் செய்தார். அதனால் போராட்டத்தைக் கைவிட்டு, விவசாயிகள் சகஜநிலைக்குத் திரும்புமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கும் முன்பு உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு இந்த மூன்று சட்டங்களையும் தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு ஆலோசனை தெரிவித்தது. பேச்சுவார்த்தை நடத்த 4 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழுவையும் அமைத்தது. அதற்கும் மத்திய அரசும் ஒப்புக் கொண்டது.









ஆனால், போராடும் விவசாய சங்கங்கள் பிடிவாதமாக மத்திய அரசு இந்த மூன்று சட்டங்களையும் ரத்து செய்துவிட்டதாக அறிவித்த பிறகுதான், போராட்டம் வாபஸ் பெறப்படும் என்று உறுதிபடக் கூறிவிட்டன.

சட்டம் – ஒழுங்குப் பிரச்சனையாக உள்ள இதனைத் தடுக்க நுழைவுவாயிலில் காவல்துறை தடைகளை உருவாக்கி, டிராக்டர்களை முன்னேற விடாமல் செய்யத் திட்டமிட்டனர். இதனை மத்திய அரசின் அடக்குமுறை என்று விமர்சனம் செய்யப்பட்டது.

இத்துடன் பாப் பாடகி ரியாண்ணா என்ற பெண்மணியும், அயல்நாட்டைச் சேர்ந்த வேறு சில நபர்களும் இந்தியாவில் நடைபெறும் விவசாயப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

வெளிநாட்டுவாசிகளுக்கு இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதற்கு என்ன உரிமை இருக்கிறது?

போராடும் விவசாயிகளே பாப் பாடகி போன்றோரைக் கண்டித்து அறிக்கை விட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. செய்யாவிட்டாலும் பரவாயில்லை. இந்த அயல்நாட்டுகாரர்களின் அறிக்கைகளால் உற்சாகமும், ஊக்கமும் அடைந்திருக்கிறார்கள். இது அவர்களின் தேசபக்தியை காட்டாது என்பதில் சந்தேகமில்லை.

இறுதியாக, இந்தப் போராட்டத்திற்குக் காரணமான அந்த மூன்று சட்டங்களும் என்னதான் விவசாயிகளுக்கு விரோதமாக இருக்கின்றன என்று ஆழமாக சார்பு இல்லாமல் சிந்தித்துப் பார்த்ததால் சில விசயங்கள் பரிமாறிக் கொள்ளலாம்.

இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது, மாநிலங்களவையில் அவசரகதியில் நிறைவேற்றி விட்டதாக ஒரு குற்றச்சாட்டு பாரதிய ஜனதா கட்சி கூட்டணி ஆட்சி மீது சாட்டப்பட்டுள்ளது. ஆனால், அன்று எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து, இந்தச் சட்டத்தின் சாராம்சங்களை விவாதிக்க விடாமல் தடுத்துக் கூச்சலிட்ட காரணத்தால்தான் அச்சட்டம் அவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதையும் மறுக்க முடியாது.


கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளை அடிப்பதற்கு இந்தச் சட்டம் உதவுகிறது என்றும் ஒரு விமர்சனம் வைக்கப்படுகிறது. இது உண்மைதானா என்பதை எப்படிப் பரிசீலிப்பது?

விவசாய அமைச்சருடன் 11 முறை விவசாய சங்கங்கள் நடத்திய பேச்சுவார்த்தை அனைத்தும் தோல்வியில் முடிந்துவிட்டன. அந்தப் பேச்சுவார்த்தைகளில் இந்தச் சட்டம் பற்றிய விளக்கத்தைச் சம்பந்தப்பட்ட விவசாய சங்கங்கள் கோரிப் பெற்றிருக்க முடியும். ஆனால் அதற்கு மாறாக ஒவ்வொரு கூட்டத்திலும் அந்த மூன்று சட்டங்களை ரத்து செய்யும்படிதான் வலியுறுத்தப்பட்டதே தவிர, விவாதத்திற்குரிய, சந்தேகத்துக்குரிய கார்ப்பரேட்களின் சலுகைக்கு உரியதாகச் சொல்லப்படும் சட்ட அம்சங்களைப் பற்றி ஒரு முறைகூட விவாதிக்கவில்லை.

இரண்டு சமரசங்கள் ஏற்பட்டன. ஒன்று, டெல்லியைச் சுற்றியுள்ள கோதுமை வயல்களில் கோதுமையை அறுவடை செய்தபின் தீ வைத்து எரிக்கப்படுவதால் ஏற்படும் புகைமூட்டத்தைத் தடுக்க அபராதம் விதிக்கப்படும் என்ற அரசின் ஆனையை ரத்து செய்யுமாறு விவசாய சங்கங்கள் சார்பில் கேட்கப்பட்டது. மத்திய அரசும் அதனை உடனே ரத்து செய்துவிட்டது.

அதேபோல், இன்னொரு சட்டம் மின்சாரக்

கட்டணத்தில் கொண்டு வந்த சில மாற்றங்களைச் செய்யக் கூடாது என்றும் அவர்களாலே கோரப்பட்டது. அதற்கும் மத்திய அரசு ஒப்புக்கொண்டது.



பேச்சுவார்த்தையில் மிச்சம் உள்ள மற்ற இரண்டு பிரச்சனைகளையும் பேசுவதற்குள் விவசாய சங்கங்கள் ஒரே குரலாக முதலில் மூன்று வேளாண்மைச் சட்டங்களையும் ரத்துசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து முன்வைத்து வந்தன.

அந்த மூன்று சட்டங்களில் அப்படி என்னதான் கொடூரம் உள்ளது என்பது பாமர விவசாயிகள் யாருக்கும் தெரியாது. பாமர விவசாயிகளை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் கமிஷன் மண்டிகள் இந்தப் போராட்டத்தை மறைமுகமாகத் துண்டிவிட்டு, அவர்களுடைய போராட்டச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டு தொடர்ந்து மத்திய அரசை எதிர்த்துப் போராட உதவிசெய்து வருகின்றன.

கமிஷன் மண்டிகள் அவ்வாறு செய்வதற்கான காரணம் என்ன?

பிரதமர் மோடி மீதுள்ள எதிர்ப்புத்தான். நாள்தோறும் பிரதமர் நாற்காலியில் மோடி அமர்ந்து நாள்களையும், மாதங்களையும், வருடங்களையும் வெறுமனே கடத்தி விடுவாரானால் யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால், அவரோ பனி கொட்டுகிற லடாக் பகுதிக்குச் சென்று ராணுவ வீரர்களை உற்சாகப்படுத்துகிறார். தினசரி மிரட்டுகின்ற பாகிஸ்தான் பயங்கரவாதிகளை அடக்கி ஒடுக்குகிறார். எல்லைப் புறத்தில் ஆக்கிரமிப்பு செய்த சீன ராணுவத்தை அச்சுறுத்தித் தடுக்கிறார்.

தேசத்திற்கு ஏற்படும் அவமானங்களையும், ஆபத்துகளையும் தடுக்க முயற்சிக்கிறார். அதேசமயம் உள்நாட்டில் 11 கோடி கழிப்பறைகளைக் கட்டிக் கொடுத்துப் பாமர மக்களுக்கு உதவுகிறார். 9 கோடி சமையல் உருளைகளைக் கொடுத்து விளிம்புநிலை ஏழை மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்குகிறார். இப்படிப் பல...

இவையெல்லாம் செய்யாமல், வெறுமனே அவர் இருப்பாரானால் அவர் மீது எதிர்க்கட்சிகளுக்கு எந்தக் கோபமும் வராது. இவற்றைச் செய்கிற காரணத்தால், ஆட்சியைப் பிடிக்கலாம் என்று திட்டமிடுகிற காங்கிரஸ் கட்சிக்கு அவநம்பிக்கை ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தால் கமிஷன் மண்டி ஏஜன்டுகளுக்கு ஆண்டுக்கு ரூபாய் 10 ஆயிரம் கோடிக்கு இழப்பு ஏற்படுகிறது.

அராஜகத்தாலே ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்கிற மம்தாஜிக்கு அவருடைய கட்சியையே காப்பாற்ற முடியாமல் தவிக்க நேருகிறது. 2–ஜி ஊழல் கட்சிகளுக்கு பிரதமர் மோடியைப் பிடிக்கவில்லை. இவ்வாறாகப் பலவற்றைப் பட்டியலிடலாம்.

அதனால் இந்த நீண்ட சித்தரிப்பின் மூலமாக, நாம் எதையாவது புரிந்துகொள்ள முடியுமானால், அது விவசாயிகளின் இந்தப் போராட்டம் மூன்று வேளாண்மைச் சட்டங்களுக்கு எதிரானது அல்ல என்பது மட்டும்தான். இது மோடிக்கு எதிரானது மட்டுமே.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நிறைவு நாளில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய பிரதமர், விவசாயிகளின் மீது அதிகப் பரிவு காட்டினார். அவர்களில் வயதானவர்கள் போராடுவதை அவர் விரும்பவில்லை. அவர்களை வீட்டிற்கு அனுப்பச் சொன்னார்.

அதுமட்டுமல்ல, விவசாயச் சட்டங்கள் மூன்றும் விவசாயிகளுக்கு நன்மை செய்கிறதா என்பதைப் பரிசோதித்துப் பார்த்து நன்மை செய்யவில்லை யென்றால், அதைப் பரிசீலனை செய்யலாம். அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை விவசாயிகள் அளிக்க வேண்டும் என்று பிரதமர் வறுபுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் மோடிக்கு நிரந்தரத் தோல்வியை, வீழ்ச்சியை, சரிவை, சறுக்கலை உண்டாக்கிவிட வேண்டும் என்பதற்குத்தான் இப்போராட்டம். ஒருவேளை இதற்கு மாற்றாகவும் வாசகர்கள் சிந்திக்கலாம். அதுபற்றி என்ன எண்ணுகிறீர்களோ அதை எழுதுங்கள், மார்ச் 15–க்குள்.

– பி.சி.

வாழ்விக்க வந்த பாரதி – 11

‘மூன்று உபாயங்கள்’



மகாகவி பாரதி



“பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மையுற வோங்கும் உலகு”

இது திருக்குறள் அல்ல; ‘சக்கர வர்த்தினி’ எனும் மகளிர் இதழின் தலையங்கப் பகுதிக்கென்று பாரதி பாடிய புதுக் குறள்.

‘தமிழ்நாட்டு மாதர்களின் அபி விருத்தியே நோக்கமாக வெளியிடப் படும் மாதாந்தரப் பத்திரிகை’ என்ற குறிப்புடன், 1905 ஆகஸ்ட் முதல் வெளிவரத் தொடங்கிய அவ்விதழுக்கு ஆசிரியர் மகாகவி பாரதி.

அதன் முதல் இதழிலேயே அவர் எழுதுகிறார் :– “ஒவ்வொரு நாட்டின் மேன்மையோ, தாழ்மையோ அந்நாட்டு மாதர்களைப் பொறுத்திருக்கின்றது. இவ்வுலகத்தில் எல்லாத் தேசங்களும் மேம்பட்டு வரும் இக்காலத்தில், பழம் பெரு நாடாகிய நமது தாய்நாடு மட்டிலும் உறங்கிக் கிடக்கின்றது. இதன் காரணமென்ன? நமது பெண்களின் அறிவின்மையே காரணம். புதுப்புது புத்தகங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் மற்றும் திருஷ்டி சோதனை மூலமாகவும் நமது நாட்டு ஸ்திரீகளுக்கு நல்லறிவு பிறப்பித்து, அவர்களின் நிலைமையை உயர்த்த வேண்டுவதே நமது நாட்டாரின் முதற் கடமை. இதை மறந்தவன் நமது நாட்டிற்கு விரோதி.”

விக்டோரியா மகாராணியின் பெருந்தகைமையும், உயர் குணங்களும் நமது நாட்டு மாதர்களுக்கு என்றும் முன்மாதிரியாக மனத்தே பதிந்திருக்க வேண்டும் என்பதைக் குறித்தற் பொருட்டு, ‘சக்கரவர்த்தினி’ என்னும் பெயர் கொண்டு வெளிவந்த இப் பத்திரிகையின் முதற்கடமையாவது, “பெண்களின் சுதந்திரத்தன்மை” என்கிறார் பாரதி.

நாமிருக்கும் நாடு நமக்கே உரிமை என்று கருதிப் பேணும் சக்கரவர்த்திகளைப் பெறக் கூடியவர்களாக – இந்த நாட்டிற் பிறந்த மாதர்கள் ஒவ்வொருவரும் ‘சக்கரவர்த்தினி’களாகத் திகழ வேண்டும் என்பது அடிப்படை நோக்கம்.

நாட்டு அடிமைகளாய் ஆடவர்களும், வீட்டு அடிமைகளாய்ப் பெண்களும் முடக்கப்பட்டுக் கிடந்த காலத்தில், சுதந்தரம் என்பது யாரும் கொடுக்க வாங்கிக் கொள்கிற பொருள் ஆகமாட்டாது என்பதை அழுத்தந்திருத்தமாக உணர்த்தியவர் பாரதி.

“மாதர்களுக்காயினும், வேறு யாருக்காயினும் சுதந்திரங்கள் வேறொருவர் கொடுக்க முடியுமென்ற நம்பிக்கையே எனக்குக் கிடையாது. அவரவர்கள் தத்தம் உரிமைகளைத் தாமே முயற்சி புரிந்து அடைந்து கொள்ள வேண்டுமேயல்லாமல், மற்றொருவர் கொடுத்ததொன்றும்



கிருங்கை சேதுபதி

நிலைத்திருக்க மாட்டாது.”

ஆனால், இந்த உரிமைகளைத் தாமே முயன்று பெற்றுக் கொள்ளும் உயரிய ஆற்றலானது, பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் தாயர்களிடமிருந்தே யாவருக்கும் வாய்க்கும்; வாய்க்க வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தார்.


CHAKRAVARTINI.

சக்ரவர்த்தினி.

CONTENTS

1. SRIMATH SWAMI VIVAKANANDA PARAMAHAMSA

6. INTERESTING NOTES.

அதனால்தான், “ஸ்திரீகளின் முக்கியக் கடமை தாம் தேச மக்களுக்குத் தாய்மார் என்பதை நன்றாக அறிந்து, தமது புத்திரர்களும், பெண்களும், ஒழுக்கம், அறிவு, கல்வி, செல்வம் என்பவற்றிலே சிறந்து விளங்குமாறு தாம் செய்தற்குரிய தகுதியடைவதன்கண்ணே அரிய ஆவல் கொண்டவர்களாகி, அவ்விஷயத்தில் தம்மால் கூடியவரை முயற்சி புரிய வேண்டும். மகான்கள் பிறந்து வாழ்ந்த நாட்டிலே மண்ணுண்ணிப் பூச்சிகள் நடமாடுவதைக் கண்டு ஒவ்வொரு ஸ்திரீயும் மனம் புழுங்க வேண்டும். தத்தம் மக்களுக்கு அறிவு, உயர்குணம், சரீர திடமை, மனோதைரியம், ஆண்மை முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டேயிருக்க வேண்டும்” என்று எழுதினார்.

அதே இதழில் பின்வருமாறு பதிவிட்டிருக்கிறார் பாரதி. “மொத்தம் 10,000 ஸ்திரீகளுக்கு 94 ஸ்திரீகளே கல்விப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்தப் பயிற்சியும் அதி சொற்பமானதாகவே இருக்குமென்று நாம் தெரிவிக்க வேண்டுவதில்லை. முதல் மூன்று பாடப் புஸ்தகங்களுக்கப்பால் படித்திருக்கும் மாதர்கள் மிகக் குறைவாகவே, இருக்கிறார்கள்; அவர்களிலும்கூட, கிறிஸ்தவ மிஷனரிகளின் வாயிலாகக் கற்ற கிறித்துவப் பெண்களாகவே மிகுதியாக இருப்பார்கள்” என்றும் குறித்திருக்கிறார்.

எனவே, நோயறியாமல் வைத்தியம் செய்ய முயலும் பேதை வைத்தியர்களைப் போல் ஸ்திரீகளின் குறைகளுக்கெல்லாம் முக்கியக் காரணம் அவர்களது அறியாமையே என்பதை மறந்துவிட்டு, மேலளந்த மாதிரியாக அவர்களது நன்மைகளை நாம் தேடப் புகுவது சிறிதேனும் பயன்பட மாட்டாது என்று தாம் பெற்ற தெளிவைத் தன் வாசகர்களுக்கு எழுதியுரைத்த பாரதி, 'அறிவின்மை யெனும் பெருங்கடலில் தத்தளிக்கும் நமது பதினாயிரக் கணக்கான பெண்களைக் கரை சேர்ப்பதற்குச் சில பெருங்கப்பல்கள் இருந்த போதிலும், தாம் கொண்டு வருகிற ‘சக்கரவர்த்தினி’ இதழானது சிற்றோடமாக, நின்று உதவும்' என்று நம்பினார்; எழுதினார்; அயலகத்தில் பேசப்படும் பெண் சுதந்தரக் கருத்துக்களைப் பரிசீலித்து, தாயகத்திற்கு வேண்டிய கருத்துகளை முன்வைத்துப் பேசினார்.

இச்சிந்தனை பாரதிக்கு இயல்பிலேயே இருந்தது. அதாவது, அரசியல் ஆர்வம் ஏற்படுதற்கு முன்னமேயே இருந்தது. காசியில் பாரதி வசித்த காலக் கட்டத்திலேயே, (1898 – 1902) அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்.

காசியில் ஓர் உபந்நியாஸத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தலைமை வகிக்க காசியிலேயே பிரபல வித்வானாகிய ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் இசைந்தார். பெண் கல்வி என்பது பேச்சுக்கு விஷயமாகக் கொள்ளப் பட்டது. சுப்பையா (பாரதி) தமிழில் பிரசங்கம் நிகழ்த்தினார். பிரசங்கம் காரசாரமாக இருந்தது. ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியமானது என்று அவர் வற்புறுத்திப் பேசினார். தலைவர் அந்த அபிப்ராயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. கண்டித்தும்

பேசினார். சுப்பையாவுக்குக் கோபம் மிகுந்துவிட்டது. பெண்கள் கல்வி இன்றித் தேசம் முன்னுக்கு வர முடியாது என்று மேலும் அடித்துப் பேசினார். பெண்களின் சமத்துவத்தைப் பற்றி அடிக்கடி அவர் வற்புறுத்திப் பேசுவது வழக்கம். பெண்கள் கல்வி, சமத்துவம் இந்த இரு விஷயங்களைத் தவிர, அப்போது வேறு எதிலும் அவர் அதிகக் கவனம் செலுத்தவில்லை" என்று காசியில் அவருடன் வதிந்திருந்த பண்டித எஸ். நாராயண ஐயங்கார் குறிப்பிடுகிறார்.



அதுசமயம், விசுவநாதன் என்பார், கடையத்தில் வாழ்ந்திருந்த செல்லம்மாளிடம், காசியில் வாழ்ந்த பாரதியின் முற்போக்குத் தன்மை குறித்து ஏதோ சொல்லிப் பயமுறுத்தியதறிந்து, தன் காதல் மனைவிக்குப் பாரதி எழுதிய கடிதத்திலும் இந்தச் சிந்தனை சுடர்விடப் பார்க்கலாம்.

"ஓம்"

ஸ்ரீகாசி

ஹனுமந்த கட்டம்

எனதருமைக் காதலி செல்லம்மாளுக்கு ஆசிர்வாதம். உன் அன்பான கடிதம் கிடைத்தது.

நீ என் காரியங்களில் இத்தனை பயப்படும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை. விசுவநாதன் அனாவசியமாக உனக்குப் பயத்தை விளைவித்திருக்கிறான். நான் எப்போதுமே தவறான வழியில் நடப்பவனல்ல. இதைப் பற்றி உன்னைச் சந்திக்கும் சமயங்களில் விவரமாகக் கூறுகிறேன்.

நீ இந்த மாதிரி கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்."

கற்றல் ஒன்றே கவலைக்கு மாற்று; சிந்தனைக்கும் செயலுக்கும் ஊற்று என்று உணர்ந்த பாரதி, தன் குடும்பத்தாரோடு புதுவையில் வாழ்ந்த காலத்திலும் இதே பணியைத் தொடர்ந்திருக்கிறார்.

மஞ்சள் குங்குமக் கூட்டத்தில், திருவிளக்குப் பூசை செய்து, இத்திருப்பணியை வெகுசாதுர்யமாக நடத்திக் காட்டிய பாரதி, 'காசி', 'காளிதாசன்' என்ற புனை பெயர்களில், 'சுதேசமித்திரன்' இதழ்களில் சிறப்புச் செய்திகளாகப் பதிவு செய்தும் இருக்கிறார். அக்கூட்டங்களில் தன் மக்களைப் பாட வைத்தும், பேசவைத்தும் தன் கருத்துக்களுக்கு வலுச்சேர்த்த பாரதி, மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியாரின் புதல்வியர் யதுகிரி, ரங்கா, வ.வே.சு. ஐயர் தம் துணைவியார் பாக்யலட்சுமி அம்மாள் ஆகியோரையும் பிரசங்கம் செய்ய வைத்திருக்கிறார்.

இதற்காக எதிர்க்கருத்துகளை எழுப்பியவர்களுடன் வாதாடித் தன் கருத்தைப் பாரதியார் நிலைநாட்டிய பாங்கை யதுகிரி அம்மாள், தன் 'பாரதி நினைவுகள்' நூலில் சிறப்பாகவே பதிவிட்டிருக்கிறார்.

"காளயுக்தி வருஷம் சித்திரை மாதம் ஒரு வெள்ளிக்கிழமை தினம் பாரதியார், தம் வீட்டில் ஒரு சின்னக் கூட்டம் ஏற்படுத்தினார். தெரிந்த சில பெண்களை வரும்படி ஆளிடம் சொல்லி அனுப்பினார். முதலில் பாரதி 'வந்தே மாதரம்' பாடினார். பிறகு பெண்கள் விடுதலைக் கும்மி. பின்னர் எங்களிடம், 'உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள்' என்றார். நான், 'முயற்சியின் பயன்' என்னும் சிறு உபந்நியாசம் செய்தேன்.

பாரதியார் இதைத் தமது வியாசத்துடன் 'சுதேசமித்திரனில்' வெளியாக்கினார். ஜட்ஜ் வேலையில் இருந்த எங்கள் பந்துவான எம்.ஓ. பார்த்தசாரதி ஐயங்கார் வீட்டில்தான் சுதேசமித்திரன் வரும். அவர்கள் வீட்டுப்பெண்கள் கட்டுரையைப் படித்துவிட்டு, என்

அலெக்சாண்டரின் மகிழ்ச்சி!

அலெக்சாண்டர் பிறந்தவுடன் அவர் தந்தை பிலிப், அரிஸ்டாட்டிலுக்கு இப்படி ஒரு கடிதம் எழுதினார் :

"எனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்ற மகிழ்ச்சியைக் காட்டிலும், அவன் தங்களைப் போன்ற அறிஞர்கள் காலத்தில் பிறந்திருக்கிறான் என்பதே எனக்குக் கொள்ளை மகிழ்ச்சி அளிக்கிறது"

– ஆர்.கே.லிங்கேசன்

பாட்டியாரிடம் வந்து, 'உலகம் முழுகிப் போய்விட்டது' என்று கூக்குரலிட்டார்களாம்.

மறுதினம் (வ.வே.சு.) ஐயர் வீட்டில் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது. ஏழைகளுக்கு அன்னம் போட்டார்கள். செல்லம்மா, பாக்யலட்சுமி அம்மாள் இருவருமாகச் சமைத்து வேலையை நடத்தினார்கள். ஐயர் திருவள்ளுவர் வாழ்க்கைக் கதையில் சில பாகங்கள் சொன்னார். பாரதியார் வழக்கம் போல் சில பாடல்கள் பாடினார். நான், பெண்களின் முன்னேற்றம் என்பது பற்றி உபதேசம் செய்தேன். அதில் காந்தியடிகளின் சில வாக்கியங்களையும் சத்தியாக்கிரக விஷயங்களையும் எடுத்துச் சொல்லிப் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெண்களே தடை என்று சொல்லியிருந்தேன். இதனால் பெரிய பாட்டிமார்களுக்கு அளவில்லாத கோபம் வந்துவிட்டது. இப்பொழுது பாரதியாரின் கட்டுரைத் தொகுதியில், இதுவும் வெளிவந்திருப்பதாக, என் தகப்பனார் (மண்டையம் சீனிவாசாச்சாரியார்) சொன்னார்.

இரண்டுமுறை என் உபந்நியாசங்கள் பத்திரிகையில் வெளியானதும் என் பாட்டியார், பெரிய அத்தை, இரண்டாவது அத்தையின் பெண் எல்லாரும் வந்தார்கள். என் பெரிய அத்தை, 'இதுமாதிரி சீர்திருத்த உபதேசம் செய்வதை நிறுத்திவிட வேணுமென்றும், அதனால், திருவல்லிக்கேணியில் தலைகாட்ட முடியவில்லை' என்று கூறி, சீர்திருத்தப் பிரசங்கம் செய்ததைப் பெரிய குற்றமாகக் கருதி என் தந்தையாரிடம் வாதித்து முடிவில் அதை நிறுத்தியும் விட்டார்கள்.

மறுவாரம், பாரதியார் அழைத்த போது, என் பாட்டியார், அத்தை எல்லோரும் வந்திருந்தார்கள். எனக்குப் பதில் அத்தையே உபந்நியாசம் செய்தார். அதில் 'பெண்களுக்கு இங்கிலீஷ் கூடாது' என்றும், 'வீட்டில் அடங்கி வேலை செய்து கொண்டிருப்பதே பெண்களுக்கு ஏற்றது' என்றும் சொன்னார். அதற்குப் பதிலாக பாரதியார் நீதி வாக்கியங்களைச் சொல்லி, இதில் தப்பிதமில்லை என்று சமாதானம் சொன்னார். ஆனால், அவர்கள் ஒப்பவில்லை.

அத்துடன் அத்தை செய்த உபந்நியாசத்தைப் பத்திரிகைகளில் பாரதி பிரசுரிக்கக் கூடாது என்றும் சொன்னார்கள். இருந்த போதிலும், தமது கட்டுரைகளில் வேடிக்கையாகச் சிற்சில இடங்களில் அத்தையின் உபந்நியாசத்தை, அவரது பெயர் குறிப்பிடாமல் கையாண்டு காட்டியிருக்கிறார் பாரதியார்" என்பது யதுகிரி அம்மாளின் அனுபவப் பதிவு.

ஆக, அடிமைத்தளையை முற்றாக அகற்ற வேண்டுமெனில், பெண் விடுதலையே முதலில் பெறத்தக்கது என்பதில் பாரதி அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

பாரதி குறிப்பிட்டு முன்வைக்கும் மூன்று உபாயங்களில், "முதலாவது உபாயம் கல்வி. இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது கல்வியைத் தவிர, வேறெல்லா விதமான உபாயமும் சிறிதேனும் பயன்படாதென்பது கருத்து."

தன் விடுதலையும், மண் விடுதலையும், பெண் விடுதலையின் வாயிலாகத் தான் பெற முடியும்; அதற்குக் கல்வியே உற்ற துணை என்று கண்டுணர்ந்து காட்டியவர் பாரதி. ●



நேர்காணல்

மும்பை தாராவி மீண்டது எப்படி?

மும்பைத் தமிழர் சு. குமணராசன் மராட்டிய மாநிலத்தில் குடியேறியவர். மும்பையில் தமிழுக்குத் தொண்டு செய்த பெரியோர்களை, கவிஞர்களைப் பாராட்டுவதற்காக ‘இலெமுரியா அறக்கட்டளை’ ஒன்றை நிறுவி நடத்தி வருபவர். வாழ்வாதாரமாக மும்பையில் ஒரு தொழிலிலும் ஈடுபட்டுள்ளார். ‘தமிழ் இலெமுரியா’ என்ற பத்திரிக்கை ஒன்றையும் நடத்தி வருகிறார்.

இலெமுரியா என்பது குமரிக்கண்டம் கடலில் மூழ்கிப்போன பழந்தமிழ் கண்டம் என்ற கருத்து உள்ளது. அருட்செல்வர் இழந்துபோன இலெமுரியா பற்றி ஆய்வுகள் நடத்தியவர். அதனால் ‘தமிழ் இலெமுரியா’ பத்திரிகையை விரும்பியவர்.

இலெமுரியா மாத இதழ் இப்போது மும்மாத இதழாக வெளிவருகிறது. அவருடைய நேர்காணல் தற்செயலாக ‘ஓம் சக்தி’க்குக் கிடைத்தது. அவருடைய 4 கேள்விகளும் தமிழ் தாராவி பற்றிய உண்மைகளை வெளிக்கொணர உதவியுள்ளன. அதனை வாசகர்களுக்கு வழங்கும் கடமையைச் செய்துள்ளோம்.

– இ.ஆர்.

கேள்வி : இந்தியாவிலேயே மும்பையில் அதிக கொரோனா தாக்கம் இருப்பது குறித்துத் தங்கள் கருத்து என்ன?

பதில் : “உலக அளவில் பல நாடுகளில் கோவிட்–19 கொரோனா உள்ளது. அதனால் தாக்கம் வெகுவாக இருந்தாலும், இந்தியாவில் அதன் பரவல் என்பது மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது பெரிய அளவில் இல்லை. ஆனால் வெளிநாட்டுப் பயணிகள் அதிகம் வருகின்ற மும்பை நகரில் அதன் தாக்கம் மிக அதிகம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆசியாவிலேயே ஒரு பெரும் குடிசைப் பகுதி தாராவி. மும்பை மையப் பகுதியில் அது அமைந்துள்ளது. அங்கு மக்கள் நெருக்கம் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு சற்றொப்ப 80 – 90 ஆயிரம். கேரளாவில் 850. இந்த நெருக்கம் வேறு எந்த நகரிலும் இல்லை. அங்கே தனியாக அல்ல, பெரும்பாலும் பொதுக் கழிப்பிடங்களே உள்ளன. சென்ற ஏப்ரல் – மே மாதங்களில் அதிகமாகக் கொரோனா அங்கே இருந்தது. இப்போது பெருமளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

கேள்வி : மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள இலெமுரியா அறக்கட்டளைப் பணிகள் என்ன?

பதில் : பிற நாடுகள் – நகரங்களில் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டபின் ஏற்பட்ட நிகழ்வுகளுக்கும், இந்தியாவில் குறிப்பாக மும்பை முதலிய நகரங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. நாங்கள் இதை மூன்று வகைகளாகப் பிரித்துப் பொதுமக்களுக்குத் தன்னம்பிக்கை



சு. குமணராசன்

ஊட்டும் வகையில் அமைத்துக் கொண்டோம்.

அ) வசதியற்றவர்களுக்கான பசியைப் போக்கத் தேவையான மளிகைப் பொருள்கள் வழங்குதல்.

ஆ) நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் கபசுரக் குடிநீர் முதலிய சித்த மருத்துவ உதவி செய்தல்.

இ) புலம்பெயர்ந்து தவிக்கும் தொழிலாளர்களுக்கு உணவு மற்றும் தாயகம் செல்லப் போக்குவரத்து வசதிகள் செய்தல் என மும்முனைப் பணிகளை அமைத்து மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு உதவி செய்தோம்.

இதற்கான பொருளாதார வசதியை நன்கொடைகள் மூலம் சிறிது பெற்றாலும், மகாராஷ்டிரா மாநிலத்தில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் பலரும் துணை நின்றனர். குறிப்பிடத் தக்கவர்களில் பொன்.அன்பழகன் ஐ.ஏ.எஸ்., ந.இராமசாமி ஐ.ஏ.எஸ்., இராதாகிருட்டிணன் ஐ.ஏ.எஸ்., ஜெயக்குமார் ஐ.பி.எஸ்., விமலநாதன் ஐ.ஆர்.எஸ்., மு.இராஜன் ஐ.ஆர்.எஸ்., என அப்பட்டியல் நீளமானது. அவர்களின் மனிதநேயப் பார்வை போற்றத் தக்கதாகும்.


முதலில் சிறிய அளவில் தொடங்கி உணவுப் பொதிகள் 10 தவணைகளாக மும்பையின் சற்றொப்ப 60 பகுதிகளில் 1,56,000 கிலோ அளவுள்ள உணவுப் பொருள்களைத் திரட்டி மும்பையில் ஏழைகள் எல்லோருக்கும் வழங்கியுள்ளோம்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காகத் தொடர்வண்டிச் சேவையைத் தமிழ்நாடு அரசிடம் வலியுறுத்திப் பெற்றுத் தந்துள்ளோம். இதில் திரு. அன்பழகன் ஐ.ஏ.எஸ்., திரு. சேது சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ்., ‘விழித்தெழு இயக்கம்’ என்ற இளைஞர் அமைப்பு, புனே நண்பர் சேகர் ஆகியோர் பங்கு பெரிதாகும்.

கேள்வி : தாராவிப் பகுதியில் நோய்த்தொற்று எவ்வாறு கட்டுப் படுத்தப்பட்டது?

பதில் : தாராவியில் வசிப்பவர்கள் பெரும்பாலும் தமிழர்களே. இங்கு மிகச்சிறிய வீடுகளில் மக்கள் வாழ்வதனால், தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடிப்பது சாத்தியமல்ல. எனவே மும்பை மாநகராட்சி தாராவி அருகில் உள்ள விளையாட்டு அரங்கம் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றில்

காந்திஜியின் மறுசுழற்சி முறை!



மறுசுழற்சி குறித்து எவ்வித விழிப்புணர்வும் இல்லாத காலகட்டத்தில், காந்திஜி மறுசுழற்சிக்கு முன்னோடியாக விளங்கியுள்ளார். கதர் வேட்டி அணிந்த காந்திஜி, அது கிழிந்தவுடன் ஓரத்தை மடித்துத் தைத்துத் துண்டாகப் பயன்படுத்தினார். பின்னர் அந்தத் துண்டு கைக்குட்டையாக மாறும். பின்னர் கைக்குட்டை, ராட்டைக்கு எண்ணெய் விடும்போது துடைக்கும் துணியாக மாறும். பிறகு அந்தத் துணி, சேவா கிராம் ஆசிரம விளக்குகளுக்குத் திரியாக மாறும். இதுதான் காந்திஜி கடைப்பிடித்த மறுசுழற்சி.

பாதிக்கப்பட்டோரைத் தனிமைப்படுத்தினோம். அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட்டன. பெரும்பாலான மக்களுக்கு அடிப்படைச் சோதனைகள் செய்யப்பட்டன. மேலும் பலர் தங்கள் தாயகம் நோக்கிப் புறப்பட்டனர். இவ்வாறு பலருடைய கூட்டு முயற்சியால் தாராவிப் பகுதி கொரோனாவிலிருந்து காப்பாற்றப் பட்டது.

கேள்வி : இப் பேரிடர்ப் பணியில் தங்களின் அனுபவம் என்ன?

பதில் : இலெமுரியா அறக்கட்டளை வழங்கிய உணவுப் பொருள்களைப் பொதுமக்கள் வீடுகளில் கொண்டு சேர்ப்பதற்காக எங்கள் தூதுவர்களாகப் பல பகுதிகளில் இளைஞர்கள் செயல்பட்டனர். தங்கள் உயிரைப் பணயம் வைத்துச் செயல்பட்ட விதம் பெரிதும் பாராட்டுக்குரியது.



சற்றொப்ப 80 பேர் எங்களுடன் இணைந்து செயல்பட்டனர். தாராவிப் பகுதியில் மட்டும் பன்னீர் செல்வம் தலைமையில் 15 பேர் தொடர்ந்து இரண்டு மாதக் கால மாகப் பணி செய்தது போற்றுதலுக்குரியது. கபசுரக் குடிநீர் மருந்தைத் தேவைப்படும் பகுதிகளுக்கு வழங்கி வருகிறோம்.

புலம்பெயர்ந்த தமிழ் தொழிலாளர்கள் குறித்த எந்த ஆவணங்களும் தமிழ்நாடு அரசிடம் இல்லை. இந்தப் பேரிடர் காலத்தில் தமிழ்நாடு அரசு, வெளி மாநிலங்களுக்குப் புலம்பெயர்ந்த அமைப்புசாரா தொழிலாளர்களைப் பதிவுசெய்ய வேண்டும். அறிவிக்கப்பட்ட 48 மணி நேரத்தில் சற்றொப்ப 2 லட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் பதிவு செய்தனர். மொத்தம் 10 லட்சத்துக்கும் மேலானவர்கள் வெளிமாநிலங்களில் தற்காலிகமாக இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களைப் பல இந்திய நிறுவனங்கள் கைவிட்டுவிட்டன. பல தொழிலாளர்கள் ஏமாற்றத்துடன் இருந்தனர்.

இவை அனைத்தும் இந்தப் பொது முடக்கத்தில் வெளிவந்த உண்மைகளாகும். புலம்பெயர்ந்த வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுக்காகத் தமிழ் நாடு அரசு ஒரு தனி அமைச்சகமோ அல்லது வாரியமோ அமைத்துக் கண் காணிப்பது முக்கியம்.

இனிமேலாவது எதிர்காலத்தில் இடர்பாடு நேரங்களில் உதவிட விதி முறைகள் எளிதாக அமைய வேண்டும். இது என் வேண்டுகோள். இதைத் தங்களைப் போன்ற ஊடகங்கள் மூலம் தமிழ்நாடு அரசிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.”

எல்லாம் நன்மைக்கே!



ஒரு காலத்தில் இந்தியாவில் ஓர் அரசர் இருந்தார். அவர் ஒரு குறிப்பிட்ட பண்டிகையின்போது கரும்புச்சாறு பருகுவார். தானே கரும்பை வெட்ட வேண்டும் என விரும்பினார். அதில் அவருக்கு அனுபவம் இல்லாததால், தவறிப்போய் தன் விரலை வெட்டிக் கொண்டார்.

“அரசரே! இது உமது நன்மைக்குத் தான்” என்று அமைச்சர் கூறினார்.

அரசருக்கு மிகவும் கோபம் வந்தது. அமைச்சரைச் சிறையில் அடைத்தார். “என்னைச் சிறையில் அடைப்பது எனது நன்மைக்கே” எனக் கூறினார் அமைச்சர்.

ஒருநாள், அரசர் காட்டுக்குள் போய் வர எண்ணினார். சிறிது நேரப் பயணத்துக்குப் பின், ஒரு மரத்தடியில் ஓய்வெடுத்துக் கொண்டார்.

அவர் இளைப்பாறும் சமயத்தில், ஆதிவாசி அரசரும் ஆதிகுடிகளும் பலி கொடுப்பதற்கு எல்லா லட்சணங்களும் பொருந்திய மனிதன் ஒருவன் வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. விரைவிலேயே அவர்கள் அரசர் இருந்த இடத்துக்கு வந்து பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

அவரைப் பிடித்துக் கொண்டு போய் நீராட்டி, பலி கொடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தனர்.

திடீரென்று அவர் கைவிரல் துண்டிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தனர். அந்தக் குறைபாட்டின் காரணமாக அவரை அவர்கள் விடுவித்தனர். அரசர் நாட்டுக்குத் திரும்பினார்.

“மந்திரி கூறியது சரிதான். எனது நன்மைக்காகவே என் விரல் துண்டாகிப் போனது” என்று அவர் எண்ணினார். அவர் சிறைக்குப் போய் “நீர் கூறியது சரிதான்” என்று கூறி அமைச்சரை விடுவித்தார்.

அமைச்சர் உடனே “ஆமாம், சிறைவாசம் எனக்கும் நல்லதுதான். நான் உங்களோடு காட்டுக்கு வந்திருந்தால், அவர்கள் உங்களுக்குப் பதிலாக என்னைப் பலி கொடுத்திருப்பார்கள்” என்றார்.

எல்லாமே கடவுளின் ஆணைப் படியே நடந்தது என அரசர் இப்போது நம்பினார்.

“இன்பமும் துன்பமும் எனக்கு நல்லவையே. கடவுள் எனக்கென்று எதைத் தேர்ந்தெடுக்கிறாரோ, அது எனக்கு நல்லதே” என்று அவர் கூறினார். – **‘ஸனாதன ஸாரதி’, பிப்ரவரி 2021.**

இம்மாத ராசி பலன்

“என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!”

1.3.2021 அன்று கோள்கள் நிலை

		ராகு செவ்வாய்	
சூரியன் சுக்கிரன்	11.3.2021 புதன் – கும்பம் 14.3.2021 சூரி. – மீனம் 16.3.2021 சுக். – மீனம் 31.3.2021 புதன் – மீனம்		
சனி புதன் குரு			
	கேது		சந்திரன்

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

மேஷம்



இம்மாதம் முற்பாதியில் அனுகூலங்கள் உண்டு. மாதத்தின் பிற்பாதியில் அலைச்சலும், சுபச் செலவினங்களும் ஏற்படும். செவ்வாய் வாக்கு ஸ்தானத்தில் ராகுவுடன் சேர்ந்து சஞ்சரிப்பதால், முதலீடுகள் செய்வதில் கவனம் வேண்டும். உங்களது பேச்சுவார்த்தையில் கவனம் வேண்டும். தண்டச் செலவுகள் வரக்கூடும். ஒருசிலருக்குக் கண்களில் பாதிப்பு ஏற்படலாம். வாழ்க்கைத் துணைவர் யுத்தம் செய்யக்கூடும். போக்குவரத்துகளில் கவனம் வேண்டும். 8–இல் கேது சஞ்சரிப்பதால், ஒரு சிலருக்கு மறைவிடங்களில் கட்டி முதலியவை ஏற்படக் கூடும். 10–இல் சனி – குரு சஞ்சரிப்பதால், உங்களது அந்தஸ்தைத் தக்க வைத்துக் கொள்ளப் போராடுவீர்கள். ஒரு சிலருக்கு இடமாற்றங்கள், பணி மாற்றங்கள் ஏற்படலாம்.

சுக்கிரன் 16–ஆம் தேதிவரை பெண்களால் நன்மையைச் செய்யும் வாய்ப்புண்டு. ஆடம்பரப் பொருள் ஒன்று வாங்கச் சந்தர்ப்பம் உண்டு. பின்னர் உங்களது ஆடம்பரப் பொருள்கள் பின்னம் ஆகும் வாய்ப்புண்டு. இல்லற வாழ்வில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தொழில் உத்யோகத் துறைகளில் இந்த ஆண்டு பெரிதாகச் சோபிக்க முடியாது. திருமணக் காரியங்கள் அக்டோபர் மாதம் வரை ஈடேற வாய்ப்பில்லை.

ரிஷபம்



இம்மாதம் முற்பாதியில் புது முயற்சிகள் செய்யலாம். தொழில் துறையில் அனுகூலம் உண்டு. தனம், பொருள் சேர்க்கை ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் நண்பர்கள், உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டலாம். அரசாங்கக் காரியங்களில் நன்மை ஏற்படும். 16–ஆம் தேதிவரை சுக்கிரன் 10–இல் சஞ்சரிப்பதால், தொழில் ஸ்தலத்தில் பெண்களால் எதிர்ப்புகள், பிரச்சினைகள் ஏற்படலாம். பின்னர் 11–இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால், வாழ்க்கைத் துணைவருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படலாம். சனி – குரு – புதன் 11–ஆம் தேதிவரை இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் போதனை, சேவை, நீதித்துறை, வெளிதேச வர்த்தகம் செய்பவர்கள் நன்மை அடைவர்.

செவ்வாய் – ராகு இணைவு காரணமாக சிலர் வீண் கோபதாபங்களுக்கு ஆளாவர். ஒருசிலர் அறுவைச் சிகிச்சை மேற்கொள்வர். நுண்கிருமி

களின் தாக்கம் சிலருக்கு ஏற்படும். போக்கு வரத்துகளில் கவனம் தேவை. 7–இல் கேது சஞ்சரிப்பதால், இல்வாழ்க்கையில் ஒருசிலருக்கு ஈடுபாடுகள் குறையும். நூதன மனிதர்களின் கூட்டுறவு நல்லதல்ல. திருமணம் முதலிய காரியங்களில் திருப்திகரமான பதிலை எதிர்பார்க்க வேண்டாம்.



மாதத்தின் முற்பாதியில் காரியத்தடைகள் ஏற்பட்டாலும், மாதத்தின் பிற்பாதியில் அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். தொழில் உத்யோகத் துறைகளில் தங்களின் நீண்டநாள் திட்டமொன்றை நிறைவேற்றிக் கொள்ளலாம். ராகு, செவ்வாய் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், அரசாங்கம் மூலமோ, உத்தியோகஸ்தர்கள் மூலமோ, திருடர்கள் மூலமோ, மாற்றுமதக் காரர்கள் மூலமோ பொருள், தனம் இழக்க நேரலாம். கவனம் தேவை. மறைமுக எதிர்ப்புகளும் பிறர் மூலம் வஞ்சனைகளையும் சிலர் எதிர்கொள்வர். தீய கனவுகள் தோன்றும். குலதெய்வ வழிபாடு நல்லது.

சனி 8–இல் குருவுடன் சஞ்சரிப்பதால் ஒரு சிலர் தங்கள் தொழில் உத்யோகத்தில் சங்கடங்களைச் சந்திக்க நேரலாம். சிலர் வெளியேற்றப் படலாம். அல்லது தாங்களே வெளியேற நேரிடலாம். சுக்கிரன் 16–ஆம் தேதிவரை யோகமாகக் காணப்படுவதால், அரிய பொருள் சிலர் வாங்குவர். பின்னர் மாதக் கடைசிவரை 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குழந்தைகள், பெண்கள் மூலம் உபத்திரவங்கள் ஏற்படும். 6–இல் கேது சஞ்சரிப்பதால் வயிற்று உபாதை ஏற்படலாம். கல்யாண காரியங்கள் வரும் அக்டோபர் மாதம் வரை வேண்டாம். புதிய காரியங்களை மாதத்தின் பிற்பாதியில் தொடங்கலாம்.



இம்மாதம் முற்பாதியில் எதிர்பாராத சம்பவங்கள் உங்கள் மனதைப் பாதிக்கக் கூடும். பணவிரயமும் உடல் உபத்திரவமும் ஏற்பட வாய்ப்புண்டு. பிற மதத்தவர்களால் அல்லது பிரயாணங்களால் தீமை உண்டாகலாம். மாதத்தின் பிற்பாதியில் பல்வேறு தடைகள் இடையூறுகளுக்கு மத்தியில் உங்களது தீவிர முயற்சியால் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். செவ்வாய் – ராகு சேர்க்கை காரணமாக பொருள், லாபம் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள், பிற சமூகத்தினர் மூலம் நன்மை உண்டு. இடம், பூமி எதிர்பாராத வகையில் லாபகரமாக வாங்கவும், விற்கவும் சிலருக்குச் சந்தர்ப்பம் வரும்.

கேது 5–இல் இருப்பதால், பழமையான அழகுப் பொருட்கள் வாங்கலாம். குழந்தைகளால் உபத்திரவம் தொடர்ந்து இருந்து வரும். 7–இல் சனி – குரு சஞ்சரிப்பதால் தன்னிலும் வயது கூடிய அல்லது அந்தஸ்தில் உள்ளவர்களுடன் நட்பு ஏற்படலாம். திருமணம் முதலிய சுப காரியங்களில் முயற்சிக்க நன்மையுண்டு. புதிய கூட்டுத் தொழில், பிரயாணம் முதலியவை நன்மையாகும். சிலர் தங்கள் வாகனத்தை விற்பர்.



இம்மாதம் கூட்டுத்தொழில் கூட்டாளிகள் மூலம் மாதத்தின் முற்பாதியில் பிரச்சனைகள் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் எதிர்பாராத செலவு, உடல் உபத்திரவம் ஏற்படும். தண்டச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு. செவ்வாய், ராகு 10–இல் சஞ்சரிப்பதால், தொழில் உத்யோகத் துறைகளில் உங்களது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வீர்கள். தவறான செய்கைகளால் மனக் கலக்கம் ஏற்படும். சனி 6–இல் சஞ்சரிப்பது நல்லதுதான். வசதி வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்ளலாம்.

6–இல் குரு சஞ்சரிப்பதால் கடன்கள், வியாதிகள் உங்களைப் பயமுறுத்தவும் கூடும். 16–ஆம் தேதிவரை பெண்களின் எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டும். பின்னர் 8–இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால், ஆடம்பரப் பொருள்களைப் பின்னப் படுத்துவீர்கள். வாழ்க்கைத் துணைவருக்கு நன்மைதான். 11–ஆம் தேதிவரை புதன் 6–இல் சனி – குரு சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால் கால் பகுதியில் நரம்புபிடிப்பு ஏற்படலாம். பெண்களாக இருப்பின் வெரிகோஸ் என்னும் நரம்பு பாதிப்புக்கு ஆளாவர். திருமணக் காரியம் தடையாகும்.

இம்மாதம் முற்பாதியில் புதிய முயற்சிகளில் இறங்கலாம். தொழில் உத்யோகத் துறைகளில்

கன்னி



நன்மையுண்டு. மாதத்தின் பிற்பாதியில் குடும்பப் பிரச்சினைகள் மனக் கலக்கத்தை ஏற்படுத்தலாம். வாழ்க்கைத் துணைவர் வழியில் செலவினங்கள் ஏற்படும். செவ்வாய் – ராகு 9–இல் சேர்க்கைப் பெற்றுச் சஞ்சரிப்பதால், பெண்களுக்குக் கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்புண்டு. எனவே கருவுற்ற பெண்கள் கவனமாக இருக்க வேண்டும். சனி – குரு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குழந்தைகளால் நன்மை, தீமை உண்டு. அவர்களைப் பற்றிய கவலையும் உண்டு.

3–இல் கேது சஞ்சரிப்பதால் எக்காரியத்திலும் அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். சுக்கிரன் 16–ஆம் தேதிவரை 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் கடன், வியாதி, விவகாரம் முதலியவற்றாலும் பெண்களாலும் செலவு ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் எதிர்ப்பு தோன்றும். வாழ்க்கைத் துணைவருக்கு எதிர்பாராத பாதிப்பு வரலாம். திருமணம் முதலிய காரியங்களில் இறங்கலாம். 5–இல் சனி, குரு சஞ்சரிப்பதால் காலதாமதமாக வெற்றி ஏற்படும்.


துலாம்



இம்மாதம் முற்பாதியில் தடைகள் ஏற்பட்டாலும் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் சிலருக்குக் கிட்டலாம். மாதத்தின் பிற்பாதியில் தொழில் துறையில் ஏற்றம் உண்டாகும். பொருளாதார ரீதியான நன்மைகள் ஏற்படலாம். புதிய முயற்சிகளுக்கு ஏற்ற காலம். ராசியதிபதி சுக்கிரன் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், எல்லோருக்கும் எதிரியாகக் காட்சியளிப்பீர்கள். 8–இல் செவ்வாய் – ராகு இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் விபத்துக்கள் ஏற்படும். கழுத்துப் பகுதியில் அடிபடும். ஒருசிலருக்கு அறுவைச் சிகிச்சைத் தேவைப்படலாம். அடிக்கடி கோபதாபங்களுக்கு ஆட்படுவீர்கள். விஷ பயம் ஏற்படும். கவனம் தேவை.

2–இல் கேது சஞ்சரிப்பதால் உங்களது தகுதியறிந்து செலவுகள் செய்வது நல்லது. சனி 4–இல் சஞ்சரிப்பதாலும் குரு நீசம் பெற்று பங்கம் அடைந்ததாலும் நெருங்கிய பந்து ஒருவருக்குப் பாதிப்பு வரலாம். குறிப்பாகப் பெற்றோர் வழியில் ஏற்பட வாய்ப்புண்டு. அக்டோபர் வரை குரு பாதகமாக உள்ளதால், திருமணக் காரியங்களில் இறங்குவது நல்லதல்ல. வேற்றுமதக் காரர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம். பிறர் மீது நீதிமன்ற வழக்குகளில் இறங்க சிலர் முயற்சிக்கலாம். தவிர்ப்பது நல்லது.

விருச்சிகம்



இம்மாதம் முற்பாதியில் உடல் நலிவு, அலைச்சல், வீண்செலவு ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் காரியத்தடைகள் ஏற்படும். மனக்குழப்பம் உண்டாகும். ஒரு சிலர் தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் இறங்கி பெயரைக் கெடுத்துக் கொள்வர். செவ்வாய் – ராகு 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் மாற்றுமதம், மொழிக்காரர்களுடன் நட்பு ஏற்படும். மேலும் ஒருசிலர் விதவைப் பெண்களால் பிரச்சினைகளை அடைவர். கவனம் தேவை. கேது ராசி மீது சஞ்சரிப்பதால் உஷ்ண பீடிதம் ஏற்படும். உணவு விஷயங்களில் கவனம் வேண்டும்.

சனி – குரு 3–ஆம் வீட்டில் நீச்சபங்க யோகத்தில் சஞ்சரிப்பதால், தொழில் உத்யோகத் துறைகளில் அனுகூலம் ஏற்படும். வசதி வாய்ப்புகள் கூடும். தன்னம்பிக்கை, உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும். 16–ஆம் தேதி முதல் சில அதிர்ஷ்ட வாய்ப்புகள் உண்டாகும். திருமணம் முதலிய சுப காரியங்களுக்கு உங்களின் ஜனன ஜாதகத்தை ஆராய்ந்து செயல்பட வேண்டும். புதிய முயற்சிகள் இம்மாதம் வேண்டாம். சித்திரை மாதம் நல்லது. எக்காரியத்தையும் சித்திரையில் தொடங்கலாம்.

தனுசு



இம்மாதம் உங்களுக்குச் சூரியன் 3, 4–மிடத்தில் சஞ்சரிப்பதால் கலப்பான நன்மை, தீமை உண்டு. மாதத்தின் முற்பாதியில் 3–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால், தொழில் உத்யோகத் துறைகளில் திருப்தி நிலவும். புதிய முயற்சிகளும் வெற்றியளிக்கும். மாதத்தின் பிற்பாதியில் 4–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால் அலைச்சல் கூடும். தேக நலிவு ஏற்படும். சுக்கிரன் 16–ஆம் தேதிவரை 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுகமுண்டு. பின்னர் மாதக் கடைசிவரை 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால்,

குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படலாம். பெண்கள் விரோதம் ஏற்படலாம்.

செவ்வாய் – ராகு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குழந்தைகளால் பிரச்சனை வரலாம். ஒரு சிலரால் நீங்கள் ஏமாற்றப்படலாம். சனி – குரு 2–இல் சஞ்சரிப்பதால் பணிவரவு ஏற்படும். வரவு எவ்வளவோ அதற்கு நிகரான செலவும் ஏற்படலாம். சுப காரியங்களில் ஈடுபாடு கொள்ளலாம். 12–இல் கேது சஞ்சரிப்பதால் கனவுகள் பலவாறாக ஏற்படக் கூடும். இளவயதினர் மாற்று சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் நட்பு வைத்துக்கொள்வர். எச்சரிக்கை அவசியம். பின்னர் வருத்தப்பட நேரிடும்.



இம்மாதம் முற்பாதியில் அனுகூலம் குறைவு. பிற்பாதி நன்மை பயக்கும். புது முயற்சிகளில் இறங்கலாம். தன்னம்பிக்கை அதிகப்படும். உடல் ஆரோக்கியம் கூடும். தொழில் உத்யோகத் துறைகளில் ஆதாயம் உண்டாகும். செவ்வாய், ராகு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், ஏதேனும் உடல்நலக் கோளாறுகள் குறிப்பாக இதயம் சம்பந்தப்பட்ட பிரச்சனை உடையவர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும். கழுத்துப் பகுதியில் ஒரு சிலருக்குப் பாதிப்பு ஏற்படலாம். தெரியாத தொழில்களில் பிறர் பேச்சைக் கேட்டு இறங்க வேண்டாம்.

உங்கள் ராசி மீது சனி – குரு சஞ்சரிப்பதால் அடிக்கடி மனச்சோர்வும், உடல் சோர்வும் ஏற்படும். எக்காரியமும் தாமதமாகவே முடிவடையும். 11–இல் கேது சஞ்சரிப்பதால் நல்லோர் ஆலோசனையைக் கேட்டு நடப்பது மேலானது. சுக்கிரன் 16–ஆம் தேதிவரை 2–இல் சஞ்சரிப்பதால் சில காரியங்களை உங்கள் இனிமையான பேச்சால் நிறைவேற்றிக் கொள்வீர்கள். திருமணக் காரியங்களுக்கு உகந்த காலமல்ல. அக்டோபர் வரை வேண்டாம்.



கும்ப ராசி அன்பர்களுக்கு இம்மாதம் முற்பாதியில் நளினமான தோற்றம் செய்கைகளால் பிறர் மூலம் காரியம் சாதித்துக் கொள்வீர்கள். பற்பல சிந்தனைகளுக்கு ஆட்படுவீர்கள். உடல் உஷ்ணம் அதிகப்படும். மாதத்தின் பிற்பாதியில் 2–இல் சூரியன் – சுக்கிரன் இணைவுப் பெற்றுச் சஞ்சரிப்பதால், பேச்சாற்றலால் நன்மை அடைவீர்கள். அதேசமயம் ஒருசிலர் கண்களில் உபாதை ஏற்படவும் வாய்ப்புண்டு. செவ்வாய் ராகுவுடன் 4–இல் சஞ்சரிப்பதால் போக்குவரத்துகளில் எச்சரிக்கை தேவை. சிலருக்குச் சர்ப்ப பயம் உண்டாகும். வீடு, வாசலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சனி – குரு 12–இல் சஞ்சரிப்பதால் தொழில் துறைகளில் முதலீடுகள் செய்யலாம். இடம், வீடு வாங்கலாம். திருமணம் முதலிய சுப காரியங்களில் செலவு செய்யலாம். 10–இல் கேது சஞ்சரிப்பதால் பல துறைகளில் ஆர்வம் ஏற்படும். மாணவர்களாக இருப்பின் தீர்க்கமாக முடிவெடுத்துச் செயல்பட வேண்டும். தர்ம காரியங்களில் ஈடுபாடு கொள்ளலாம். 11–ஆம் தேதி வரை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் பணி செய்பவர்களிடம் எவ்விதப் பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். ஏமாற்றம் வரலாம்.



இம்மாதம் முற்பாதியில் சூரியன் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், அரசாங்கக் காரியங்களில் கவனம் வேண்டும். தவறான சிந்தனையும், செயலும் தண்டனைக்கு ஆளாக்கி விடும். சுப விரயம் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் தேவையற்ற கோபம், எதிர்ப்பு ஏற்படலாம். கவனமாகச் செயல்படுவது நல்லது. செவ்வாய் – ராகு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வழக்கு வியாஜ்ஜியங்களில் வெற்றி அடையலாம். சில துணிவான முடிவுகளை எடுத்துச் செயல்பட வேண்டிய நேரம். கேது 9–இல் சஞ்சரிப்பதால் ஆன்மீகச் சுற்றுப்பயணங்கள் சென்று வரலாம். மருத்துவம் தொடர்பான கல்வி கற்பவர்களுக்கு நன்மை உண்டு.

சனி – குரு லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பெரியோர்களின் ஆதரவு கிட்டும். சிலருக்குத் தொழில் துறை நண்பர்களால் வாழ்க்கை மாற்றங்கள் ஏற்படலாம். திருமணம் முதலிய சுப காரியங்களுக்கு இவ்வருடம் அக்டோபர் வரை நல்ல சந்தர்ப்பங்கள் உண்டு. காலத்தைப் பயன்படுத்திக் கொண்டால் சுப காரியம் ஈடேறும். புதிய முயற்சிகளை வைகாசி மாதம் தொடங்கலாம். நன்மை ஏற்படும்.



சமஸ்கிருதம் படிக்கும் முஸ்லீம் பெண்ணும் அரபு படிக்கும் கிறிஸ்துவப் பெண்ணும்

கேரளாவில் திருப்புனித்துரா என்ற ஊரில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரி உள்ளது. சமஸ்கிருதத் துறையில் அங்குப் பணி செய்பவர் பாத்திமா பீவி. வேதாந்தத் துறைக்கு அவர்தான் தலைவர். இந்த முஸ்லீம் பெண்மணி உபநிடதங்களை ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்து ஆராய்ச்சி செய்து, அத்வைத வேதாந்தத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இவர்தான் சமஸ்கிருதக் கல்லூரியில் வேதாந்தத் துறையில் தலைவராக உள்ளவர்.

இதனைப் பார்த்த பலருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. இவர் இஸ்லாமியப் பெண். உருது படிக்கக் கடமைப்பட்டவர். ஆனால், இவரோ இவ்வாறு உள்ளார்.

இந்த ஓர் ஆச்சரியம் மட்டுமல்ல. இன்னொரு ஆச்சரியம். சிஸ்டர் லிசி என்ற கிறிஸ்தவப் பெண். கன்னியாஸ்திரி. கேரளாவின் காலடி கான்வெண்டில் தங்கியுள்ளார். இவர் அரபு மொழியைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுத்து அதில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கன்னியாஸ்திரி ஆடையில் இவர். இவருடைய வகுப்புத் தோழிகளோ, பர்தா அணிந்த இஸ்லாமிய மாணவிகள். இஸ்லாமிய மாணவிகளைக் காட்டிலும் இந்தக் கிறிஸ்தவப் பெண்ணுக்கு அரபு மொழி அவருடைய தாய்மொழி போல இலகுவாக இருந்தது.

பொதுவாக அரபு மொழி உச்சரிப்புக் கடினமானது. நாக்கைச் சுழற்றிச் சுழற்றி ஒலிக்க வேண்டும். தொடர்ந்த பயிற்சியினால்தான் அது சாத்தியமாகும். இந்த சிஸ்டர் லிசி ‘பிஸ்மில்லாஹி’ எனும் கடவுள் வாழ்த்துப் பாடினால், எல்லோரையும் அது கவர்ந்துவிடும். அவ்வளவு உச்சரிப்பு சுத்தம். இனிய குரல்.

மலபாரில் பல கல்லூரிகளில் இவர் பணி செய்துள்ளார். அங்கே ஒரு பிரபலமான சமஸ்கிருஸ்த ஆசிரியர். அவர் பெயர் பி.பி. கதீஜா, இஸ்லாமியப் பெண். இந்தக் கதீஜாவை அவருடைய தந்தையும் ஆசிரியருமான மொய்தீன் குட்டி உற்சாகப் படுத்தி சமஸ்கிருதம் படிக்க உதவி செய்தார்.

கதீஜாவின் மூன்று பெண் குழந்தைகள் அஸ்லம், அஸ்மா, ஆயிஷா. இம்மூவருமே மதரசாப் பள்ளியில் உருது படித்துக் கொண்டிருந்தபோதே, சமஸ்கிருத பாஷையையும் சேர்த்துப் படித்துக் கொண்டார்கள். இவையெல்லாம் அபூர்வமான சம்பவங்களும், அதிசயங்களுமாகும்.

ஒரு முற்போக்குச் சமுதாயம் தன் மதம், தன் மொழி, தன் இனம் என்று கட்டுப்பெட்டியாக இல்லாமல், எந்த மதமும், எந்த மொழியும், எந்த மனி

தரும் நேசத்திற்குரியவையே என்றே கூறும்.

1999–இல் நடந்த இன்னொரு ஆச்சரியமான செய்தி. கேரளாவில் உள்ள திரூரில் வசித்து வரும் முஸ்லீம் ஒருவர், தன் மகன் ரஷீத்துக்குக் கதகளி நாட்டியம் பழகக் கட்டணம் செலுத்தியுள்ளார். நாட்டியத்தில் ரஷீத் நாட்டமுள்ளவன். சிறுவனாக இருக்கும்போதே நடனத்தில் பல பரிசுகள் பெற்றவன். அதனால் அவன் தந்தை அவனை கதகளிப் பள்ளியில் சேர்த்துள்ளார்.

இரண்டாண்டு படிப்பு. சிறப்பாக முடித்து வெளியில் வந்தான். ஆனால், மத நாட்டமுள்ள இஸ்லாமியத் தலைவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எவ்வாறு என்றால், ரஷீத்தின் தந்தையை அழைத்து, அவருடைய மகனை கதகளி படிப்பிலிருந்து நிறுத்தவில்லை என்றால், அவர் நடத்தி வரும் ஹோட்டலை இழுத்து மூடி விடுவோம் என்று மிரட்டினர்.

ரஷீத்தின் தகப்பனாரோ, ஹோட்டல் வியாபாரத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தன் மகனைத் தொடர்ந்து கதகளி படிக்க வைத்தார். தன் தொழிலைத் தள்ளுவண்டியில் காய்கறி வியாபாரமாக்கிக் கொண்டார்.

இதேபோல ஓர் இஸ்லாமிய இளைஞன் கதகளி படிப்பதை ஹிந்து மத அன்பர்கள் விரும்பவில்லை. அவர்களும் இதை எதிர்த்தார்கள். அவ்வாறு எதிர்த்தபோது, ரஷீத்தை அழைத்து கதகளி படிப்பதால் அவனுடைய பெயரை ராமையன் என மாற்றச் சொன்னார்கள். அவனோ, மாற்ற மறுத்துவிட்டுக் கதகளி படிப்பதைத் தொடர்ந்தான்.

இதேபோல 2000–வது ஆண்டு ஏப்ரல் மாதம். ஓர் இஸ்லாமிய மார்க்க அறிஞர். அவர் பெயர் ஹசன் மௌலவி. அவர் ஹிந்து மதத்திற்கு மாறினார். அப்போது தனது பெயரை கமல ஹசன் என்று மாற்றிக் கொண்டார்.

பிரபல மலையாள எழுத்தாளர் கமலாதாஸை பலருக்கும் தெரியும். அவர் ஹிந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறினார். அப்போது அவர் கமலாதாஸ் என்ற தனது பெயரை கமலாசுரையா என்று மாற்றிக் கொண்டார்.

ஹசன் மௌலவி ஹிந்து மதத்திற்கு மாறிய பிறகு, ஹிந்து மதச் சடங்குகள் அனைத்தையும் பின்பற்றினார். இஸ்லாமியச் சடங்குகளை எதிர்த்தார். ஒரு கட்டத்தில், பைபிள் படிக்கவும் தொடங்கினார். பின்னர் பெந்தகோஸ்த் கிறிஸ்துவப் பிரிவில் சேர்ந்தார். கடைசியாக மீண்டும் ஹிந்து மதத்திற்குத் திரும்பினார். அதற்கு அவர் சொன்ன காரணம், ராமாயணம் படித்ததாகவும், அந்த நூலே ஹிந்துமதத் தத்துவத்தைத் தனக்குத் தரிசனம் கொடுத்ததாகவும் கூறினார்.

ராமாயணத்திற்குப் பிறகு, விவேகானந்தரைப் படிக்கத் தொடங்கினார். அதன்பிறகு ஊட்டியிலிருந்த நித்ய சைதன்ய யதி என்ற ஞானியைப் படிக்கத் தொடங்கினார். அவர் இவரை ஹிந்து மதத்தில் ஆழ்ந்து மூழ்குமாறு செய்தார்.

இப்போதும் ஹசன் மௌலவி பிரசங்கங்களைச் செய்து வருகிறார். ஹிந்து தர்ம பிரச்சார சபா என்ற பெயரில் அவை நடந்து வருகின்றன. அவருக்கு இஸ்லாமிய எதிர்ப்பு தொடர்ந்து இருந்து வருகிறது.

நமது நாடு சுதந்திரமடைந்தபோது, ஹிந்து – முஸ்லீம் கலவரத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு. நமது இந்தியாவில் இப்போது சுமார் 20 கோடி முஸ்லீம்கள் உள்ளனர். இவர்கள் 20 கோடி என்றாலும், ஹிந்துக்களோடு ஒப்பிட்டால், சிறுபான்மையினர்தான்.

நமது நாட்டுக்குப் பாரம்பரியம் உண்டு. சகிப்புத்தன்மை மிக்க மதம் ஹிந்து மதம். சகவாழ்வுக் கொள்கையைப் பின்பற்றுகிற கோட்பாடும் நமக்கு உண்டு.

இக்பால் என்ற மகாகவி, ராமனைப் பற்றி வர்ணிக்கும்போது, 'ஹிந்து தேசத்தின் இமாம்' (Imam of Hindustan) என்று வர்ணித்தார். இப்போதும்கூட சபரிமலைக்குச் சென்றால், அதன் அடிவாரத்தில் வாவர் சாமி என்ற ஓர் இஸ்லாமிய ஞானியின் சமாதியில் வழிபாடு செய்துவிட்டுத்தான் செல்ல வேண்டும்.

இதேபோல, அமர்நாத்தில் கிடைக்கும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு ஆதம்மாலிக் என்ற இஸ்லாமியக் குடும்பத்திற்குத் தரப்படுகிறது. அவர்தான் அமர்நாத் குகைக் கோவிலை 100 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடித்தவர்.

ராஜஸ்தானில் ஒரு கோயில் உண்டு. அது கோயில் மட்டுமல்ல. அது ஒரு மசூதியும்கூட. கங்கா நகரில் கோகா மெர்கி என்ற இடத்தில் அது உள்ளது. ஹிந்து பட்டேல்கள் குஜராத்தின் அகமதாபாத்தில் ஓர் இஸ்லாமிய ஞானி இமாம்ஷா பாபாவின் சமாதியைப் பராமரித்து வருகிறார்கள். காரணம், அவர்களுடைய நம்பிக்கை, பாபா என்பவர் கிருஷ்ணனுடைய அவதாரம் என்பதாகும்.

பாரத்பூர் முஸ்லீம்கள் மியோஸ் (MEOS) எனப்படுகிறவர்கள். அவர்கள் தங்கள் மூதாதையரை அர்ச்சுனன், பீமன் எனக் கூறுகிறார்கள்.

ஒற்றுமைக்கான இவ்வளவு அம்சங்களையும் கவனிக்காமல், வேற்றுமை, சகிப்பின்மை, வெறுப்பு ஆகியவற்றில் நம்மை நாமே அழித்துக் கொள்வது அழகல்ல, அறிவல்ல, அறமல்ல. – ஜனவரி 2021, 'Amity' இதழிலிருந்து.

– ந.நி.

1956–ஆம் வருஷத்திய ரிஜிஸ்ட்டரேஷன் ஆப் நியூஸ் பேப்பர் (சென்ட்ரல்) சட்டத்தின் 8–வது விதிப்படி 'ஓம் சக்தி' என்ற தமிழ் மாதப் பத்திரிகையின் உரிமையாளர் பற்றிய விபரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன.

பாரம் – 4

1. பிரசுரிக்கப்படும் இடம்	:	கோவை
2. பிரசுரத்தின் தன்மை	:	மாதம் ஒருமுறை – முதல் தேதி
3. அச்சிடுவோர் பெயர்	:	த. ராஜ்குமார்
எத்தேசத்தவர்	:	இந்தியர்
விலாசம்	:	ருக்மணி ஆப்செட் பிரஸ், E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை – 641 021.
4. ஆசிரியர் & பிரசுரகர்த்தர்	:	ம. மாணிக்கம்
எத்தேசத்தவர்	:	இந்தியர்
விலாசம்	:	180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோவை – 641 018
6. இந்தப் பத்திரிகையின் சொந்தக்காரர் பெயர், விலாசம், மொத்த முதலில் நூற்றுக்கு ஒன்றுக்கு மேல் முதல் போட்டுள்ள கூட்டாளிகள் பங்குதாரர்கள், பெயர்கள், விலாசங்கள்.	:	சக்தி சுகர்ஸ் லிமிடெட் த.பெ.எண் : 3775 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோவை – 641 018

ம. மாணிக்கம் ஆகிய நான் இதன்மூலம் தெரிவித்துக் கொள்வது மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நான் அறிந்தமட்டில் உண்மை.

கோவை
1.3.2021

ம. மாணிக்கம்
பிரசுரகர்த்தர்



நமது மத்திய பட்ஜெட் என்ன சொல்கிறது?

இந்தாண்டு மத்திய பட்ஜெட்டில் வழக்கம்போலப் புள்ளிவிபரங்கள் இருக்கின்றன. அரசு வரிகள், டிவிடெண்ட் என்ற லாபப் பங்கு மற்ற சில வருமானங்களையும் இதில் காணலாம்.

நமது பட்ஜெட்படி, நமது அரசுக்கான செலவும் வரவும் ரூ. 34 லட்சம் கோடி. இவற்றில் மிக மோசமான அம்சம், கடன் மற்றும் வரிகள். இன்னொரு பக்கம் செலவுக் கணக்கு, கடனுக்கு வட்டி, மத்திய அரசுத் திட்டங்கள், ஓய்வூதியம் முதலியவை.

பட்ஜெட்டில் உருப்படியான திட்டங்கள் இல்லை. இப்படித்தான் முன்பிருந்த அரசுகளும் காலத்தைக் கடத்தி வந்தன. ரூ. 23 லட்சம் கோடி வரி வசூலித்தும், கடன்களைப் பெற்றும் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. ஏதோ 15 சதவிகிதம் அளவில் சாலை வசதிகள் செய்யப்பட்டன என்பது மட்டும்தான்.

எந்தக் கட்சி அரசையும் நாம் குறை சொல்லத் தேவையில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் கவனத்தில் கொண்டால் போதும். சீன தேசம் நம்மைவிட முன்னேறிவிட்டது. இந்தியனின் சராசரி ஆண்டு வருமானம் 1400 டாலர்தான். ஆனால், சீனாக்காரனுக்கு 10000 டாலர். பங்களாதேசம்கூட பொருளாதார வளத்தில் நம்மை முந்திவிட்டது.

நாம் இன்னும் நமது நாட்டில் முதலீடு செய்ய வெளிநாட்டினரைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். நம்மிடம் நிதி வசதியில்லை. அன்றாடம் காய்ச்சிகளாகவே இருந்து வருகிறோம். மூலதனத்தை முதலீடு செய்ய இந்தியர்களே முன்வர வேண்டும். அல்லது வெளிநாட்டில் கொட்டிக் கிடக்கும் நிதியைத் திரட்டி வர வேண்டும். இதில் தனியார், அரசு என்பது அர்த்தமற்றது.

நிதிப் பற்றாக்குறையில் காலத்தைக் கடத்தினால், பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, நமது நாடு இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும். மோடி சர்க்கார் மட்டுமல்ல, இடதுசாரி வாதங்கள் கூட அர்த்தமற்றதாகிவிடும். நாம் இன்னும் கொஞ்ச காலத்தில் ஆப்பிரிக்கா நாடுகளுக்கும் பின்னுக்குப் போய்விடலாம். இடதுசாரி அன்பர்கள் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.


சீனாவில் 1978–இல் சிங்பியாங் அறைகூவல் விடுத்தார். 'கதவைத் திறந்துவிடுங்கள். அமெரிக்கர்கள் உள்ளே வரட்டும். சீனாவில் வியாபாரம் பெருகட்டும்' என்றார். அவர் சொன்னதைப் பின்பற்றித் தொழிற்சாலைகளை அமெரிக்கர்கள் சீனாவில் அமைத்தார்கள்.

அன்றைக்கு இந்தியாவிற்குப் பின்னால் இருந்த சீனா, அந்நிய முதலீட்டால் கம்யூனிஸ்ட் தத்துவங்களைத் தூர எறிந்துவிட்டு, இப்போது முன்னேறி வல்லரசு நாடாகத் திகழ்கிறது.

இந்தியாவில் திறம்படைத்த இளைஞர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களின் திறமையைப் பயன்படுத்தி, உழைப்பை முன்னிலைப்படுத்தி, அந்நிய முதலீட்டைப் பெற்றுச் செயல்படுத்தினால், இந்தியாவை முன்னேற்றிவிட முடியும். இல்லையென்றால், இந்தியாவிற்குப் பேரழிவுதான்.

– **எம்.சி. சிவசுப்பிரமணியன்**

புத்தக மதிப்பீடு





அருட்செல்வர் ஆயிரம்

தொகுப்பாசிரியர் : முனைவர் க.சிவமணி, வெளியீடு : அருட்செல்வர் நா.மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம், என்.பி.டி.சி. – எம்.சி.இ.டி. வளாகம், உடுமலை ரோடு, பொள்ளாச்சி – 642 003. பக்.232, விலை ரூ.225/–, செல் : 9976144451.

காந்தியம், சன்மார்க்கம் இரண்டையும் தமது இரு கண்களாகப் போற்றியவர், தொழிலதிபர், கல்வியாளர், ஆன்மீகவாதி, அரசியலாளர், நூலாசிரியர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டு விளங்கியவர் அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள். நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நல்வழி காட்டும் உயரிய கருத்துக்களைப் பேசியும் எழுதியும் வந்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் இவர் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன. அந்த நூல்களில் இருந்து ஆயிரம் எண்ணிக்கையில் கருத்து முத்துக்களாகத் திரட்டித் தந்துள்ளார் முனைவர் க.சிவமணி. அந்த ஆயிரம் கருத்து முத்துக்களும் இன்றைய இளைய சமுதாயத்திற்கு நிச்சயம் நல்வழி காட்டும் என்பதில் ஐயமில்லை.

இந்த மண்ணில் விளைந்த மகத்தான சிந்தனை


ஆசிரியர் : வீ. சண்முகநாதன், வெளியீடு : விஜயா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோவை – 641 001, பக். : 192, விலை ரூ. 150/–, போன் : 0422–2382614.


“இந்த மண்ணில் விளைந்த மகத்தான சிந்தனை”யின் நூலாசிரியர் மேகாலய மாநில முன்னாள் ஆளுநர் ஆவார். அகநோக்கில் மனித சமூகத்தை உயர்நிலைக்குக் கொண்டு செல்வதற்கான களமாக விளங்குவது ஆன்மீகம் என்ற நோக்கில் 22 கட்டுரைகள் இந்நூலில் உள்ளன. வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் கூறும் உண்மைகள், பிரம்ம சூத்திரம், பதஞ்சலி யோக சூத்திரம், தியான மந்திரங்கள் இவையெல்லாம் ஆன்மிகநெறி கொண்டு நன்கு விளக்கப்பட்டுள்ளன. அதோடு சைவ – வைணவத் தத்துவங்கள், தமிழ் ஞான நூல்களின் தரிசனங்கள், சான்றோர்களின் அறவுரைகள் என நூல் முழுமையும் மனித மனத்தைப் பக்குவப்படுத்துவனவாக உள்ளன என்பதை உறுதி படக் கூறலாம். உண்மையில், தெய்வீகப் பேருணர்வில் திளைக்க வைக்கும் நூல்.

காலம் கடந்த பாடங்கள்

ஆசிரியர் : பேரா.தி. இராசகோபாலன், வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை–17. பக். : 216, விலை ரூ.200/–. போன் : 0442 – 24342810.

இந்நூலில் உள்ள 31 கட்டுரைகளில் உலகியல் சம்பவங்களைத் தம் அனுபவப் பார்வை கொண்டு அழுத்தம் திருத்தமாகப் பதிவிட்டுள்ளார் நூலாசிரியர். ஜனநாயகத்தின் நிலை, பணம் (பொருள்), தமிழின் தொன்மை, நாடகக் கலை, கல்வித்துறை, அரசியல் மாண்பு, காவல்துறை ஆகிய சமூகத் தளங்களிலும் அத்திவரதர், வள்ளலார், திருவிழாக்கள், சைவம் – வைணவம் எனும் ஆன்மிகத் தளங்களிலும்





உள்ள நல்லன, அல்லனவற்றைச் சமூகச் சிந்தனையுடன் கூடிய பார்வையுடன் ஆணித்தரமாய்ப் பதிவு செய்துள்ள பாங்கு சிந்திக்கத்தக்கது. சமகால வாழ்வியல் நுணுக்கங்களையும், சம்பவங்களையும், அழகாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துரைக்கும் நூல்.

வரலாற்றில் திருப்பு முனைகள்

ஆசிரியர் : நீ.சு. பெருமாள், வெளியீடு : விக்னேஷ்வர் பதிப்பகம், 1/73, எண் : 39 ஜீவாநகர், எமனேஸ்வரம் – 623 701. பக். : 135, விலை ரூ.150/–. செல் : 9442678721.

வரலாற்றுப் பதிவுகள் என்றும் காலம் கடந்து நிற்பவை. வருங்காலச் சந்ததியினருக்கு – சமுதாயத்திற்கு ஆதாரங்களாகத் திகழ்பவை. அவ்வகையில், இந்நூலில் வரலாற்றுப் பதிவுகள் கொண்ட 18 கட்டுரைகளை வழங்கியிருக்கிறார் நீ.சு. பெருமாள். சேதுபதி மன்னர் – யேல் பல்கலைக் கழக நிகழ்வுகள், சோழ மன்னன், கஜினி முகம்மது, மதுரையில் ஒரு காந்தி, நீதிக்கட்சியின் சாதனைகள், புத்தரின் போதனைகளும் இலங்கை அரசியலும், தமிழகத்தில் காந்திஜியின் நிறைவுப் பயணம், சென்னை தி.நகரின் பிதாமகன் இப்படி இன்னும் பல வரலாற்றுச் சிறப்புமிக்கக் கட்டுரைகளை – நாம் அறியாத பல தகவல்களை இந்நூலில் பதிவிட்டிருக்கிறார் நூலாசிரியர். சரித்திர நிகழ்வுகளை என்றென்றும் நம் நெஞ்சில் நிழலாட வைக்கும் நூல்.

–எம்.எஸ்

போராட்டப் பெண்!

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களை இழிவாக நடத்திவந்த அடிமைத்தனத்தை எதிர்த்து, அங்கிருந்த இந்தியர்களை ஒன்றுதிரட்டி உரிமைப் போர் நடத்தினார் அண்ணல் காந்திஜி.

அந்தப் போராட்டத்தின்போது மகளிர் அணியைத் திரட்டி, பெண்கள் சட்டமறுப்புப் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்தார் காந்திஜி. ஆனால், இந்தப் போராட்டம் குறித்துத் தம் மனைவி கஸ்தூரிபாயிடம் தெரிவிக்கவில்லை அண்ணல்.


காந்திஜியும் கஸ்தூரிபாயும்

இதனால் வருத்தத்துடன் “என்னிடம் ஏன் போராட்டம் பற்றி எதையும் கூறவில்லை... நான் என்ன அதற்குத் தகுதியற்றவளா...?” என்று கேட்டார்.

அதற்கு அண்ணல், “உனக்கு இரண்டு குழந்தைகள்... அவர்களைப் பார்க்கும் பணி இருக்கும்போது, எதற்குப் போராட்டம் என நினைத்துத்தான் சொல்லவில்லை... தவிர, நீ போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறைபுகப் பயந்து பின்வாங்க நேரிட்டால், இந்தியர் உரிமைக்குக் களங்கம் வரும் அல்லவா...!” என்றார்.

“கணவர் துன்பத்தை அனுபவிக்கும்போது, நான் மட்டும் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக இருப்பேனா...? நான்தான் இந்தப் பெண்கள் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துவேன்!” என்றார் அன்னை கஸ்தூரிபா.

சொன்னவாறே போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைப் புகுந்தார் அன்னை.

– த.சீ. பாலு, சென்னை.

சிறுகதை

அப்பாசாமி

அப்பாவின் பத்தாம் நாள் காரியம் முடிந்து உறவுசனம் கலைந்து விட்டது. பதினாறாம் நாள் வரை பொறுத்திருந்து காரியம் செய்கிற நிதானம் எவருக்குமில்லை.

ரகு கிளம்பிவிட்டான். கண்கள் சிவந்திருந்தன. இரண்டு நாள்களாக சரியானத் தூக்கமில்லை. ஏசி ரூமில் படுத்துப் பழகியவன். கொசுக்கடியில் ஒற்றை மின்விசிறிக்கடியில் நான்கைந்து பேரோடு படுத்துக் கிடந்ததில் ஒருமாதிரி அயர்ச்சியடைந்திருந்தான்.



"ரகு, அப்பா இப்புடி திடீர்ன்னு போவாருன்னு நான் நெனச்சுக்கூடப் பாக்கல..." "எனக்கும் அதிர்ச்சியாத்தான் இருக்கு. நல்லா நடமாடிக்கிட்டிருந்தவரு நிமிஷத்துல காத்துல கரைஞ்சிட்டாரே... என்னால ஜீரணிக்கவே முடியலண்ணா..." என்றவனின் குரல் உடைந்திருந்தது. அப்பா என்றால் இருவருக்கும் உயிர்.

"பஞ்சுமெத்தையில படுக்குறவன், பாவம் கோரைப்பாயில படுக்க வச்சிட்டேன். நம்மூட்டுல பஞ்சுமெத்தை எங்கிருக்கு..." என்று பரமு தன் மனைவியிடம் சிரித்தபடி சொன்னதைக் கேட்ட ரகுவுக்கு வருத்தமாக இருந்தது.

ஒரே வயிற்றில் பிறந்தவர்களைப் பணம் இரு துருவங்களாக மாற்றியிருந்தது. பரமுவுக்குப் படிப்பு ஏறவில்லை. அப்பாவுடன் விவசாயத்தைக் கவனித்துக் கொண்டு ஊரோடு முடங்கிப் போனான்.

ரகு புத்திசாலி. நிறையப் படித்து நல்ல வேலை தேடிக் கொண்டான். நன்றாக நடமாடிக் கொண்டிருந்த அப்பா திடீரென்று மாரடைப்பில் மரணிக்க, ரகு நிலைகுலைந்து போனான்.

அப்பாவின் இழப்பு தந்த வேதனை ஒரு பக்கம், புதிய ப்ராஜெக்ட் தொடங்கியிருக்கிற வேளையில், லீவு கிடைக்க வேண்டுமே என்கிற கவலை இன்னொரு பக்கம். உடனே வந்துவிடுவேன் என்கின்ற ஒப்புதலோடு கிளம்பி வந்தவன். தகனம் முடிந்து மறுநாள் ஊருக்கு ஓடிவிட்டான்.

மீண்டும் பத்தாம் நாள் காரியத்துக்கு இரண்டு நாள்கள் முன்னதாக வந்தான். இதோ காரியம் முடிந்து கிளம்பும் நேரம் வந்துவிட்டது.

பரமு மேல் துண்டால் முகத்தைத் துடைத்தபடி, ரகுவின் அருகில் அமர்ந்தான். "ரகு, அப்பா இப்புடி திடீர்ன்னு போவாருன்னு நான் நெனச்சுக்கூடப் பாக்கல..."

"எனக்கும் அதிர்ச்சியாத்தான் இருக்கு. நல்லா நடமாடிக்கிட்டிருந்தவரு நிமிஷத்துல காத்துல கரைஞ்சிட்டாரே... என்னால ஜீரணிக்கவே முடியலண்ணா..." என்றவனின் குரல் உடைந்திருந்தது. அப்பா என்றால் இருவருக்கும் உயிர்.

இத்தனைக்கும் அப்பா ஐந்தாவதுக்கு மேல் படிக்கவில்லை. ஓரளவு வயது வந்த பிறகு புத்தகங்களைத் தேடி வாசிக்க ஆரம்பித்தார். வாசிக்க, வாசிக்க மனம் பண்பட்டுப் போய் வாழ்க்கையில் நிதானம் வந்திருந்தது.

"நீங்க படிச்சிருந்தா கவர்மெண்ட் உத்தியோகம் கெடைச்சிருக்கும்ப்பா" என்று ரகு ஒரு முறை சொன்னபோது, அப்பா பட்டென்று கேட்டார்.

"நான் வேலைக்கிப் போயிட்டா நம்மூட்டு நெலத்த யாரு கவனிப்பா....? பயிரை வெளைவிச்சி மக்க பசியாத்துற வெவசாயி இன்னொரு சாமிப்பா. மொதக் கவளம் சோறு திங்குறப்ப சாமியோட சேத்து அவனுக்கும் நன்றி சொல்லணும். இத ஒங்கப் புள்ளைங்களுக்குச் சொல்லிக் குடுக்க மறந்துராதீங்க...." என்று பார்ப்பவர்களிடமெல்லாம் சொல்வார்.

"மக்க பசியாத்துற வெவசாயி வெறும் வயி றாக் கெடக்கானே. இதுக்கென்னா சொல்லு றீங்க...?" என்று அம்மா ஒருநாள் கோபமாகக் கேட்டாள். அவளுக்கு அப்பா விவசாயம் செய்வது பிடிக்கவில்லை.

"மூணுவேளை சோறு, வருசத்துக்கு ரெண்டு பொடவை இதத் தவுர ஒங்கப்பாரு எனக்கென்னா செஞ்சிருக்காரு..." பிள்ளைகளிடம் அவள் புலம்பும்போது அப்பா சிரிப்பார்.

"மண்ணோட மல்லுக்கட்டுற வெவசாயிக்கு வாக்கப்பட்டுட்டு பெருசா ஆசப்படக் கூடாது. இருக்குறதக் கொண்டு நெறைவா வாழப் பழகிக் கணும்" என்பவர் பரமுவுக்குப் படிப்பு ஏறவில்லை என்பதற்காக வருத்தப்படவில்லை. அம்மாதான் அலுத்துக் கொண்டாள்.

"ஒழுங்கா படிச்சி ஏதாவது வேலைய தேடிகிட்டுப் பட்டணத்துக்கு ஓடிப் போயிடு. இங்கிருந்தா கால்காசு சம்பாதிக்க முடியாது. மண்புழு கணக்கா வெவசாயம் ஒன்னைய மண்ணுக்குள்ள வச்சி அழுத்திடும். சூதானமா இருந்து பொழச்சிக்க..." என்று தலைப்பாடாய் அடித்துக் கொண்டாள்.

பரமு அந்த நேரம் தலையாட்டுவான். ஆனால், புத்தகத்தை எடுத்தாலே கொட்டாவி வரும். ஒரு காலகட்டத்தில் படிப்புக்கு விவசாயம் மேல் என்ற எண்ணம் உருவாயிற்று. அப்பாவுடன் வயலுக்குப் போக ஆரம்பித்தான். பன்னிரண்டாவ தோடு படிப்பு நின்று போனது. ஆனால் நன்றாகப் படித்துப் பள்ளியின் முதல் மாணவனாக வந்த ரகுவை அப்பா லோன் எடுத்துப் படிக்க வைத்தார்.

"என் சின்ன மவன் புத்திசாலி. இஞ்சினீரு படிப்பு படிக்கிறான். அவனோட அறிவுக்குப் படிச்சி முடிச்சதுமே வேல கெடைச்சிரும்னு பேசிக் கிறாங்க..." அம்மா சொல்லி, சொல்லி பெருமைப் பட்டுக் கொண்டாள். ஆனால் ரகு வேலைக்குச் சென்று முதல் மாதச் சம்பளம் வாங்கும்வரை அம்மா உயிரோடிருக்கவில்லை.

அம்மா போனபோது பரமுவுக்கு மட்டுமே திருமணமாகியிருந்தது. வேலைக்குச் சேர்ந்து நான்கு வருடங்கள் கழித்து ரகு உடன் வேலைப் பார்க்கும் பெண்ணை விரும்புவதாகச் சொன்னபோது அப்பா மறுக்கவில்லை.

"மனசுக்குப் புடிச்சிருந்தா, கடைசிவரைக்கும் சேர்ந்து வாழுவோம்னு தோணுனா கல்யாணம் பண்ணிக்க. எனக்கு எந்த ஆட்சேபணையுமில்ல" என்றவர்,

"ஒங்கம்மா எங்கிட்ட அடிக்கடி சண்டை போடுவா. வசதியான வாழ்க்கை அமையலேங்குற வருத்தம் அவளுக்கு. அவ ஆசப்பட்ட எதையும் என்னால வாங்கித் தர முடிஞ்சதில்ல. அந்த ஆத்தாமையில சத்தம் போடுறவளுக்கு ஒரு நிமிசம் என்னைய பிரிஞ்சி இருக்க முடியாது. எனக்கும் அப்புடித்தான். அதுதான் அன்பு. அது இருந்தா எவ்ளோ பெரிய சண்டை வந்தாலும் பிரிஞ்சிப் போவத் தோணாது. இத நல்லா ஞாவகத்துல வச்சிக்கிட்டு எப்பவும் சந்தோசமா இருங்க..." என்று ஆசீர்வதித்தார்.

ரகுவுக்கு அப்பாவைத் தன்னுடன் அழைத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று கொள்ளை ஆசை. அப்பா அதற்கு இணங்கவில்லை.

"அங்கெல்லாம் எனக்கு வசதிப்படாதுப்பா" என்று மறுத்தவர் எப்போதாவது வந்து ஓரிரு நாள்கள் தங்கிவிட்டுக் கிளம்பி விடுவார். வற்புறுத்தினால்,



ஐ. கிருத்திகா

"பரமு அங்க தனியா இருக்கான்ப்பா" என் பார், என்னவோ அவன் தனிக் கட்டையாகக் கிடப்பதைப் போல. அடிப்படை வசதிகளுக்கே அல்லாடும் மகனை எண்ணி சுகபோக வாழ்க் கையைத் துறக்கும் அப்பாவின் மனசு ரகுவுக்குப் புரிந்தது.

"நான் மாசாமாசம் பணம் அனுப்பட்டு மாப்பா...?" என்று ரகு ஒருமுறை சொன்னபோது, அப்பா மறுத்துவிட்டார்.

"நீ எதுக்குப் பணம் அனுப்பணும். அதெல் லாம் தேவையில்ல. தொடர்ந்து நீ ஒதவி செஞ்சா அவனுக்கு எதிர்பார்ப்பும், ஒனக்கு நாளடைவுல சலிப்பும் உண்டாயிரும். அது நல்லதில்ல. வெவ சாயி வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். இதுக் கேத்த மாதிரி வாழ அவன் பழகிக்கிட்டான். பரமுவோட புள்ளைங்க தலையெடுக்குற காலத் துல அவுங்கள கரையேத்திவுட ஒன்னால ஆனத

செய்யி. அதுபோதும்" என்றவரை ரகு ஆச்சரிய மாகப் பார்த்தான்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்து விவசாயி யாகவே கடைசிவரை காலம் கழித்துவிட்ட அப்பா. அதற்கு அப்பாலிருந்த ஆடம்பர வாழ்க்கையைப் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை.

சுமாரான உடையுடுத்தி, சுமாரான உணவு உண்டு, வெகு சாதாரண வாழ்க்கை வாழ்ந்தவ ருக்கு ரகு சொகுசைக் காட்ட விரும்பியபோது, அவர் அதற்கு இணங்கவில்லை.

பரமு, ரகுவை வயலுக்குக் கூட்டி வந்திருந் தான். காற்று சிலு, சிலுவென்று வீசியது. செழித்து வளர்ந்திருந்த நெற்கதிர்களின் பச்சை வாசம் மூக்கை வருடியது.

"இந்த வருசம் நல்ல வெளைச்சல். அப்பாவுக்கு அதுல ரொம்ப சந்தோசம். பாடுபட்ட துக்குப் பலன் கெடைச்சிருச்சின்னு சொல்லி கிட்டேயிருந்தாரு. பொசுக்குன்னு இப்புடிப் போவாருன்னு நான் நெனச்சிகூட பாக்கல."

பரமு தோளில் கிடந்த துண்டையெடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"அப்பா இருந்தவரைக்கும் அவரை நல்லபடியா பாத்துக்கிட்டது நீ. எனக்கு அந்தக் குடுப்பினைகூட இல்ல" என்றான் ரகு.

"என்னா பெருசா பாத்துக்கிட்டேன். அவரு தான் எனக்குத் தூணா இருந்தாரு. நான் அவர் நெழல்ல ரொம்ப தெம்பா நடமாடிக்கிட்டிருந்தேன். அந்த சாமிக்கே அது புடிக்கல... சரி, வா போவோம். ராத்திரி நீ ரயிலைப் புடிக்கணும்." பரமு வரப்பில் நடக்க,

"நான் கொஞ்ச நேரம் நின்னுட்டு வர்றேன்" என்ற ரகு, அப்படியே வரப்பில் அமர்ந்தான். சொற்ப நிலம். ஆனால் அப்பாவுக்கு அதுதான் உயிர்.

‘‘இது எங்க தாத்தா சம்பாரிச்ச சொத்து. என் உசிருக்குச் சமானம்" என்று அப்பா அடிக்கடி சொல்வார். அவருடைய சுவாசம் நிறைந்த காற்று வயல் வெளியெங்கும் சுற்றியலைந்து மேனியில் பட்டபோது, அப்பாவே அருகிலிருப்பது போலிருந்தது ரகுவுக்கு.

விளை நிலங்களை அழித்து மனைப்பட்டா போடுவது பற்றி அப்பா ஒருமுறை வருத்தப்பட்டார்.

"நெல்லு வெளையிற பூமிய கல்லு வெளைய வுடலாமா.... வெவசாயம் கஷ்டமுன்னா, எந்தத் தொழில்லதான் கஷ்டமில்ல. சோறு போடுற பூமிய கூறு போட்டுட்டு நாளைக்கி காலி வயித்த காத்தக் கொண்டு நெரப்ப முடியுமா... என்னவோ போ. ஒன்னுஞ்சரியில்ல." அப்பாவின் வருத்தம் விவசாயத்தின் மேல் அவருக்கிருந்த ஈடு பாட்டைக் காட்டிற்று.

ரகு தயாராகிவிட்டான். பெட்டியைத் திறந்து கடைசியாக ஒருமுறை சரிபார்த்துத் திருப்தி பட்டுக் கொண்டவன், அப்பா படத்தின் முன் விழுந்து வணங்கினான்.

பரமு, ரகுவிடம் வந்தான்.

"ரகு, இத்தினி வருசமும் ஒன் பங்கையும் சேத்து நாந்தான் வெவசாயம் பாத்தேன். ஆனா ஒரு பைசா ஒனக்கு அனுப்புனதில்ல. கைக்கும், வாய்க்கும் சரியாப்போச்சி. அதுதான் காரணம். ஆனா இனிமே அப்புடி இருக்குறது நியாயமில்ல. அதனால..."

ரகு புருவம் சுருக்கினான்.

"இனிமே கணக்கு, வழக்கு சரியா ஒனக்கு அனுப்பிடுறேன். ஒன் பங்கு வெளைச்சலுக்குண் டான பணத்தையும் தந்துடுறேன். திருப்தியில் லேன்னா நீ வேற யாரையாவது வுட்டு பாத்துக்க லாம்."

"நான் இப்ப கேட்டேனா...?"

"நீ கேக்கலேன்னாலும் சொல்ல வேண்டியது என் கடமை. நெலம் பெருசோ, சிறுசோ ஒனக்கும் அதுல பங்கிருக்கு."

பரமு சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவன் மனைவி துண்டை மடித்து ரகுவிடம் நீட்டினாள்.

"துண்டை மறந்துட்டீங்க தம்பி..."

வாங்கிக் கொண்டவன், அண்ணன் மகன் களைப் பார்த்தான். இருவரும் கிராமத்து அப்பா வித்தனம் தாங்கிய முகங்களோடு தூணோரம் நின்றிருந்தனர்.

"அண்ணா, அடுத்தமாசம் ஒரு நாலுநாள் வந்துட்டுப் போவலாம்னு இருக்கேன்."

ரகு சொல்ல, பரமு சந்தோஷமாகத் தலை யாட்டினான்.

"வாடா... சம்சாரம், புள்ளைங்களையும் கூட்டி கிட்டு வா..."



"அது முடியாது. நான் மட்டும் வருவேன். வந்து என் பங்கு நெலத்த உன் பேருக்கு மாத்திக் குடுத்துடுவேன்."

"ர... ரகு..." பரமுவின் முகத்தில் சன்னமான அதிர்ச்சி.

"அப்பா கடைசிவரைக்கும் உங்கூடத்தான் இருந்தார். அவர் உயிரா நேசிச்ச நெலமும் உங் கூடத்தான் இருக்கணும். அதுதான் நியாயம்..."

சொன்னவன் போட்டோவிலிருந்த அப்பா வைப் பார்த்தான். அப்பா வாஞ்சையோடு சிரித்துக் கொண்டிருந்தார். சமையற்கட்டிலிருந்த அண்ணி யின் கண்கள் நன்றியில் ஒளிர்ந்தன.

●

கஸ்தூரிபாவோடு தென்னாப்பிரிக்காவில் காந்தி 1898–இல் குடியேறிவிட்டார். காந்திஜிக்கு நான்கு பிள்ளைகள். மணிலால் காந்தி அவருடைய இரண்டாவது மகன். மணிலால் காந்தி – சுசீலா தம்பதிகளின் ஒரே மகள் இலா காந்தி. இலா காந்தி தென்னாப்பிரிக்காவில் காந்தியின் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டு, அங்கே இருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை இளம் வயதிலேயே எதிர்த்துப் போராடியவர்.

சென்ற 2019–ஆம் ஆண்டு அக்டோபர் 2–ஆம் தேதி இலா காந்தி காந்திஜியின் 150–வது பிறந்த தினத்தில் கோவைக்கு வருகை தந்தார். கோவை பாரதிய வித்யாபவனுக்கும் கோவை சாந்தி ஆஸ்ரமத்துக்கும் அழைப்பின்பேரில் வந்திருந்த அவர், 16 அகிம்சாவாதிகளுக்கு இலா காந்தி கோவை பாரதிய வித்யா பவனில் விருது அளித்துச் சிறப்பித்தார்.

விருது அளித்த இலா காந்திக்குக் கோவை பாரதிய வித்யாபவன் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் 'சமாதானக் காவலர்' விருது அளித்துச் சிறப்பித்தார்.

2019, ஜனவரி 2–ஆம் தேதி கோவைக்கு வருகை தந்த இலா காந்தி பற்றிப் பலருக்கும் அநேகமாகத்

காந்தி குடும்பத்தில்



ஒரு கம்யூனிஸ்ட்

தெரியாத ஒரு செய்தியை, 30.1.2021 'தீக்கதிர்' பத்திரிகையில் மார்க்சிய தலைவர் ஜி. ராமகிருஷ்ணன் ஒரு சிறப்புக் கட்டுரையாக எழுதியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவில் வாழும் இலா காந்தியோடு தொடர்பு கொண்டும் பேசி பேட்டியும் எடுத்துள்ளார். அவருக்கு இதில் உதவி செய்தவர், சென்னையில் வசித்துவரும் காந்திஜியின் பேரன் கோபால கிருஷ்ண காந்தி. இவர் ஒருமுறை மேற்குவங்க கவர்னராகப் பதவி வகித்தவர். இவர் ராஜாஜிக்கும் பேரன்.

இலா காந்தி அளித்த பேட்டியில் முத்தாய்ப்பு, காந்தி குடும்பத்தில் பிறந்த இலா காந்தி அகிம்சாவாதியோ, காந்தியவாதியோ அல்ல. **தென்னாப்பிரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர் என்பதுதான் நம்மில் அநேகருக்கும் தெரியாத செய்தி.**

காந்தியின் பேத்தி இலா காந்தி ஒரு கம்யூனிஸ்ட் போராளியாக இருப்பது நமக்கு ஆச்சரியம் அளித்தாலும், காந்திஜியின் குடும்பத்துக்கு அது ஆச்சரியமில்லை. இலா காந்தி சாத்வீகவாதியல்ல. சமரசவாதியுமல்ல. சகமனிதர்களின் மேம்பாட்டிற்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர் என்பதை,



கோவை விழாவில் 16 அகிம்சாவாதிகளுடன் இலாகாந்தி. அருகில் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர், சாந்தி ஆஸ்ரமத் தலைவர் டாக்டர் வினுஅறம் ஆகியோர்.

தோழர் ஜி. ராமகிருஷ்ணன் எழுதிய கட்டுரை நமக்குத் தெளிவாக விளக்குகிறது. அக்கட்டுரையின் முக்கிய பகுதிகள் கீழே தரப்படுகிறது.

– இ.ஆர்.

“1940–இல் தென் ஆப்பிரிக்காவிலே பிறந்தவரான இலா காந்தியின் தொடக்கக் கல்வி அவருடைய வீட்டிலேயேதான் அமைந்தது. அது அவருடைய ஆன்மீகப் புரிதல்களோடு இணைந்திருந்ததாக அவர் தெரிவிக்கிறார். 9 வயதில், அரசாங்க நிதியுதவியுடன் இயங்கிய ஒரு பள்ளியில்தான் முறைசார் படிப்பில் அவர் சேர்ந்தார். பின்னர் பெண் குழந்தைகளுக்கான உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றார்.

ஆசிரியர்கள் அனைவரும் வெள்ளைக்காரர்களாக இருந்த அந்தப் பள்ளிச் சூழலிலே, நிறவெறிப் பாகுபாட்டை நேருக்குநேர் அங்குக் கண்டார். 1963–இல் நேட்டால் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார். 1973–இல் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

“பட்டமளிப்பு விழா வெள்ளையர்களுக்குத் தனியாகவும், இந்தியக் கறுப்பின மாணவர்களுக்குத் தனியாகவும் நடந்தது. வகுப்புகள் கூட வெள்ளையர்களுக்கு வசதியான வகுப்பறைகளிலும், இந்தியர்கள் உள்ளிட்ட பிற மாணவர்களுக்குப் பல்கலைக்கழகக் கிட்டங்கிகளிலும் நடத்தப்பட்டன” என்கிறார்.

இந்தப் பாகுபாட்டை எதிர்த்து அப்போதே மாணவி இலா காந்தி சக மாணவர்களைத் திரட்டிப் போராடியுள்ளார்.

தனது பெற்றோர் நிறவெறிக்கு எதிரான போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுத்தது தனக்குப் பெரிதும் ஊக்கமளித்தது என்கிறார் இலா காந்தி. நேட்டால் இந்தியர் காங்கிரஸ் என்ற அமைப்பில் துணைத் தலைவராகச் செயல்பட்டார். சமுதாய சமத்துவ எண்ணங்களோடு செயல்பட்ட இவருக்கு இயல்பாகவே சோசலிச லட்சியங்களில் ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது. சோசலிச அமைப்பில்தான் சமத்துவத்தைச் சாதிக்க முடியும் என்ற உறுதிப்பாடு அவருக்குள் வளர்ந்தது.

அவர் கூறுகிறார், “என்னுடைய பெற்றோருக்குக் கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆனால், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் பலரும் அவர்களுக்கு நெருக்கமான நண்பர்களாக இருந்தார்கள். அவர்களோடு கருத்து வேறுபாடுகளை மனந்திறந்து விவாதிப்பார்கள். அந்த விவாதங்களைக் கேட்கிற வாய்ப்பு எனக்கும் கிடைத்தன” என்கிறார்.

“நிறவெறி ஆட்சிக்கு எதிராக ஏஎன்சி, எஸ்ஏசிபி என்ற இரண்டு இயக்கங்களும் போராடின. அதற்காக உருவாக்கப்பட்ட “சுதந்திர சாசனம்” என்ற திட்டம் கம்யூனிஸ்ட் கட்சியினால்

உருவானது” என்கிறார் இலா காந்தி.

அனைவருக்கும் இலவசக் கல்வி, இலவச மருத்துவம், குடியிருக்க வீடும், பசிக்கு உணவும் உத்தரவாதப்படுத்துதல் கம்யூனிசத்தில் உள்ளதைக் கண்டார். முதலாளித்துவத்தில் அந்த லட்சியங்கள் **சாத்தியமாகாது** என்ற முடிவுக்கு வந்தார்.

இந்தப் பின்னணியில் அவர் 1966–ஆம் ஆண்டு முறைப்படி தென் ஆப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இணைந்தார். சில ஆண்டுகளில் கட்சியின் மத்தியக் குழுவிற்குத் தேர்வு செய்யப்பட்டார்.

டர்பன் குடியிருப்பு நடவடிக்கைக் குழு, கூட்டு வாடகை நடவடிக்கைக் குழு போன்ற குழுக்களை ஏற்படுத்தி இலா காந்தி சிறுவயதிலேயே போராடியிருக்கிறார்.

“இத்தகைய போராட்டங்கள் தங்களைச் சிறையில் தள்ள வைத்திருக்குமே?” என்பது பற்றி தொலைபேசியில் அவரிடம் நான் கேட்டபோது, “நிறவெறிக்கு எதிராகப் போராடியதற்காக 1973–ஆம் ஆண்டிலிருந்து 9 ஆண்டுகள் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததைப் பற்றிக் கூறினார். கணவர் கட்சியில் இணையவில்லை என்றாலும் போராட்டங்களில் பங்கெடுத்தார்” என்றார். “6 மாதச் சிறைவாசமும் கணவருக்குக் கிடைத்தது. இருவரின் இந்தச் சிறை அனுபவங்கள் தங்களுடைய மூன்று குழந்தைகளையும் வெகுவாகப் பாதித்திருக்கிறது. ஆயினும் அவர்கள் போராட்டங்களை ஆதரிப்பவர்களாகவே வளர்ந்தார்கள்” என்றார்.

“1993–இல் எங்கள் மகன் சந்தேகத்திற்கான முறையில் கொலை செய்யப்பட்டான். நிறவெறி சார்ந்த குற்றச் செயல் என்று அந்த வழக்கு முடிக்கப்பட்டது” என்று வேதனையுடன் தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்க விடுதலைப் போராட்டத்தின் மகத்தான தலைநாயகர் நெல்சன் மண்டேலா, ராபென் தீவுச் சிறையிலிருந்து விடுதலையாவதற்கு ஒருநாள் முன்பாகவும், விடுதலைக்குப் பிறகும் அவரைச் சந்தித்துப் பேசியதை இப்போதும் பெருமிதமாக உணர்வதாக இலா காந்தி கூறுகிறார்.


தோழர் ஜி.ராமகிருஷ்ணன்

இதேபோல, தென் ஆப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் வால்டர் சிஸ்லூ, அதே ராபென் தீவுச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின், அவரையும் சந்தித்துப் பேசியதாகக் கூறினார் இலா காந்தி.

நிறவெறி ஆட்சி ஒழிக்கப்பட்ட பிறகு, ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் இவரை 1994–ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தது. சமூகவெளியில் அதிகப் பணிகள் செய்யவேண்டியிருப்பதாகக் கருதி, பதவிக்காலம் முடிவதற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே 2003–இல் பதவி விலகிவிட்டார்.

இவருக்கு 2 மகன்கள், 3 மகள்கள். ஒரு மகன் கொல்லப்பட்டுவிட்டார். மற்றவர்களும் தானும், தென்ஆப்பிரிக்காவிலேயே வசித்து வருவதாகக் கூறினார். தற்போது 80 வயதாகும் இலா காந்தி, உடல்நிலை சார்ந்த காரணங்களால் கட்சியின் அங்கமாக இருந்து இயக்கப் பணி செய்ய இயலவில்லை என்று தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்ததால், பல உன்னதமான மனிதர்களைச் சந்திக்க முடிந்தது என்றும், அதனால் உலகத்தையும், சமூகத்தையும் புரிந்து கொள்ள முடிந்தது என்றும் பேட்டியில் குறிப்பிட்டார். காந்தி அறக்கட்டளை, பீனிக்ஸ் அறக்கட்டளை ஆகிய இரண்டு அமைப்புகளையும் வழிநடத்துவதில் பிரதான பாத்திரம் வகித்து வருகிறார்.

ஆண்டுதோறும் இந்த அறக்கட்டளைகள், ஆர்.எஸ்.எஸ். கோட்சேவால் படுகொலை செய்யப்பட்ட அண்ணல் காந்தியின் ஜனவரி 30 நினைவு நாளன்று, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தி வருவதாகவும், மதநல்லிணக்கம் உள்ளிட்ட சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கிறார்.

அண்ணல் காந்திஜியின் குடும்பத்தில் ஒரு கம்யூனிஸ்ட் போராளியாக இலா காந்தி இருப்பது பெருமைக்குரியது. தனிமனித சுதந்திரத்தை காந்திஜியின் குடும்பம் எப்படி மதித்துப் போற்றியுள்ளது என்பதுதான் நாம் கவனிக்கத் தக்கதாகும்.” ●

ஆன்மிகம்



திருநின்றவூர்
ஸ்ரீபக்தவத்சலப் பெருமாள் திருக்கோயில்

ஆழ்வார்கள் தேடிச் சென்று பெருமாளைப் பாடியதைக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், பெருமாளே ஓர் ஆழ்வாரைத் தேடிச் சென்று தன்னைப் பாடும்படி கேட்டு கொண்டார். திருநின்றவூர் ஸ்ரீபக்த வத்சலப் பெருமாள் திருக்கோயில் தான் அந்த அதிசயத் திருக்கோயில்.

ஆழ்வார்களில் கடைக்குட்டியாக அவதரித்தவர் ஸ்ரீ திருமங்கையாழ் வார். பெரும்பான்மையான திவ்யதேசங்களிலுள்ள எம் பெருமான்களைத் தேனினு மினிய பாசுரங்களைப் பாடி மங்களாசாஸனம் செய்து வந்தவர் இந்த ஆழ்வார்.



எஸ். ஸ்ரீதுரை

ஆறு பிரபந்தங்களைப் பாடிய திருமங்கையாழ்வார் தொண்டை நாட்டு திவ்யதேசங்களில் ஒன்றான திருநின்றவூருக்குச் சென்றார். அத் திருத்தலத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ என்னைப்பெற்றதாயார் சமேத ஸ்ரீபக்தவத்சலப் பெருமாளைத் தரிசித்தவர் ஏதோ ஒரு காரணத்தால், பாசுரம் எதுவும் பாடி மங்களா சாஸனம் செய்யாமல் கிளம்பி விட்டாராம்.

ஆழ்வார் பாசுரம் கிடைக்காமல், பரிதவித்துப் போன பெருமாளுக்கு ஆறுதல் கூறிய ஸ்ரீ என்னைப் பெற்றதாயார், "இப்பொழுதும் ஒன்றும் நேரம் கடந்துவிடவில்லை. (ஸ்ரீ திருமங்கையாழ்வார்) கிளம்பிச் சென்று சிறிது நேரம் தான் ஆகின்றது. தாங்கள் இப் பொழுதே கிளம்பிச் சென்று கலியனைப் பாடச் சொல்லி பாசுரம் பெற்று வாருங்கள்!" என்று அனுப்பி வைத்தாராம்.

அதன்படியே கிளம்பிச் சென்ற ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள், திருக்கடல் மல்லை என்னும் மாமல்லபுரம் ஸ்ரீ ஸ்தலசயனப் பெருமாள் திருக்



ஸ்ரீ என்னைப்பெற்ற தாயார்

கோயிலில் ஆழ்வாரைப் பிடித்து விட்டார். தம்மைப் பின் தொடர்ந்து வந்து பாசுரம் பாடச் சொல்லிக் கேட்ட ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாளிடம் இரக்கம் கொண்ட ஆழ்வாரும் –

"பூண்டு அவத்தம், பிறர்க்கு அடைந்து தொண்டுபட்டுப் / பொய்ந் நூலை மெய்ந்நூல் என்று என்றும் ஓதி / மாண்டு அவத்தம் போகாதே வம்மின், எந்தை / என் வணங்கப்படு வானை கணங்கள் ஏத்தும் / நீண்ட வத்தை கருமுகிலை எம்மான் தன்னை / நின்றவூர் நித்திலத்தை தொத்தார் சோலைக் / காண்டவத்தைக் கனல் எரிவாய்ப் பெய்வித்தானைக் / கண்டது நான் கடல் மல்லைத் தலசயனத்தே" என்று, திருக்கடல்மல்லை திவ்வியதேசத்தில் திருநின்றவூர்ப் பெருமானைத் தரிசித்ததாகச் சொல்லிப் பாடினார்.

பெருமாள் மனத்திற்குத் திருப்தி தான். ஆனால், ஸ்ரீஎன்னைப்பெற்ற தாயாருக்கு மனசு நிறையவில்லை. "நம் கலியன் ஒவ்வொரு திவ்விய தேசத்துப் பெருமாளையும் பதிகங்களாகப் பாடி மங்களாசாஸனம் செய்கிறான். நீங்களோ இப்படி ஒரே ஒரு பாசுரத்தைப் பெற்றுக்கொண்டு வந்து நிற்கிறீர்களே!" என்று கேட்டாராம். மனைவி பேச்சுக்கு மறுபேச்சு ஏது. மறுபடியும் கிளம்பிவிட்டார் ஸ்ரீபக்தவத்சலப் பெருமாள் ஸ்ரீ திருமங்கையாழ்வாரைத் தேடிக்கொண்டு.

திருநின்றவூர்ப் பெருமாள் ஸ்ரீ திருமங்கையாழ்வாரைத் திருக்கண்ணமங்கை என்னும் திவ்வியதேசத்தில் பிடித்துவிட்டார். அந்த ஊர்ப் பெருமாளின் திருப்பெயரும் ஸ்ரீபக்தவத்சலன் என்பதாலோ என்னவோ, திருமங்கையாழ்வார் மனம் இரங்கி, திருக்கண்ணமங்கைப் பதிகத்தினுள் ஒரு பாசுரத்தில் திருநின்றவூர் ஸ்ரீபக்தவத்சலப் பெருமாளையும் சேர்த்துப் பாடினாராம்.

"ஏற்றினை, இமயத்துள் எம் ஈசனை / இம்மையை மறுமைக்கு மருந்தினை / ஆற்றலை, அண்டத்து அப்புறத்து உய்த்திடும் / ஐயனை, கையில் ஆழி ஒன்று ஏந்திய / கூற்றினை, ஜுருமா மணிக் குன்றினை / நின்றவூர் நின்றனித்திலத் தொத்தினை / காற்றினை, புனலைச் சென்று நாடி / கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே!"

திருநின்றவூர்ப் பெருமாள் தமது ஊருக்குத் திருப்பிச் சென்று கிடைத்த அந்தப்பாசுரத்தையும் காட்ட, ஸ்ரீ என்னைப் பெற்ற தாயாரும் ஒருவாறு திருப்தி அடைந்தாராம்.

வெளுத்துக் கட்டிவிட்டீர்கள்!



கி.வா.ஜ.



குமரிஅனந்தன்

சென்னையில் குமரிஅனந்தனும் கி.வா.ஜ.-வும் கலந்துகொண்ட ஒரு கூட்டம். முதலில் பேசிவிட்டு அமர்ந்தார் குமரிஅனந்தன். பலத்த கைதட்டல்.

அடுத்து பேசவந்த கி.வா.ஜ., "குமரி அனந்தன் அருமையாகப் பேசினார்" என்று பாராட்டிவிட்டு, "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

"வண்ணாரப்பேட்டையிலிருந்து" என்றார் அவர். அதற்கு உடனே கி.வா.ஜ., "அதான் இப்படி வெளுத்துக்கட்டிவிட்டீர்கள்!" என்றபோது, சபையில் கைதட்டல் அடங்க வெகு நேரமாயிற்று.

இந்தத் திருத்தலத்துத் தாயாரின் பெயர் ஸ்ரீ என்னைப்பெற்ற தாயார். இதை விளக்குகிறது திருநின்றவூர்த் தலபுராணம்.

சண்டையில்லாத குடும்பம் ஏது. உலகத்தையை படைத்துக் காத்து ரட்சிக்கும் பெருமாளுக்கும், தாயாருக்கும் இடையே ஒருமுறை மனஸ்தாபம் வந்துவிட்டதால், கோபித்துக் கொண்ட ஸ்ரீமஹாலட்சுமித் தாயார் இத்திருத்தலத்தில் வந்து தங்கிவிட்டதால், இவ்வூருக்குத் "திரு நின்ற ஊர்" (ஸ்ரீமஹாலட்சுமி தங்கிவிட்ட திருத் தலம்) என்ற பெயர் வந்துவிட்டது.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது ஸ்ரீ மஹாலட்சுமி தோன்றியதால், சமுத்திர ராஜன் அவளுக்குத் தகப்பன் முறை ஆகிறது. பெருமாளுக்கும் அவனே மாமனார். இந்த நிலையில், மருமகனுடன் மகளைச் சேர்த்துவைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், திருநின்றவூரில் வந்து தங்கிவிட்ட திருமகளிடம் சென்று, அவளைச் சமாதானப்படுத்த முயற்சித்தான்.

"என்னைப் பெற்ற தாயே, என்னுடன் வா அம்மா! நான் உன்னைப் பெருமாளுடன் மீண்டும் சேர்த்துவைக்கிறேன்" என்று கெஞ்சிக் கொஞ்சி அழைத்தானாம். இதனால் இந்தத் திருத்தலத்துத் தாயாருக்கு "ஸ்ரீ என்னைப்பெற்ற தாயார்" என்ற திருப்பெயர் ஏற்பட்டு அது நிலைத்தும் விட்டது.

சமுத்திரராஜனின் சமாதானத் தூது பலிக்காமல் போனதால், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தானே கிளம்பிவந்து ஸ்ரீ என்னைப்பெற்ற தாயாருடன் இங்கே கோயில் கொண்டு தம்பதி சமேதராகத் தன் பக்தர்களுக்கு அருளுவதால், அவருக்கு ஸ்ரீபக்தவத்சலன் என்ற திருநாமம் உண்டாயிற்று.

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருநின்றவூர் சென்னை மாநகருக்கு அருகில், பட்டாபிராம் என்ற ஊரை அடுத்து அமைந்துள்ளது. விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்த கட்டிடக் கலையில் அமைந்த அழகிய ஐந்துநிலை ராஜகோபுரம் அமைந்துள்ளது. மூலஸ்தானத்திற்கு வலப்புறம் ஸ்ரீ என்னைப்பெற்ற தாயாருடைய சன்னதி இருக்கிறது. சுற்றுப் பிராகாரத்தில் ஆண்டாள், ஆழ்வார்கள், ஆஞ்சநேயர் மற்றும் ஆதிசேஷனுக்கும் சன்னதிகள் உண்டு.


திருமங்கையாழ்வார் – குமுதவல்லி நாச்சியார்

பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். அவருடைய மூலஸ்தான விமானத்திற்கு உத்பலா விமானம் என்று பெயர். ஸ்தலவிருக்ஷம் பாரிஜாதம். தீர்த்தம் வருண புஷ்கரிணி.

இங்குள்ள ஸ்ரீஆதிசேஷனை புதன் கிழமைகளில் வணங்கிப் பால்பாயசம் நைவேத்தியம் செய்து வழிபடுபவர்களுக்கு அவர்களின் ஜாதகத்திலுள்ள சர்ப்பதோஷம் நீங்குவதுடன், திருமணத்தடையும் அகலும்.

பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறும் இத்திருக்கோயிலில் பாஞ்சராத்திர ஆகமம் கடைப்பிடிக்கப்படுகின்றது. அனைத்து வைணவப் பண்டிகைகளும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

•

சொற்களைக் கொண்டாடுவோம்

சொற்கள் சொற்கள் சொற்கள் சொற்கள்

சொற்களைக் கொண்டாடுவோம் –
அற்புதச் சொற்களைக் கொண்டாடுவோம்
உற்பத்தி என்றோ?
இன்றும்
ஊற்றாய்ப் பெருக்கெடுக்கும்
சொற்களைக் கொண்டாடுவோம்

வெற்றாய் இருந்த
ஒற்றை நாக்குக் கொடியை
கற்றைப் பூக்களால்
அலங்கரிப்பவை சொற்கள்

ஒருவரிடம் இருந்து
மற்றவர்க்குத்
தொற்றுவன சொற்கள்

காதலிபோல்... மனத்தைப்
பற்றுவன சுவைச் சொற்கள்
மனைவிபோல் வாழ்க்கை
முற்றுமே வரும் சொற்கள்

அற்புதக் கவிதைகளில்
சொற்களின் உற்சவம்
ஒருவரை அரங்கில்
கொற்றவன் போல்
நிற்க வைப்பவை
சொற்கள்

காலந்தோறும்
தற்கொலை செய்துகொள்ளும்
சில சருகு சொற்கள்!
சில சலவை செய்யப்படும்!
சில பொருள்மாறும்!
சிற்சில பிறப்பெடுக்கும்
புதுப் புதுச்சொற்களாய்

சொற்களைக் கொண்டாடுவோம்
வார்த்தைகள் இல்லாவிட்டால்
வாழ்வதற்கே திண்டாடுவோம்!



கே.ஜி. ராஜேந்திர பாபு



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கன்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
NM
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
micromax nothing like anything
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
CG Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
D by sr printes 9843110277
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2021-23

Date of Publication 28.2. 2021

Regd.No.CB/016/2021-23

OM SAKTHI - MARCH - 2021